COMMUNIST PARTY OF INDIA
24TH PARTY CONGRESS
2022 OCTOBER 14-18
VIJAYAWADA

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது பேராயம்

2022 அக்டோபர் 14, 15, 16, 17, 18
விஜயவாடா, ஆந்திர மாநிலம்

# வரைவு அரசியல் தீர்மானம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வெளியீடு

# வரைவு அரசியல் தீர்மானம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது பேராயம்

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 3 |
| 2. | நாம் வாழும் இந்த உலகு | 5 |
| 3. | நாட்டில் ஏற்பட்ட மாற்றங்களும், விளைவுகளும் | 14 |
| 4. | முக்கியமான பொருளாதார, அரசியல் மாற்றங்கள் | 20 |
| 5. | பொருளாதாரம் குறித்த கண்ணோட்டம் | 38 |
| 6. | மாற்றுப் பொருளாதாரத் திட்டம் | 45 |
| 7. | இந்தியா என்ற கருத்தாக்கத்தின் மீது ஆர்எஸ்எஸ்ஸின் தாக்குதல் | 52 |
| 8 | உருவாகும் அரசியல் சூழ்நிலை | 59 |
| 9 | இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை வலுப்படுத்துதல் | 68 |
| 10 | இடது ஒற்றுமை பற்றி | 70 |
| 11 | ஆர்எஸ்எஸ்/பிஜேபி அரசுக்கு எதிரான தேசபக்த சக்திகளின் பரந்த ஒற்றுமைக்காக | 71 |
| 12 | நமது அரசியல் உத்திகள் | 72 |
| 13 | எதிர்காலப் பணிகள் | 73 |

# வரைவு அரசியல் தீர்மானம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது பேராயம்

## அறிமுகம்

1. கேரள மாநிலத்தில் கொல்லத்தில் 23வது கட்சிப் பேராயம் நடந்ததற்கு பின்பு, தேசிய சர்வதேச சூழல்களில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கட்சிப் பேராயம் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை நடக்க வேண்டும் என்றாலும், கோவிட் 19 பெரும் தொற்று உலகம் முழுக்க பரவியதன் காரணமாக நம்மால் உரிய காலத்தில் நடத்த முடியவில்லை. பெருந்தொற்றால் பொது வாழ்க்கை பாதிக்கப்பட்டதன் காரணமாக ஓராண்டு கழித்து கட்சியின் 24 ஆவது கட்சி பேராயம் இப்போது நடைபெறுகிறது.

2. நமது கட்சியின் கடந்த பேராயத்திற்குப் பின்பு, 2019 மே மாதம் நடந்த தேர்தலில் பிஜேபி கூடுதல் வாக்குகள் பெற்றும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித்தும் ஆட்சிக்கு வந்திருக்கிறது. பிஜேபி, ஆர்எஸ்எஸ்ஸின் அரசியல் கரம் ஆகும். புதுச்சேரியில் நடந்த 22 வது பேராயம், பாரதிய ஜனதா கட்சி மக்களவைத் தேர்தலில் பெரும்பான்மை பெறுவது இந்திய அரசியலில் ஒரு தீர்மானகரமான வலதுசாரி திருப்பம் என்று சரியாகக் கணித்திருந்தது. இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்ததற்குப் பின்பு ஆர்எஸ்எஸ்பிஜேபி கூட்டு, இந்து ராஷ்டிரம் என்ற தனது செயல் திட்டத்தை மிகுந்த மூர்க்கமாக முன் தள்ளி வருகிறது.

3. கடந்த சில ஆண்டுகளாகவே நமது அரசியலமைப்பு சட்டம் வகுத்த நாடாளுமன்ற ஜனநாயகம், பெரும் தாக்குதலைச் சந்தித்து வருகிறது. சிறுபான்மையினர் மிகுந்த பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர். பழங்குடி மக்கள் மற்றும் பெண்கள் மீதான உரிமைகள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகின்றன. அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தி, அதன் நோக்கங்களை அழிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறைந்த, நடுத்தர

வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கை, ஈவிரக்கமற்ற தாக்குதலுக்கு உள்ளாகிறது. விவசாயிகளுக்கு எதிராக, தொழிலாளர்களுக்கு எதிராக இயற்றப்படும் சட்டங்களால், இந்திய நாட்டின் விவசாயிகள், தொழிலாளி வர்க்கத்தை நிறுத்தி மூச்சுத் திணற வைக்கிறார்கள். விவசாயிகளுக்கான மானியம் வெட்டப்படுவது, அவர்களது கடன் திருப்பிச் செலுத்த முடியாத அளவுக்கு உயர்ந்து கொண்டே போவது, கட்டுப்படியான விலை கிடைக்காதது ஆகியவற்றால் இந்திய விவசாயிகள் தற்கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

4. பிஜேபி அரசு, புதிய தாராளமய, அரசு சார்ந்த முதலாளித்துவத்தை தொடர்ச்சியாக முன்தள்ளி வருகிறது. இதனால், மக்கள் தொகையில் ஒரு சதவீதம் பேருக்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் பெருமளவு சொத்துக் குவிப்பு ஏற்பட்டிருக்கிறது. பொருளாதார சமூக வேறுபாடு, அபாயகரமான அளவுக்கு அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. கோவிட்19 பெருந்தொற்றை சரியாகக் கையாளத் தவறியதன் விளைவாக, பல லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் பறிக்கப்பட்டது. நமது சுகாதார உட்கட்டமைப்பு கோவிட் 19 பெரும் தொற்றின் அழுத்தம் காரணமாக வெடித்து உள்ளுக்குள்ளேயே புகைந்து கொண்டிருக்கிறது. உலக அளவில் பட்டினி, வறுமை, கல்வி கற்பதற்கான வாய்ப்பு, பத்திரிக்கை சுதந்திரம் ஆகியவற்றின் குறியீட்டு எண்களில் பெரும் சரிவை இந்தியா சந்தித்திருப்பது மோடி அரசின் தோல்விகளை உறுதிப்படுத்துகிறது. கொள்ளை லாபம் அடிப்பதில் முதலாளித்துவத்துக்கு இருக்கிற தீராத தாகத்தால், நமது நாட்டின் சுற்றுச்சூழல் வெகுவாக பாதிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. இதை அரசு கண்டும் காணாமல் போகிறது. தனது இந்துத்துவ ஆட்சியை நிலை நிறுத்துவதற்கும், இதற்காக மக்களைப் பிளவுபடுத்துவதற்குமான முயற்சிகளை தேசிய அளவில் முழு மூச்சுடன் பிஜேபி மேற்கொள்கிறது.

5. மேற்சொன்னவை எல்லாம் ஏகாதிபத்தியத்தால் செலுத்தப்படும் புதிய பொருளாதார முறைமைகளோடும், உலகம் தழுவிய அளவில் இதனால் ஏற்பட்ட எதிர்மறை விளைவுகளோடும் நேரடியாகச் சம்பந்தப்பட்டவை ஆகும். நம்முடைய எதிர்கால வேலைமுறையை முடிவு செய்யும் முன்பு, இந்த வளர்ச்சிப் போக்குகள் குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

# நாம் வாழும் இந்த உலகு

1. நமது 24 ஆவது கட்சி பேரராயம், ஏகாதிபத்தியத்தின் தாக்குதல், முதலாளித்துவ முறைமையின் ஆழ்ந்த நெருக்கடி, ஏகாதிபத்திய சக்திகளுக்கு உள்ளாக வளரும் முரண்பாடுகள், வெவ்வேறு மண்டல மற்றும் உலக அளவிலான சக்திகள் இடையே ஒன்றுபடுதலும் பிளவுறுதலும், ஆங்காங்கு யுத்தங்கள், ஆக்கிரமிப்பு, அச்சுறுத்தல்கள் மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடுகள் ஆகியவற்றின் மத்தியில் நடந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகள் வளம் பெறுவதற்கான குறியீடாக இல்லை. மாறாக சர்வதேச நிதி மூலதனம், ஆழமான நெருக்கடிக்குள்ளாக உழன்று கொண்டிருப்பதை வெளிப்படுத்துகின்றன.

2. இந்த சிக்கலில் இருந்து விடுபட உலகத்தின் குறுக்கும் நெடுக்குமாக எல்லா வகையான குற்றச் சதியாலோசனைகள், முரண்பாடுகளை ஏகாதிபத்தியம் உருவாக்கி வருகிறது. அதை வெகு நுட்பமாக உலகம் முழுமையிலும் கையாளுவதால், அனைத்து நாடுகளின் மக்களும் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். கொரோனா பெருந்தொற்று 30 கோடி மக்களை வாட்டியது. 50 லட்சம் பேர் உயிரிழந்தார்கள். பெருமளவிலான மனித ஆற்றலை இழந்ததோடு கூடுதலாக, சர்வதேச பொருளாதார சூழலே, குறிப்பாக தனிப்பட்ட நாடுகளின் பொருளாதார சூழல், கடுமையான உலுக்கலுக்கு ஆளானது. அந்த நாடுகளின் மக்கள் அவல நிலைக்கு தள்ளப்பட்டனர். குழந்தைகளின் கல்வி மிகப் பெரும் அளவுக்கு பாதிக்கப்பட்டு விட்டது. யுனெஸ்கோ கூற்றுப்படி உலகம் முழுமையிலும் உள்ள 90 சதவீத குழந்தைகளின் கல்வியில் பாதிப்பு ஏற்பட்டது

3. இந்தக் குழப்பமான சூழ்நிலையை கார்ப்பரேட் மருந்து நிறுவனங்கள் தமக்கு முழு சாதகமாக பயன்படுத்திக் கொண்டன. மக்களுக்கு ஏற்பட்டுவிட்ட இந்த துயரநிலையைப் பயன்படுத்தி கொள்ளை இலாபம் அடித்தன. கொரோனாவுக்கு தடுப்பூசி கண்டுபிடித்த பெரிய ஏகபோக மருந்து நிறுவனங்களை நடத்திய, ஒன்பது பேர் கோடீஸ்வரர்களாக உருவாக்கியுள்ளார்கள்.

4. சீனா, கியூபா, வியட்நாம் போன்ற சோஷலிஸ்ட் அரசுகள் மட்டும்தான், மக்களை மையப்படுத்திய கொள்கைகளை

வகுத்து, அதன் மூலமாக தமது குடிமக்களை பாதுகாத்தன. 2008ல் ஏற்பட்ட உலகப் பொருளாதார பின்னடைவிலிருந்து முதலாளித்துவம் இன்னும் மீள முடியவில்லை. பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துப் பார்த்தும் பெரிய மேம்பாடு ஏதும் கிட்டவில்லை.

5. கொரோனா தொற்றுக்கு முன்பாக உலகத்தின் உற்பத்தி குறியீட்டு வளர்ச்சி விகிதம் 2.8 சதமாக இருந்தது. கொரோனா காலத்தில் உற்பத்தி செயல்பாடு எதுவும் இல்லாததால் 2020ல் இந்தக் குறியீடு மைனஸ் 4.4 சதவீதமாக ஆனது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவை மேற்கொண்ட ஊக்குவிப்பு உதவிகள், சந்தையை ஓரளவு உயிர்ப்பிக்க உதவினாலும், அதனால் நடுத்தர மற்றும் கீழ்த்தட்டு மக்களின் வாழ்க்கையில் எந்த முன்னேற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. எனவே, உலகம் முழுமையிலும் பட்டினியும் வறுமையும் இயல்பாகவே அதிகரித்தன. வேலையின்மை, சம்பள வெட்டு ஆகியவை வளர்ச்சி பெற்ற நாடுகளிலும் கூட முன்னெப்போதும் இல்லாத வகையில் மக்களுக்கு கேடு விளைவித்தன.

6. இந்த நிலையில் யுத்தங்களாலும், ஆயுத மோதல்களாலும் தனது நம்பிக்கைகளை மீட்டெடுக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் முனைந்தது. தனது உலக அளவிலான மேலாதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள, வெவ்வேறு நாடுகளில் முரட்டுத்தனமாக தலையீடு செய்ய பல்வேறு முயற்சிகளை எடுத்தது இதற்கு எடுத்துக்காட்டாகும். முரண்பாடுகளும் நிலையற்ற தன்மையும் கூடுதலாகி, உலகம் முழுமையிலும் ராணுவச் செலவு அதிகரித்து வரும் இந்தக் காலத்தில், ராணுவத்துக்கான ஆயுதங்கள், கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அளப்பரிய லாபத்தை ஈட்டி கொண்டிருக்கின்றன.

7. அண்மைக்காலத்தில் உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகியவற்றுக்கு இடையே நடக்கும் ஆயுதம் தாங்கிய மோதல், அமெரிக்க ஏகாதிபத்தியம் பின்னிருந்து இயக்குவதை நிரூபிக்க சிறந்த உதாரணம். நீண்ட காலமாகவே அமெரிக்கா, வலிமை மிக்க ரஷ்ய மக்களைப் பலவீனப்படுத்துவதற்கு எல்லா வகைகளிலும் முயற்சித்தது. சோவியத் யூனியன் உருக்குலைந்து போனாலும் கூட, ரஷ்யச் சந்தையை அமெரிக்காவால் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. எனவே, ரஷ்யக் கூட்டமைப்பின் அரசியல் பொருளாதார

அடிப்படைகளை அழித்து ஒழிப்பதற்கு உக்ரைனை தனது கருவியாக அமெரிக்கா பயன்படுத்திக் கொண்டது.

8. நேட்டோ கூட்டணியோடு இணைந்துக் கொள்ளவேண்டும் என உக்ரைனுக்கு கடும் அழுத்தம் கொடுத்து, ரஷ்யாவுக்கு எதிரான ஒரு யுத்தத்திற்கான திட்டத்தை அமெரிக்கா வடிவமைத்தது. ஐக்கிய நாடுகள் உக்ரைனைத் தூண்டி, ரஷ்ய எல்லைக்கு செல்லுமாறு நிர்பந்தித்தது; அது நிறைவேற்றப்படுவதை கண்காணித்தது. ஐரோப்பிய யூனியனும், இந்த தீவிர பகட்டு தேசியவாத குற்றத்தில் ஒரு கூட்டாளியாகும். அவர்கள் அனைவரும் இணைந்து ரஷ்யாவை மண்டியிடச் செய்து அதன் மூலம் அமெரிக்காவின் மேலாதிக்கத்தின் கீழான ஒரு துருவ உலகை மீண்டும் நிறுவுவதற்கு முயற்சித்தார்கள்.

9. ரஷ்ய உக்ரைன் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். போரை நிறுத்துவதோடு ஒரு நீண்ட காலம் நீடிக்கிற அமைதியை உருவாக்குவதற்கான வேலைகளை செய்ய வேண்டும் என்பது சர்வதேச சமூகத்தின் கோரிக்கையாக உள்ளது. அதோடு அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படக்கூடிய ஆபத்து நிறைந்திருக்கிறது. நேட்டோ அணு கூட்டணியும் ரஷ்யாவும் இந்த ஆயுதங்களை காட்டி அச்சுறுத்துகின்றன. அவ்வாறு ஏதும் நிகழ்ந்தால் அது உலகப் பேரழிவில் முடியும்.

10. போரை நிறுத்தவும் நிரந்தர அமைதியை உருவாக்கவும் பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. துருக்கி அதிபரின் முன் முயற்சியினால் ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் போரை முடிவுக்கு கொண்டு வர வழிகள் பற்றி பேசுவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய யூனியனின் அழுத்தத்துக்கு ஆட்பட்டு உள்ள உக்ரைன், அதிலிருந்து விடுபட முடியாமல், கடைசியில் இந்த பேச்சு வார்த்தைகளில் இருந்து விலகி விட்டது

11. அண்மையில் நடந்த உச்சி மாநாட்டின் போது, ரஷ்ய எல்லையில் இருக்கும் ஸ்வீடன், பின்லாந்து ஆகிய நாடுகளை தனது உறுப்பினராக நேட்டோ சேர்த்துக் கொண்டது. எந்த வழியை கையாண்டும் ஆசியாவை பலவீனப்படுத்த வேண்டும் என்று பகிரங்கமாக அறிவித்துள்ள நேட்டோ, மூன்று லட்சம் படை வீரர்களை ரஷ்ய எல்லைக்கு அனுப்ப முடிவு

செய்திருக்கிறது. இதன் மூலம் ரஷ்யா உக்ரைன் இடையே நடந்த போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டது. ரஷ்யாவை பலவீனம் அடைய செய்ய வேண்டும் என்ற தமது இலக்கை நிறைவேற்றும் வரை இந்த யுத்தம் தொடர்ந்து நடக்க வேண்டும் என அமெரிக்காவும் நேட்டோவும் விரும்புகின்றன.

12. ரஷ்யா உக்ரைன் இடையிலான போர் ஐரோப்பாவின் மீது வெளிப்படையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ரஷ்யாவில் எண்ணெய், எரிவாயு போன்றவற்றை வாங்கக் கூடாது என ஐரோப்பிய யூனியன் விதித்த எல்லையற்ற கட்டுப்பாடுகளின் காரணமாக இப்போது ஐரோப்பா தான் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு பணம் வீக்கம் அதிகரித்து, எண்ணெய், எரிவாயு உட்பட அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலையும் கடுமையாக அதிகரித்து இருக்கிறது. மேலும், உக்ரைனிலிருந்து வெளியேறி வந்த அகதிகளால் பொருளாதார சிக்கல் மட்டுமின்றி அரசியல் சிக்கலும் ஏற்பட்டுள்ளது. ஐரோப்பிய யூனியன் உறுப்பினர்கள் இடையே இருப்பதாகச் சொல்லப்பட்ட ‘இரும்பு ஒற்றுமை’, இப்போது நடுங்கி கொண்டிருக்கிறது.

13. இந்த ஆயுதம் தாங்கிய மோதல், சர்வதேச சட்டத்திற்கு விரோதமாக விலகிச் செல்லும் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், நேட்டோ ஆகியவற்றின் இரட்டை நாக்குக் கொள்கையை அம்பலப்படுத்தி விட்டது. ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள், இந்த மூன்று அமைப்புகளின் உத்தரவால் தாக்கப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டன என்பதற்கு சான்றுகளாக நிற்கின்றன. ஐஎஸ்ஐஎஸ் மற்றும் இதர பயங்கரவாத அமைப்புகளுக்கு உதவி செய்து சிரியாவில் நுழைவதற்கும், பாலஸ்தீனிய நிலத்தில் இஸ்ரேல் நுழைந்து ஆக்கிரமிப்பதற்கும் மனிதத்தன்மையே இல்லாமல் ஆதரவு கொடுத்து வருகிறது. இவை ஐக்கிய நாடுகள் அவையின் வழிகாட்டுதல்கள் மற்றும் தடைகளை மீறுவதாகும். இவை இன்று மேற்கு ஆசியா முழுவதையும் அபாய நிலைக்கு தள்ளி இருக்கின்றன

14. லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் கூட, ஆட்சிக் கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்துகின்றன. துவக்கத்தில் அமெரிக்காவும் அதன் எடுபிடிகளும் பொலிவியாவில் ஒரு பொம்மை அரசை நிறுவினர்; அது வெற்றி பெறவில்லை. சோசயலிசத்துக்கான இயக்கம் (Movement for Socialism- MAS) வலிமை பெற்றது.

இடதுசாரிகள் மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறார்கள். கியூபா நாட்டிலும் கூட மிகத் திட்டமிட்டு போராட்டங்களை நடத்துவதன் மூலம், கியூப கம்யூனிஸ்ட் ஆட்சியை சீர்குலைக்க அமெரிக்கா முயற்சித்தது. ஆனால், முழு திட்டமும் படுதோல்வி அடைந்தது. கியூப அரசுக்கும், கியூபப் புரட்சிக்கும் வெகு மக்களிடையே உள்ள ஆதரவு, அமெரிக்காவின் அசிங்கம் பிடித்த நோக்கங்களை உருக்குலைத்து விட்டது. இப்போதும் கூட கியூபா மீது பொருளாதார முற்றுகை என்ற குற்றவியல் நடவடிக்கை தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. கியூப மக்களின் தினசரி வாழ்க்கையில் ஏதாவது ஒரு பிரச்சினையை எழுப்ப அமெரிக்கா முயற்சித்துக் கொண்டே இருக்கிறது. ஆனால், அரசின் மீதான தமது நம்பிக்கையை மக்கள் கைவிடவே இல்லை. வெனிசுவேலா, நிகராகுவா நாடுகளிலும் கூட, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் ஒவ்வொரு நாளும் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். மற்ற லத்தீன் அமெரிக்க நாடுகளான சிலி, கொலம்பியா ஆகியவை அமெரிக்காவின் அச்சுறுத்தல்களையும் மீறி, ஒரு ஜனநாயகத் தன்மை வாய்ந்த ஆட்சி அமைப்புக்கு சென்று இருக்கின்றன. அவற்றின் மக்கள் பெருவாரியாக வாக்களித்து இடதுசாரிகளை ஆட்சியில் அமர்த்தி இருக்கிறார்கள். அண்மையில் பிரான்சில் நடந்த தேர்தலில் கூட, இடதுசாரி கூட்டணி முத்திரை பதிக்கும் வெற்றிகளைப் பெற்றிருக்கிறது.

15. வளைகுடா மற்றும் அரபு நாடுகளில் ஆட்சியாளர்களுக்கும் இனவெறி இஸ்ரேலுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புதிய கூட்டு மிகவும் அச்சுறுத்தலானது ஆகும். மத்திய கிழக்குப் பகுதி ஏற்கனவே அமைதி இழந்து நிற்கிறது. இந்நிலையில் பாலஸ்தீனிய மக்களின் வாழ்க்கை அபாயத்துக்குள்ளாகும். பெரும்பான்மையான அரபு நாடுகள் தமது குறுகிய அரசியல் மற்றும் பொருளாதார நலன்களுக்காக, சொந்த நாட்டுக்காக நடத்தப்படும் பாலஸ்தீனிய போராட்டத்தைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. கடந்த ஆறு ஆண்டுகளாக ஏமன் நாட்டில் நடந்து வரும் யுத்தம் உலகின் மிகப்பெரிய மனிதநேயச் சிக்கலாக உள்ளது. சுமார் 2 கோடி மக்கள் உடனடி உணவு உதவி பெற ஏங்கி நிற்கிறார்கள். இதுவரையில் 19 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அமெரிக்க உள்ளிட்ட நாடுகளின் அச்சுறுத்தல்கள் எல்லாவற்றையும் வென்று, சிரியா நாடு அரசியல் நிலைத் தன்மையோடு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. எனினும்

அதன் மீது வெவ்வேறு வகையான அதிகார மையங்களின் அச்சுறுத்தல்கள் இன்னும் நீடிக்கின்றன.

16. அண்மையில் இந்தியா இஸ்ரேல் ஐக்கிய அமீரகம் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவை சேர்ந்து உருவாக்கியிருக்கிற ஐ2யூ2 கட்டமைப்பு ஈரான் நாட்டைக் குறி வைக்கிறது. இது அந்த பகுதியில் மேலும் முரண்பாடுகளை உருவாக்கும்.

17. மாபெரும் சக்திகளில் அதிகாரப் போராட்டம் நடக்கும் மேடையாக ஆப்பிரிக்க கண்டம் உள்ளது. 'ஆஃப்ரிகாம்' மூலமாக ஏற்கனவே அமெரிக்கா தனது ராணுவ இருப்பை அதிகரித்துள்ளது. பிரெஞ்சு படையும் அங்கு உண்டு. இப்போது ரஷ்யாவும் தனது படைபலத்தை அங்கு பெருக்குகிறது. சில இடங்களில் பிரெஞ்சு ராணுவம் இருந்த பகுதிகளுக்கு, அவற்றுக்கு பதிலாக ரஷ்ய இராணுவம் செல்கிறது. சாட் ஒரு அண்மைய உதாரணமாகும். நைஜீரியா, சாட், மொஸாம்பிக் நாடுகளில் வளர்ந்து வரும் இஸ்லாமிய தீவிரவாதம் அழிவு தரும் விளைவுகளை தோற்றுவிக்கும்.

18. ஆசியாவில், இந்தியா, சீனா, பாகிஸ்தான், கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு ஆகியவை அணு ஆற்றல் பெற்ற நாடுகள் ஆகும். இந்த மண்டலத்தில் மேலும் மேலும் பிரச்சினை சிக்கலாகிச் செல்கிறது. சீனாவை அனைத்து வகைகளிலும் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும் என்று விரும்பும் அமெரிக்கா, AUKUS,QUOAD போன்ற பல ராணுவ அமைப்புகளை உருவாக்குகிறது. மேலும், 'திறந்த, உள்ளடங்கிய, விதிகளின் அடிப்படையில் இந்தோ பசிஃபிக் மண்டலம்' என்ற பெயரில் தனது ராணுவதளங்களை விரிவுபடுத்தி தனது படையை கொண்டு சென்று குவிக்கிறது. இந்த மண்டலத்தில் உள்நுழைக்கப்படும் முரண்பாடுகளால், வெவ்வேறு நாடுகளிடையே பிரச்சினை ஒரு போருக்கான வடிவத்தை எடுக்கலாம். இந்தியா-சீனா, இந்தியா-பாகிஸ்தான், வட கொரியா-தென் கொரியா, சீனா-தைவான், ஜப்பான்-சீனா, ரஷ்யா என பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இவை எந்த நேரமும் உரசி தீப்பற்றக் கூடியவை. ஆப்கானிஸ்தானில் தாலிபான்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி இருப்பதும் கவனிக்க வேண்டியதாகும்.

19. ஆப்கானிஸ்தானில் தாலிபான்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி இருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அங்கு ஒரு கேலிக்கிடமான தோல்வியை அமெரிக்கா பெற்றது. புதிய அரசு ஏற்கனவே 1990ல் தாலிபான் ஆட்சி கடைப்பிடித்த கொள்கைகளையே தொடர்கிறது. ஆப்கானிஸ்தான் இயற்கை

வளங்களை அபரிமிதமாக கொண்ட நாடு மட்டுமல்ல புவி வரைபடத்தில் அது மிகவும் மையமான இடத்தில் இருக்கிறது. அது தெற்காசியாவையும், ஐரோப்பாவையும் தரை வழியாக மத்திய ஆசியாவுடன் சேர்ந்து இணைக்கிறது. உலக மற்றும் மண்டல அரசியலில் ஆப்கானிஸ்தானின் முக்கியப் பங்கை அலட்சியப்படுத்த முடியாது. எனவே, அது, இந்தப் பகுதியின் அமைதியையும் நிலைத்தன்மையையும் பாதிக்கிற பயங்கரவாத குழுக்களின் சொர்க்க பூமியாக மாற்றப்படுவதை அனுமதிக்க இயலாது

20. ரோகிங்கியா நெருக்கடியும் அராஜகத்தின் பிடியில் மியான்மர் விழுந்ததும், அங்கு தொடர்ந்து நிலவிய வகுப்புவாத பதட்ட நிலை, கொடூரமான கூட்டுக் கொலைகள், அந்த மண்டலத்தில் ஏற்பட்ட வகுப்புவாதப் பிளவு ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டவையாகும். மேலும், அதிகமான மக்கள் வெளியேறியதால் ஏற்பட்ட அகதிகள் நெருக்கடி, தகாத வழியில் ராணுவம் அதிகாரத்தை கைப்பற்றியது ஆகியவையும் கவனம் செலுத்தப்பட வேண்டிய அம்சங்கள் ஆகும்.

21. பாகிஸ்தான், ஸ்ரீலங்கா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி கொஞ்சம் கொஞ்சமாக முற்றி ஆழ்ந்த அரசியல் நெருக்கடியாக மாறிக் கொண்டுள்ளன. மக்களின் வெகு முக்கிய கோரிக்கைகளை கேட்க மறுத்து, அரசு அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விடுவதால். இந்த நாடுகளில் அந்நிய தலையீடு ஏற்பட வழியமைக்கிறது. உலக அரசியல் சிக்கலை மேலும் கூர்மையாக்குகிறது.

22. உலகம் முழுமையிலும் உள்ள, வளர்ச்சி அடைகிற வலதுசாரி சக்திகள், தமது ஒரு கையில் மதவெறி, அதிதீவிர தேசியவாதம். சிறுபான்மையினர் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவின் மீதான வெறுப்பு ஆகியவற்றை வைத்திருக்கின்றன. இன்னொரு புறம் வரலாற்றை திருத்தி எழுதி, கம்யூனிஸ்ட் எதிர்ப்பு பிரச்சாரத்தை ஊக்குவிக்கின்றன. இவை உலக முழுமையிலும் வலதுசாரி சக்திகளின் பொது உத்தியாக உள்ளன. இடதுசாரி ஜனநாயக சக்திகளின் மீதான கூர்மையான தாக்குதல் முழு வீச்சில் நடந்து கொண்டிருக்கிறது.

23. இப்போது விரிவடைந்துள்ள தகவல் தொடர்புகளை தன்வயப் படுத்தி, மக்களின் இயக்கங்களையும் கிளர்ச்சிகளையும் வெளியில் தெரியாமல் ஏகாதிபத்தியவாதிகள் மறைக்கிறார்கள்.

அறிவியல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொடர்பு ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள பிரம்மாண்டமான வளர்ச்சியை பயன்படுத்தி எதிர்க்கட்சிகளின் தலைவர்களை, ஜனநாயக இயக்கங்களின் அமைப்பாளர்களை உளவு பார்க்கிறார்கள். இந்த அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை மூலதனம் தன் கைவசப்படுத்தி இருக்கிறது. இந்த கண்டுபிடிப்புகள் தொழிலாளி வர்க்க மற்றும் இதர தொழிலாளர் சக்திகளுக்கு எதிராக முழுத் திறனில் பயன்படுத்தப் படுகிறது.

24. மண்டல அளவிலான பாதுகாப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு கருதி புதிதாக உதயமாகும் மண்டல சக்திகளும் அவற்றுக்கிடையிலான ஒத்துழைப்பும், பல்வேறு துறைகளில் ஏற்படும் பரஸ்பர புரிதலும், சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஏற்கனவே ஈர்த்திருக்கின்றன. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா நாடுகள் இணைந்த பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு, ஷாங்காய் ஒத்துழைப்பு கழகம் (SCO), அமெரிக்க மக்களுக்கான பொலிவிய கூட்டு மக்கள் வணிக ஒப்பந்தம்(ALBA-TCP) போன்றவை, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சுயநலத் திட்டங்களுக்கு எதிரான சவாலாக உருவெடுத்துள்ளன.

25. உலகம் முழுமையிலும், புதிய தாராளமய பொருளாதாரத் தாக்குதல்கள், அனைத்து விதமான சுரண்டல்களுக்கும் எதிராக, மனித உரிமை மற்றும் ஜனநாயக உரிமைகளுக்காக, பெண்கள் உரிமைக்காக, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக, நல்ல கல்வி கோரி, வேலையின்மைக்கு எதிராக, போர்களுக்கும் ஆக்கிரமிப்புகளுக்கும் எதிராக, சம வாய்ப்புள்ள அமைதியான உலக முறைமைக்காக, மனிதத் தன்மையற்ற தடைகளுக்கு எதிராக தொடர்ந்து பிரபலமான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றின் வெற்றிப் பட்டியல் நீளமானது. அண்மையில் சிலி நாட்டில் ஏற்பட்ட மாற்றம் நல்ல எடுத்துக்காட்டாகும்

26. முதலாளித்துவ நாடுகள் பெரும் நெருக்கடிக்குள் சிக்கி இருக்கும்போது, சீனா, வியட்நாம், கியூபா, லாவோஸ், கொரிய மக்கள் ஜனநாயக குடியரசு உள்ளிட்ட சோசலிச, மக்கள் ஜனநாயக நாடுகள் பல தடைகளை எதிர்த்தும் வளர்ச்சி காண்பது ஊக்கமூட்டுவதாக உள்ளது.

27. சீனா கடந்த 70 ஆண்டுகளாக ஏகாதிபத்திய முகாமில் இருந்து தொடர்ச்சியான தாக்குதல்களையும், தடைகளையும் எதிர்கொண்டது. ஆனால், மிக வெற்றிகரமாக தன்னுடைய தேசிய வரைபடத்தில் இருந்து வறுமையை அழித்தொழித்திருக்கிறது. மிக அதிக மக்கள்தொகை கொண்ட, பெரும் நிலப்பரப்பு கொண்ட நாடாக இருந்தும் கூட, அதன் மொத்த உற்பத்தி வளர்ச்சியில் உலக சாதனை செய்திருக்கிறது. தனது மக்கள் சமூகத்தை, ஒப்பீட்டளவில் வளம் மிக்கதாகவும், கண்ணியமான வாழ்க்கை தரம் கொண்டதாகவும் மாற்றியமைத்து இருக்கிறது. வியட்நாம் நாடு கூட பொருளாதாரம் சமூக மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் முன்னேறி பல்வேறு முனைகளில் சாதனை புரிந்துள்ளது. அதன் ஐந்தாண்டு உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு 6.5லிருந்து 7 சதவீதம் வரை சென்று இருக்கிறது.

28. ஸ்ரீலங்காவின் பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடியாக மாறியது. பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை முழுமையும் மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக பதவி விலக நேரிட்டது. இனவாத தேசியம், சர்வாதிகாரம், அதிகாரத்தை மையப்படுத்தி குவிப்பது போன்ற, அந்த நாட்டில் ஏற்பட்ட ஆட்சி கொள்கைத் திருப்பங்கள், அந்த நாட்டுக்குப் பேரழிவைத் தேடித் தந்ததோடு, மீட்க முடியாத நிலையில் கொண்டு தள்ளி இருக்கின்றன. பிரதமர் பொறுப்பில் இருந்தவர் நாட்டில் இருந்து தப்பி ஓடிய பிறகு, நெருக்கடியை சமாளிப்பதற்காக புதிய அதிபரும் புதிய பிரதமரும் பொறுப்பேற்றுள்ளனர். ஜனநாயக வழிபட்ட மக்களின் குரலை படைகளை கொண்டு அடக்கி நசுக்குவதை இப்போதும் தன் வழிமுறையாக அரசு கடைபிடிக்கிறது. எனவே, அரசியல் நிலையற்ற தன்மையும் கட்டமைப்பும் சிதைந்து இந்த தீவு நாடு தொடர்ந்து நோய்வாய் பட்டு இருக்கிறது.

29. சர்வதேச சூழல் கடும் சிக்கல் நிறைந்ததாகவும், நமது நாட்டின் மக்கள் பிஜேபி/என்டிஏ அரசின் தாக்குதலுக்கு ஆளாகியும் உள்ள பின்னணியில், விஜயவாடாவில் நமது 24 ஆவது கட்சிப் பேராயம் நடக்கிறது.

# நாட்டில் ஏற்பட்ட மாற்றங்களும், விளைவுகளும்

## கோவிட்19 பெருந்தொற்றும் அதன் தாக்கங்களும்

1. உலகம் முழுமையிலும் கோவிட்19 பெருந்தொற்று பேரழிவை ஏற்படுத்தியது. குறிப்பாக ஏழை நாடுகளின் மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். பெரும் வளர்ச்சி அடைந்து விட்டதாக சில வளர்முக நாடுகளின் அரசுகள் மார்தட்டிக் கொண்டாலும், மருந்துகளை வாங்க முடியாமலும், ஆக்சிஜன் உள்ளிட்ட பொருள்கள் கிடைக்காமலும் ஏராளமான மக்கள் உயிரிழந்தனர். உலகம் முழுக்க 52 கோடி மக்கள் பாதிக்கப்பட்டனர்; 63 லட்சம் பேர் உயிரிழந்தனர். கோவிட் 19, மனிதகுலம் முன்னெப்போதும் கண்டிராத பெரும் நெருக்கடி ஆகும். ஜனநாயகத்தையும், சமத்துவத்தையும் போதித்து கொண்டிருக்கும் இந்த உலகம், எத்தகைய படிநிலைகளைக் கொண்டதாக இருக்கிறது என்பதை இந்த நெருக்கடி அப்பட்டமாகத் தோலுரித்தது. மக்களின் உடல் நலத் துறையை தனியார் மயமாக்கிவிட்ட நாடுகள், இந்த நெருக்கடியைக் கையாளவே முடியாமல் முற்றிலுமாகத் தோற்றுப் போயின. மக்கள் உடல் நலம் போன்ற அவசிய துறைகளில், பேராசை கொண்ட தனியார் முதலாளிகள், ஒருபோதும் அரசாங்கத்துக்கு மாற்றாக முடியாது என்பதை இந்த நெருக்கடி நிரூபித்தது. மேற்கத்திய உலகின் தலைவரான அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உடல் நலக் கட்டமைப்பு மிகப் பெருமளவில் தனியாரிடம் விடப்பட்டது. இந்த நெருக்கடியை தாளமுடியாமல், அந்தக் கட்டமைப்பு உள்ளுக்குள்ளாகவே குமைந்து போயின. அமெரிக்காவில் 8.33 கோடி மக்கள், கோவிட்19 தாக்குதலுக்கு ஆளாகினர்; அதில் 10 லட்சம் பேர் உயிரிழந்தனர் என அமெரிக்க அரசின் அதிகாரப்பூர்வமான புள்ளி விவரம் கூறுகிறது. கியூபா, வியட்நாம் போன்ற சோசலிச நாடுகளும், மக்கள் உடல் நலத் துறையை அரசாங்கமே கையில் வைத்துள்ள நாடுகளும், தமது மக்களுக்கு உதவியதோடு மட்டுமின்றி, வேறு நாடுகளின் மக்களையும் பேராபத்திலிருந்து காப்பாற்றின.

2. இந்திய மக்களை கோவிட் சிக்கலில் இருந்து காப்பாற்ற முடியாமல் மோடி அரசு முழுமையாகத் தோல்வி அடைந்தது. கோவிட் பாதிப்பு தெரியத் தொடங்கியதுமே செயல்படாமல் முடங்கியது, நோய் வேகமெடுத்து விரைந்து பரவுவதற்கு வழி வகுத்தது. பிறகு, என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை

பற்றிய ஆலோசனையே இல்லாமல், அவசரகதியில் முடிவு எடுத்து முழுமையான பொது முடக்கத்தை நரேந்திர மோடி அறிவித்தார். பொருத்தமற்ற, பரிசீலனையே இல்லாத இந்த முடிவால் நாட்டு மக்களின் வாழ்க்கை திடீர் நிறுத்தத்துக்கு வந்தது. போக்குவரத்து இல்லாததால், லட்சக்கணக்கான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சுட்டெரிக்கும் சூரிய வெப்பத்தில், தமது இருப்பிடத்தை நோக்கி ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தூரம் கால்நடையாக செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தவறாக கையாண்டதன் விளைவாக நோயினால் மட்டுமின்றி, பட்டினி பசியாலும், வறுமையாலும், கைவிடப்பட்டதாலும், துயரங்களாலும் ஏராளமான சாவுகள் ஏற்பட்டன. கடும் துயரங்களுக்கு ஆட்பட்டு தமது சொந்த ஊருக்குச் சென்றவர்கள், மீண்டும் வேலைக்குத் திரும்பத் தயாராக இல்லை. இன்னொரு முறை முழு முடக்கத்தை அரசு அறிவித்தால் என்ன செய்வது என அஞ்சினர். இதனால் வேலையின்மை 25% என்ற உச்சத்துக்குச் சென்றது. உற்பத்தியில் தொழிலாளர் பங்கேற்பு இல்லாததன் தொடர்ச்சியாக ஏற்பட்ட பாதிப்பிலிருந்து இந்திய பொருளாதாரம் இன்னும் மீளவில்லை.

3. கொரோனாவின் இரண்டாவது அலை நாடு முழுவதும் கடும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்திய உடல்நலத் துறையின் உள் கட்டமைப்பு எவ்வளவு போதாமையோடு இருக்கிறது என்பதை வெளிப்படுத்தியது. சில பத்து ஆண்டுகளாகவே மக்கள் உடல்நலத் துறையை அரசின் கைகளில் இருந்து தனியாருக்கு மாற்றியதால், ஏற்பட்ட விளைவு இது. இரண்டாவது அலையில் தினம் தோறும் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கையில் இந்தியா உலகத்திலேயே முன்னணியில் இருந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆக்சிஜன் மற்றும் அத்தியாவசிய மருந்துகள் கிடைக்காததால் மடிந்தனர். மருத்துவமனைகளில் படுக்கைகளே இல்லை என்ற நிலை வந்தது. உயிரிழந்தவர்களை அடக்கம் செய்யும் செலவை கூட செய்ய முடியாத நிலையில், உயிரிழந்தவர்களின் உடல்கள் கங்கை ஆற்றில் இழுத்து விடப்பட்டன. கங்கையில் மிதந்த பல்லாயிரக்கணக்கான உடல்கள், இந்திய பொருளாதாரத்தில் ஏழை எளியவரின் வாழ்க்கை எந்த அளவுக்கு வஞ்சிக்கப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தின. இரண்டாவது அலையின் காரணமாக ஒரு கோடி மக்களுக்கும் அதிகமானவர்கள் வேலை இழந்தனர். 97 சதவீத குடும்பங்களின் வருமானம் வெகுவாகக் குறைந்து விட்டது. கையறு நிலையில் உள்ள இந்திய மக்களுக்கு, நிதி நிவாரணம் தர வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இதர பல எதிர்க்கட்சிகளும் இந்திய அரசிடம் முன்வைத்த கோரிக்கை, கேளாத காதில் ஊதிய சங்காகிப் போனது.

4. கொரோனா தடுப்பூசி வழங்குவதில் ஏராளமான குளறுபடிகள் ஏற்பட்டன. புதிய பொருளாதார 'செட்டப்'பில், தடுப்பூசிகள் மேற்கு உலகுக்கு கிடைத்த அளவுக்கு ஆசியா ஆப்பிரிக்க நாடுகளின் மக்களுக்கு கிடைக்கவில்லை. இந்தியாவிலும் கூட போதிய அளவுக்கு தடுப்பூசிகளை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதை உறுதி செய்வதற்கு பதிலாக, அவற்றை உற்பத்தி செய்த நிறுவனங்கள் கொள்ளை லாபம் அடிப்பதற்கு ஏற்ற வகையில் இந்திய அரசு செயல்பட்டது. வெவ்வேறு வகையிலான தடுப்பூசிகளுக்கு வெவ்வேறு வகையான விலைப்பட்டியலை அரசு அறிவித்தது. மக்களின் நலன்களை விட கார்ப்பரேட்டுகளின் நலன்கள் மோடி அரசுக்கு பெரிதாகப்படுகிறது. நமது நாட்டில் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட தடுப்பூசிகளிலும் பிரச்சினை வந்தது. வெளிநாடுகள் இந்த தடுப்பூசிகளை முழுமையாக அல்லது சரிபாதியாக ஏற்க மறுத்தார்கள். இந்தியாவில் உள்ள மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கும் வெளிநாட்டு அரசுகளுக்கும் ஏற்பட்ட மோசமான நிழல் ஒப்பந்தங்களே இதற்கு காரணமாகும். இதனால் பிரேசில் அதிபர் ஜெயிர் போல்சொனரோவை எதிர்த்து அங்கு பெரும் மக்கள் எழுச்சி ஏற்பட்டது. இதோடு கூட விஞ்ஞான புரிதல் எதுவும் இல்லாமல் இந்த நோயை பற்றி ஏராளமான மூடநம்பிக்கைகளும் கட்டுக் கதைகளும் சுற்றி வந்தன.

5. நமது கட்சி மற்றும் வெகு மக்கள் அரங்கங்களின் வேலைகள், இந்தப் பெருந்தொற்றால் பெருமளவு பாதிக்கப்பட்டன. தொற்றுக்கு பின்னால் மீண்டும் வேலை தொடங்கியுள்ளது. இந்த கொடூர நோய் நமது அர்ப்பணிப்பு மிக்க, மதிப்புமிக்க தோழர்கள் பலரை பறித்துச் சென்று விட்டது. கேரளாவில் பெருமளவு நோய்த் தொற்று பாதிப்பு இருந்த போதிலும் கூட, இடதுசாரி ஜனநாயக அரசு பெருந்தொற்றைத் திறமையாக கையாண்டது. மேலும், பக்கத்தில் உள்ள கர்நாடகா, கோவா மாநிலங்களுக்கு கூட ஆக்ஸிஜன் உருளைகளை அனுப்பி வைத்தது. எங்கெல்லாம் சாத்தியப்பட்டதோ அங்கெல்லாம் நமது தோழர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். கடுமையான நெருக்கடியில் இருந்த மக்களுக்கு உதவி இருக்கிறார்கள். மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள் உள்ளிட்ட மருத்துவத் துறையினர் ஆற்றிய சேவை போற்றத்தக்கதாகும். ஆஷா தொழிலாளர்கள் தமது பணிக்காக உலக அளவிலான பாராட்டுப் பெற்றிருக்கிறார்கள்

6. கோவிட் 19 நெருக்கடியானது, உலகம் முழுவதிலும், மக்களுக்கு ஆதரவான, எப்போதும் தொடர்ந்து நீடிக்கிற ஒரே அரசியல் சக்தி இடதுசாரிகள் தான் என்பதை ஐயமற நிரூபித்திருக்கிறது. வலதுசாரிகளின் கொள்கை லாபத்தை இலக்காகக் கொண்டதாகவும்,

பேராசை மிக்கதாகவும் இருந்தபோது, இடதுசாரி சக்திகளும் இடதுசாரி அரசுகளும் மக்களுக்கு தன்னலமற்று பணி புரிந்தன. கேரளத்தில் இந்த பெரும் தொற்றை திறன்மிக்க வகையில் எதிர்கொள்ள அரசு கட்டமைப்பு மாற்றி அமைக்கப்பட்டது. அதன் வெற்றி நாடு முழுமையும் மட்டுமின்றி, சர்வதேச அரங்கங்களிலும் பாராட்டப்பட்டுள்ளது. கேரளா அரசின் வருவாய்த்துறை விவசாயத்துறை உணவு மற்றும் குடிமை பொருள் வளங்கள் துறை ஆகியவற்றில் நமது கட்சி அமைச்சர்கள் பணி புரிகிறார்கள். பெருந்தொற்று காலத்தில் அதை எதிர்த்து போராட மிகப் பெரும் பங்களிப்பை இத்துறைகள் செய்தன. வருவாய் துறை அமைச்சகத்தின் கீழ், பேரழிவு மேலாளுகைத் துறை இரவும் பகலும் பணிபுரிந்து பெருந்தொற்றின் தாக்குதலில் இருந்து மக்களைப் பாதுகாத்தது. உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கும் அமைச்சகம் பொது முடக்க காலத்தில் ஒரு மனிதர் கூட பட்டினி கிடந்து பாதித்துவிடாமல் இருப்பதை உறுதி செய்தது. பெருந்தொற்று உச்சத்தில் இருந்த போதும், விளைந்த தானியங்களைக் கொள்முதல் செய்வதும், மாநில முழுமையிலும் பொது சமையல் கூடங்களை அமைத்து, அவற்றுக்கு தானியங்களை வழங்கியும் விவசாயத்துறை பெரும் பணியாற்றியது.

## **புதிய தாராளமயத்தின் தாக்குதல்கள்**

7. கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக புதிய தாராளமய கொள்கைகளையும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகளையும் பார்த்து வருகிறோம். தாராளமய தனியார்மய உலகமயமாக்கல் கொள்கை 1990ல் அறிமுகப்படுத்தப் பட்டது. இது மக்களின் வருமானம் மற்றும் வாய்ப்புகளில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தி, முன்பு பார்த்திராத சமமற்ற தன்மையை உருவாக்கி விட்டது. உயர் நிலையில் உள்ள மிகச் சிலருக்கு ஏராளமான செல்வம் சென்று குவிகிறது; அதே நேரத்தில் அடிமட்டத்தில் உள்ள மிக மிகப் பெரும்பான்மையான வறுமை நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இது சம்பந்தமாக வெளியிடப்பட்ட ஆக்ஸ்போர்டு அறிக்கைக்கு, ‘‘சமமின்மை கொல்கிறது’’ என்று மிக அருமையான தலைப்பு இடப்பட்டு இருந்தது. அதன்படி இந்தியாவில் உள்ள பில்லியனர்கள் (அதாவது நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை வைத்திருப்பவர்கள்) 100 பேர், இந்த நாட்டின் 55 சதவீத மக்கள் வைத்துள்ள சொத்துக்களை விட அதிகமான சொத்துக்களை வைத்திருக்கிறார்கள்!

8. பொதுத்துறை என்பது நமது நாட்டு பொருளாதாரத்தின் உறுதிமிக்க அடித்தளம் ஆகும். காலனி ஆதிக்கத்திலிருந்து நாம் விடுபட்ட பின்பு, பொதுத்துறை உருவாக்கத்தின் மூலம் தான் நமது சுய தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் நாடாக வளர்ந்தோம். நமது பரந்த நிலப்பரப்பில் கிடைக்கும் வெவ்வேறு விதமான வளங்களை, அரசின் தலையீடு மூலமாகத்தான் சரியாக நிர்வாகம் செய்ய முடியும். சமச்சீரான முறையில், பாரபட்சம் இன்றி நாட்டை மேம்படுத்த முடியும். பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு உலகம் ஆட்பட்ட போது, பொதுத்துறை தான் நம் நாட்டைப் பாதுகாத்தது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டுக் கொள்கைகள் மூலமாக பொதுத்துறைகளில் வேலை கிடைத்தது. நாட்டின் மக்கள் அனைவருக்கும் மண்டல அளவிலான பாரபட்சம் ஏதும் இல்லாமல் சம அளவில் வாய்ப்புகளையும் வாழ்க்கையையும் உறுதிப்படுத்துவதற்கு பொதுத்துறையை பாதுகாப்பது அவசியம். கலைக்கப்பட்ட திட்டக் குழு (Planning Commission)வுக்கு மீண்டும் உயிரூட்டுவது அவசியம்.

9. உற்பத்தி மற்றும் சேவை துறைகளில் அரசின் பங்களிப்பையும் தலையீட்டையும், புதிய பொருளாதாரக் கொள்கைகள் தடுக்கின்றன. அதற்குப் பதிலாக லாபம் தேடுதல் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட தனியாரின் கைகளுக்கு இவற்றை மாற்றுகின்றன. இதற்காக, பொதுத்துறையைத் திட்டமிட்டு அரசாங்கமே சீர்குலைக்கிறது. அரசு சார்ந்த முதலாளித்துவத்தை வளர்ப்பதே அவர்களது சித்தாந்தம். இதன் விளைவாக ஏர் இந்தியா, எல்ஐசி போன்ற நாட்டின் சொத்துக்கள் , தரைமட்ட விலையில், கிட்டத்தட்ட இலவசமாக, தனியாருக்கு தரப்பட்டன; தரப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. பொதுத்துறை வங்கிகளையும் தனியார்மயப் படுத்த அரசு விரும்புகிறது. பொதுத் துறையே இல்லாத நிலையை உருவாக்குவது, நமது பொருளாதார இறையாண்மையையும், நிதிச் சுதந்திரத்தையும் கடுமையாக அச்சுறுத்தலுக்கு ஆட்படுத்தும். இனி தனியார் துறையைச் சார்ந்துதான் இந்திய பொருளாதாரம் இயங்கும் என்றாகி விட்டால், கடல் போல் வறுமைக்கு நடுவே சின்னஞ்சிறு தீவுகளாக வளமை இருக்கும். எல்லோருக்குமான வாய்ப்பு, சமூகநீதி என்ற கருத்தியல், பொதுத் துறையை அழிப்பதன் மூலம் தோற்கடிக்கப் படுகிறது.

10. உற்பத்திச் செலவை வெட்டிக் குறைப்பதன் மூலமாக, உயர்ந்த பட்ச லாபமடைந்து முதலாளித்துவம் உயிர் பிழைக்கிறது. பொறுப்பற்ற, ஒழுங்கமைக்கப்படாத வகையில் மூலதனத்தைப் பாய அனுமதிப்பது, நமது உழைக்கும் மக்களைத் தரம் இழக்க செய்வதாகும். மலிவான உற்பத்தி உள்ளீடு என்ற பெயரில்,

இவர்கள் சுற்றுச்சூழலுக்கும் பழுது பார்க்க இயலாத சேதத்தை ஏற்படுத்தி விடுவார்கள். பல்வேறு போராட்டங்களால் தியாகம் செய்து வென்றெடுக்கப்பட்ட தொழிலாளர் உரிமைகளை, கார்ப்பரேட்டுகளின நலன்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கமே சிதைக்கிறது. வேண்டுமென்றால் வேலைக்கு எடுத்துக் கொள்ளவும், இல்லை என்றால் அந்த வினாடியே வேலையை விட்டு விரட்டவும் உரிய ஏற்பாட்டை முதலாளிகள் விரும்புகிறார்கள். அதாவது தன்னிடம் பணி புரியும் தொழிலாளியிடம் வேலை வாங்குவதற்கு தனக்கு எல்லா உரிமைகளும் உண்டு. அரசாங்கமும் கூட குறுக்கிடக் கூடாது. தொழிலாளியின் வேலைக்கும் சம்பளத்துக்கும் உத்தரவாதம் ஏதுமில்லை என்பதைச் சட்டபூர்வமாக்குவதே முதலாளிகளின் நிலையாகும். தொழிலாளர்களுக்கு ஆதரவான சட்டங்களே இல்லாவிட்டால், முதலாளிகளின் கருணையில் தான் தொழிலாளர்கள் வாழ முடியும். அவர்களுக்கு எந்த சமூக பாதுகாப்பும் எதிர்கால நலன்களும் இல்லாமல் போகும்.

11. பன்னாட்டு கார்ப்பரேட் முதலைகளுக்கு எந்த சமூகப் பொறுப்புணர்வும் கிடையாது. அவர்கள் நமது தேசிய வளங்களின் மீது பாய்கிறார்கள். நமது வனங்கள், சுரங்கங்கள், ஆறுகள், வயல் வெளிகள் எல்லாமும் அவர்களது வரையறையற்ற சுரண்டலுக்கு ஆட்படுத்தப்படுகிறது. அவர்களுடைய பெரும் லாபத்துக்காக நமது சுற்றுச்சூழல் கடுமையான பாதிப்புக்கு ஆளாகிறது. திடீரென வெள்ளம், பருவம் மாறிப் பொழியும் மழை, வறட்சி, வெப்பநிலை அதிகரிப்பு, நிலச்சரிவு போன்றவை எல்லாம் நமது மக்களின் வாழ்வாதாரத்தை அழிப்பதோடு, இனி மீட்டெடுக்க முடியாத வகையில் அழிந்தும் போகின்றன. இந்த உலகத்தில் எதிர்கால சந்ததிக்கு எதுவுமே இல்லாதவகையில் மூலதனம் வழித்து, அழித்து, முடித்து விடும். அரசாங்கமோ இந்த முதலாளிகளின் நலன்களையே பிரதிபலிக்கிறது; நிறைவேற்றுகிறது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் மக்களது முயற்சிகள் அனைத்தையும் அரசாங்கம் கண்டிக்கிறது; அடக்கி ஒடுக்கவும் செய்கிறது. பருவநிலை மாற்றம் மற்றும் உலகம் வெப்பமடைதல் ஆகியவை முன்னுரிமை தந்து எதிர் கொள்ள வேண்டிய விஷயங்களாகும். ஆனால், மேற்கு உலகின் குறுகிய நலன்கள் இதை செய்ய அனுமதிப்பதில்லை மேற்கு உலக நாடுகள் தான் உலக வெப்பமடைதலுக்கும் மிக அதிக அளவில் கார்பன் டை ஆக்சைடு வெளியிடப்படுவதற்கும் முக்கிய காரணமாக உள்ளன. இதை வளரும் நாடுகள் பக்கம் திருப்ப அவை முனைகின்றன. இதனை எதிர்த்து வளர்முக நாடுகள் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். உலக சுற்றுச்சூழலுக்கு மேலை நாடுகள் ஏற்படுத்தியுள்ள சேதத்தை குறைக்கவும், எதிர்காலத்தில் சுற்றுச் சூழலுக்கு உகந்த ஒரு உலகத்தை கட்டியமைக்கவும் தகுந்த பங்களிப்பை அவை செலுத்த வேண்டும்.

12. முதலாளித்துவம் தனது வலையை விரித்து, மக்களின் வாழ்க்கை மீது முழு கட்டுப்பாட்டையும் கோருகிறது. அண்மையில் திரும்பப் பெறப்பட்ட வேளாண் சட்டங்கள் ஒரு உதாரணமாகும். அவை, கிராமப்புற இந்தியாவை எடுத்து கார்ப்பரேட்டுகளுடைய கையில் கொடுப்பதற்கான விருப்ப பதிவு ஆகும். இந்தியாவின் தொழில்துறை மற்றும் சேவை துறைகளில் மூலதனம் படர்ந்து பரவி தனதாக்கிக் கொண்ட பிறகு, இப்போது வேளாண்மையையும் அது தொடர்பான நடவடிக்கைகளையும் தனது கைக்கு கொண்டு வர விரும்புகிறது. இந்த துறைகள் ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை அளிப்பவை. இதற்குள் எந்தக் கட்டுப்பாடும், வரையறையும் இல்லாமல் நுழையவும் வெளியேறவும் மூலதனத்தை அனுமதிப்பது பொருத்தமற்றது. இது, இந்தியாவின் முன் எப்போதும் இல்லாத வகையில் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை முழுக்க அழிப்பதாகும்.

13. நமது காலத்தில் மேற்கண்ட பின்னணியில், பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சி போக்குகளை நாம் பார்க்கிறோம். மூலதனம் எந்த வரையறையும், கட்டுப்பாடுகளும் இல்லாது, சுதந்திரமாக உள்ளே புகுந்து பாய வேண்டும் என எண்ணுகிறது. தொழிலாளர்களை தனது கூண்டுக்குள் அடைத்து வைக்க முயற்சிக்கிறது. இந்திய அரசு முதலாளிகளி வர்க்க நலன்களைத் தான் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எந்த மக்களின் வாழ்க்கையை பாதுகாப்பதற்காக ஆட்சிக்கு வருவதாக அரசியல் அமைப்பு சட்டத்தின் மீது சத்தியம் செய்து உறுதிமொழி ஏற்றதோ, அதே மக்களின் நலன்களை கைகழுவி விட்டு, கார்ப்பரேட் சக்திகளுக்கு வசதி செய்து தருகிறது.

# முக்கியமான பொருளாதார, அரசியல் மாற்றங்கள்

## பொதுத் தேர்தல்கள்

1. நரேந்திர மோடி தலைமையிலான பிஜேபி அரசாங்கம் 2019 பொதுத் தேர்தலுக்குப் பின்னர் மக்களவையில் 303 உறுப்பினர்களோடு பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு திரும்ப வந்துள்ளது. 2014 பொதுத் தேர்தலுக்குப் பின்பு பிஜேபி வாங்கிய வாக்குகளும் கிட்டத்தட்ட 6.5 சதவீதம் உயர்ந்து 37.36%ஆக உயர்ந்திருக்கிறது. மோசமான பொருளாதார நிர்வாகம் மற்றும் மேம்பாட்டு வேலைகளில் மிகக் காலதாமதம் என்ற நிலையில் தான் பிஜேபி தேர்தலுக்குப் போனது. பண மதிப்பிழப்பு, ஜிஎஸ்டி போன்ற அரசு முடிவுகள் ஏற்கனவே

இந்திய பொருளாதரத்தை சீரழித்து இருந்தன. வேலையின்மை உச்சிக்குச் சென்றது. விவசாயிகளுடைய துயரங்கள் நாடே அறிந்தது. ஆனாலும் தேசியம் பற்றி திரும்பத் திரும்ப பேசுவது, புல்வாமா தாக்குதலுக்கு பின்பு நடந்த பாலகோட் விமானத் தாக்குதலை சொல்லி அரசியலாக்கி மக்களைப் பிரித்து துருவங்களாக்குவது போன்றவற்றின் துணை கொண்டு, பொதுமக்கள் கருத்தை பிஜேபிக்கு சாதகமாக மாற்றுவதற்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.

2. பிஜேபிக்கு எதிரான சித்தாந்த ரீதியாக ஈடுபாடு கொண்ட,ஒரு அர்த்தமுள்ள, நம்பிக்கையான, ஒரு கூட்டணியை நாடு தழுவிய அளவில் ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் தவறிவிட்டன. பெரும்பாலும் மாநில அளவிலான கூட்டணிகளே உருவாகின. முக்கிய எதிர்க்கட்சியான இந்திய தேசிய காங்கிரஸ் 19.5 சதவீத ஓட்டுகளோடு 52 இடங்களில் தான் வெற்றி பெற முடிந்தது. கேரளாவில் உள்ள வயநாடு தொகுதியில் போட்டியிட ராகுல் காந்தியை அனுப்புவது என்ற காங்கிரஸின் முடிவு, இடதுசாரிகளுக்கு தீங்காக அமைந்தது மட்டுமின்றி, மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளின் ஒற்றுமைக்கும் தடையானது. நமது கட்சி இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றது. இரண்டுமே தமிழ்நாட்டில் இருந்து, திராவிட முன்னேற்ற கழகத்துடன் தொகுதி உடன்பாட்டில் கிடைத்த வெற்றிகள் ஆகும். நமது தேச அளவிலான வாக்கு சதவீதம் 0.58 என்ற அளவுக்கு சரிந்து விட்டது.

3. மீண்டும் ஆட்சி அமைக்க கிடைத்த வாய்ப்பு, பிஜேபிக்கும் அதன் பாதுகாவலனான ஆர்எஸ்எஸ் க்கும் தமது இந்து ராஷ்டிர செயல் திட்டத்தை துடிப்போடு அமலாக்குவதற்கான தைரியத்தை தந்துள்ளது. 2019க்குப் பிறகு பிஜேபியின் மூன்றாண்டு கால ஆட்சியில், நமது ஜனநாயக அடிப்படைகள் மீதான வலதுசாரி தாக்குதல் அதிகரித்துள்ளது. இப்போது முரட்டுத்தனமாக, மதச்சார்பற்ற நாடாளுமன்ற ஜனநாயக முறைமையை வேகமாக மாற்றியமைக்க முயல்கிறார்கள். தேர்தல் வெற்றி மூலம் அமைந்த அரசை சர்வாதிகாரம் கொண்டதாக்கி, இதற்கு முன் இல்லாத வகையில் மையத்தில் அனைத்து அதிகாரங்களையும் குவித்துக் கொண்டு இருக்கிறார்கள். பன்மைத்துவம் மீது ஆர்எஸ்எஸ்பிஜேபி வெறுப்பு பகிரங்கமாக வெளிப்படுத்தப்படுகிறது. சமூகத்தை துண்டாகப் பிளந்து, இந்துப் பெரும்பான்மையை ஆர்.எஸ்.எஸ் பிஜேபிக்கு பின்னால் அணிதிரட்ட, மதச் சிறுபான்மையின் மீது திட்டமிட்ட தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

4. தனது கருத்துக்களை பொது வெளியில் விவாதிக்கவோ, பேச்சுவார்த்தை நடத்தவோ ஆர்எஸ்எஸ்பிஜேபி தயாராக இல்லை. எனவே, அரசியல் அமைப்பு உருவாக்கித் தந்த ஜனநாயக அமைப்புகள் அனைத்தையும் சிறுமைப்படுத்தித் தாழ்த்துகிறது. அவர்களுடைய கருத்துக்கு ஆட்சேபனை எழுந்தால், அதை தேச விரோதம், அன்னிய சக்திகளால் உருவாக்கப்பட்டது, அர்பன் நக்சல்கள் என்றெல்லாம் முத்திரை குத்துகிறது. சமூக ஒற்றுமை, சகிப்புத்தன்மை, சகவாழ்வு ஆகியவை அச்சுறுத்தலுக்கு ஆளாகின்றன. இந்தியாவில் நிலவும் வேற்றுமைகளை ஆர்எஸ்எஸ் பிஜேபி சகித்துக் கொள்ள தயாராக இல்லை என்பது பல்வேறு வகைகளில் வெளிப்படுகிறது. அவர்கள் இந்தியை பொது மொழியாக்கிட முயல்கிறார்கள். தான் சொல்வதுதான் மதம் என நிலைநிறுத்த முயற்சிக்கிறார்கள். வேறுபட்ட உணவு உடை பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் ஆகியவற்றை மாற்றி ஒரே மாதிரியானதாக மாற்ற முயற்சிக்கிறார்கள்.

## 370–வது விதியை நீக்கியது

5. இரண்டாவது முறையாகப் பதவிக்கு வந்தவுடன் பிஜேபி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 370 விதியை நீக்கிவிட்டது. 370 மற்றும் 35 ஏ ஆகிய விதிகள் இந்தியாவோடு காஷ்மீர் இணைந்த போது உருவாக்கப்பட்டவை ஆகும். அதை நீக்கியதோடு மட்டுமின்றி, ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை, ஜம்மு,காஷ்மீர் யூனியன் பிரதேசம் மற்றும் லடாக் யூனியன் பிரதேசம் என இரண்டாக பிரித்தது ஜனநாயக விரோத நடவடிக்கையாகும். இது பெருமளவில் கண்டனத்திற்கு ஆளானது. ஒன்றிய அரசு காஷ்மீர் மக்களின் கருத்தை அறிவதற்குப் பதிலாக, இரும்பு கரங்களோடு அங்கு ஆட்சி செலுத்த முற்படுகிறது. பரஸ்பர உடன்பாட்டை, பிஜேபி தன்னிச்சையாக உடைத்ததானது, அந்த பள்ளத்தாக்கை மூர்க்கத்தனம் கொண்டதாக மாற்றி இருக்கிறது. தனக்கு உகந்த முறையில் ஜம்மு காஷ்மீர் தொகுதிகளின் எல்லைகளை மாற்றி அமைத்து,சட்டப் பேரவையில் பிரதிதித்துவ ஜனநாயக சமசீர்நிலையை மாற்றி இருக்கிறது. 370 விதியை நீக்கியதால் பயங்கரவாத நடவடிக்கைகள் குறைந்துவிட்டன என்று பிஜேபி கூறியது பொய் என்பது நிரூபணம் ஆகிவிட்டது. மாறாக, ஜம்மு காஷ்மீரின் வரைபடத்தை பிஜேபி மாற்ற முயல்கிறது.

பிற பகுதிகளில் இருந்து மக்களை காஷ்மீரில் நிலம் வாங்க அனுமதித்திருக்கிறது.ஜம்மு காஷ்மீரின் அழகு சொட்டும் பகுதிகளை கார்ப்பரேட்டுகள் விலைக்கு வாங்கி ஆக்கிரமிக்க இது உதவும்.

## குடிமக்கள் திருத்தச் சட்டம் மற்றும் என்.ஆர்.சி

6. குடிமக்கள் திருத்தச் சட்டத்தை டிசம்பர் 2019ல் நாடாளுமன்றத்தில் வைத்து பிஜேபி நிறைவேற்றியது. ஒருவரின் குடியுரிமையை, அவரது மதத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்கவும் மறுக்கவும் செய்யும் அதிகாரத்தை உருவாக்கி, நமது நாட்டின் மதச்சார்பற்ற அடித்தளத்தையே ஒட்டுமொத்தமாக மாற்றி அமைப்பது தான் இந்த திருத்த சட்டமாகும். இது 1955 ஆம் ஆண்டின் குடிமக்கள் சட்டத்தை திருத்தி, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து 2014 டிசம்பருக்கு முன்பு இந்தியாவுக்கு வந்த இந்துக்கள், சீக்கியர்கள், புத்தர்கள், சமணர்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள் ஆகியோருக்கு குடியுரிமை வழங்க வகை செய்கிறது. இந்த பகுதியில் இருந்து வந்திருக்கிற முஸ்லிம்களை மட்டும் குடியுரிமை கொடுக்க முடியாது என அது விலக்கி வைக்கிறது. இதனோடு குடிமக்களுக்கான தேசிய பதிவேடு (என்ஆர்சி) என்பது மதத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்திய மக்களின் குடியுரிமையைப் பறிக்க முடியும் என்னும் அதிகாரத்தை அரசுக்கு தந்தது. குடிமக்கள் திருத்தச் சட்டத்தை எதிர்த்து ‘ஷாகீன் பார்க்‘கிலும், நாட்டின் பல பகுதிகளிலும் அமைதியான முறையில், குறிப்பாக பெண்கள் அமர்ந்து பிரம்மாண்டமான கண்டன இயக்கத்தை நடத்தினார்கள்.

## மதச்சார்பின்மை மீதான தாக்குதல்

7. நமது அரசியலமைப்புச் சட்டத்தில் அடிநாதமாக உள்ள மதச்சார்பின்மை ஒவ்வொரு நாளும் கடும் அச்சுறுத்தலுக்கு ஆட்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நாளும், மக்களை துருவங்களாகப் பிரித்து நிறுத்தும் வகுப்புவாதம் நிரம்பிய பிரச்சினைகளை ஆர்எஸ்எஸ்பிஜேபி எழுப்பி வருகின்றன.

அது லவ் ஜிகாத் ஆகட்டும், அல்லது ஹிஜாப் சர்ச்சையாகட்டும், அவர்கள் எல்லாவற்றையும் வாய்ப்பாக பயன்படுத்தி, ஒரு

மதச்சார்பற்ற ஜனநாயக நாட்டை, மதம் சார்ந்ததாகவும் சிறுபான்மையினர் மீதான முழு வெறுப்புக் கொண்டதாகவும் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சிறுபான்மையினர் மீதான பாகுபாடு, அனைத்து மட்டங்களிலும் தானாகவே எழும் வகையில் கட்டமைக்கிறார்கள். அண்மையில், சிறுபான்மையினருக்கு சொந்தமான வீடுகள் மற்றும் சொத்துக்களை புல்டோசர் கொண்டு இடித்து தரைமட்டமாக்கியதை உதாரணமாக கொள்ளலாம். இந்த நடவடிக்கைகள் சட்டவிரோதமானது மற்றும் அரசியலமைப்பிற்கு எதிரானது

8. அயோத்தியில் ராமர் கோயில் கட்ட உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. பிறகு, முரண்பாட்டை வளர்ப்பதற்காக வேறு கூடுதல் இடங்களை ஆர்எஸ்எஸ்பாஜக கண்டறிந்து, குழப்பம் விளைவிக்கவும் கலகம் செய்யவும் முயற்சிக்கிறது. இது அரசியல் சட்டத்தையும் செயல்பாட்டில் உள்ள சட்டங்களையும் அப்பட்டமாக மீறுவதாகும். இவ்வாறு கட்டமைக்கப் பட்டு வரும் புதிய சர்ச்சைகளில், காசியில் உள்ள ஞானவாபி மசூதி தொடர்பான பிரச்சினை அண்மைக்கால சர்ச்சையாகும். முரண்பாடுகளுக்கு மேல் முரண்பாடுகளை தொடர்ச்சியாக உருவாக்கி, நமது சமூகத்தை முறித்துப் போட்டுக் கொண்டிருக்கிறது. ஆர்எஸ்எஸ்ஸை எதிர்க்க, ஒரு ஒன்றிணைந்த, நேர்மறையான செயல் திட்டத்தை மக்கள் முன் வைக்க வேண்டும்.

## **<u>நீதித்துறையின் நிலை குறித்து</u>**

9. நமது சமூகத்தில் வளர்ந்து வரும் சர்வாதிகாரக் கருத்தியலின் தொடர்ச்சியாக, இங்கு நிகழ்த்தப்படும் தவறுகளை கண்காணித்து சீர்குலைவு போக்குகளைத் தடுத்து, ஜனநாயக அடிப்படைகளைப் பாதுகாக்க வேண்டிய அமைப்புகள் தோற்றுக் கொண்டிருக்கின்றன. நமது நீதித்துறையின் திறமையின்மை காரணமாக பல லட்சக்கணக்கான வழக்குகள் தீர்வு இல்லாமல் தொடர்கின்றன. வழக்கு தொடுத்தவர்கள் பெரும் துயரங்களுக்கு ஆளாகிறார்கள். ஐந்து கோடி வழக்குகளுக்கு மேல் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. ஏழைகள், தலித்துகள், பழங்குடியினர் ஆகியோர் மிக மோசமாக பாதிக்கப்படுகிறார்கள். மிகச் சிறிய வழக்குகளில் தீர்வு

சொல்வதற்கு கூட எண்ணத் தொலையாத அளவு நீண்ட காலம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. சட்டம் வகுத்த வழிகளில் தீர்வு கிடைக்காத நிலை உள்ளதால், நீதிமன்றத்திற்கு வெளியில் தீர்வு தேட வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்படுகிறார்கள். அரசியலமைப்பு தந்த உரிமைகளான விவாதித்தல், கலந்துரையாடுதல், ஆட்சேபனை பதிவு செய்தல் ஆகியவற்றுக்கு தடை ஏற்படுத்தப்படும் போது கூட, நீதித்துறை தலையிடாமல் அமைதி காப்பது நாட்டின் ஜனநாயக அடிப்படைகளுக்கு தீங்கு விளைகிறது. சிறுபான்மை மற்றும் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த மக்கள், செயல்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிக்கையாளர்கள், சமூகப் பணியாளர்கள் ஆகியோர் தமது உரிமைகளை பயன்படுத்திக் கொள்ள முடியாமலும், அரசை விமர்சிக்கும் கருத்துக்களை சொல்ல முடியாமலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு நீதிமன்றத்தின் பாதுகாப்பு கிடைப்பதில்லை. அரசியலமைப்பு சட்டத்தின்படியான பல வழக்குகள் காலதாமதப்படுத்தப்படுகின்றன. தற்போதுள்ள சூழலில் நீதித்துறை காட்டும் இந்த அலட்சியப் போக்கு ஜனநாயகமற்ற, பழமை வாத, பிற்போக்கு சக்திகள் வளர பெரும் வாய்ப்பு தரப்படுகிறது. அதே நேரத்தில் நீதித்துறையின் சுயேச்சை தன்மையும், நீதித்துறைக்கும் நிர்வாக துறைக்கும் இடையிலான இடைவெளியும், ஆர்எஸ்எஸ் பிஜேபி சர்வாதிகாரத்தால் அச்சுறுத்தலுக்கு ஆளாகி இருக்கின்றன.

## வீழ்ந்து வரும் வாழ்க்கைத் தரம்

10. சமூக வளர்ச்சியை அளவிடுவதற்கான உலக அளவிலான மதிப்பீடுகளில், மோடி ஆட்சியின் கீழ் இருக்கும் இந்தியாவின் நிலை தொடர்ந்து வீழ்ச்சி பெற்று வருகிறது. தனியார் துறை மீதான அரசாங்கத்தின் அதீத நேசத்தால், சமூகத்திற்கான செலவுகள் அதீதமாக வெட்டிக் குறைக்கப் படுகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடும் குறைக்கப்படுகிறது. உலக பட்டினிக் குறியீடு தரவரிசையில், இந்தியா 116 நாடுகளில் 101 நாடாக, பரிதாபகரமான நிலையில் இருக்கிறது. 15 நாடுகள் மட்டுமே இந்தியாவை விட மோசமாக உள்ளன. அண்டை நாடுகளான வங்கதேசம், நேபாளம் மற்றும் பாகிஸ்தான் போன்றவை நம் நாட்டை விட நல்ல நிலையில் உள்ளன. ஆப்பிரிக்க நாடான காங்கோ, யுத்தத்தால் சீரழிக்கப்பட்ட

ஏமன் போன்ற நாடுகள் மட்டுமே இந்தியாவை விட கீழ் நிலையில் உள்ளன. ஐக்கிய நாடுகள் சபை கணக்கிட்ட மனித வளர்ச்சிக் குறியீடு ஆய்வில், 189 நாடுகளில் இந்தியா 131 வது இடத்திற்கு சரிந்துள்ளது. உலகம் தழுவி கணக்கிடப்பட்ட "மகிழ்ச்சிக் குறியீடு' அறிக்கை2022ல், இந்தியா 136 வது இடத்தில் இருக்கிறது. பட்டியலில் கீழே இருந்து மேலாக பத்தாவது இடத்தில், அதாவது மகிழ்ச்சியே இல்லாத அடிமட்ட நாட்டிலிருந்து பத்தே இடங்கள் மேலாக இருக்கிறது. உலக நாடுகளில் பத்திரிக்கை சுதந்திரம் எந்த அளவுக்கு அனுமதிக்கப்படுகிறது என்று நடத்தப்பட்ட ஆய்வில், இந்தியா 150 வது இடத்திற்கு சரிந்து விட்டது. பத்திரிக்கை சுதந்திரமே பறிபோனதால் தான், இந்தியா மேற்கண்டவாறு பெரும் சரிவைச் சந்தித்திருப்பது மக்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படாமலேயே உள்ளன.

## ஆட்சேபனைக் குரல்களை ஒடுக்க கொடூர நடவடிக்கைகள்

11.. விமர்சனங்கள் மற்றும் விவாதங்களுக்கு எப்போதும் பயப்படும், ஆர்எஸ்எஸ், பிஜேபி ஒன்றிய அரசும், அதன் அமலாக்கத் துறை அதிகாரிகளும் ஆட்சேபனைக் குரல்களை, அடக்குமுறை மூலம் வாய் பூட்டுப் போட்டு ஒடுக்குகின்றனர். பல்வேறு தளங்களில் ஆட்சேபனை குரல்களை எழுப்பியதற்காக, கடந்த காலத்தில் பல செயல்பாட்டாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளன. பாரபட்சமான குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிராக போராட்டம் நடத்தியதற்காக பல ஆர்வலர்கள் மீது கடுமையான 'ஊபா' மற்றும் கடும் தண்டனைக்கு உரிய பிரிவுகளின் கீழ் கைது செய்து வழக்குகள் தொடரப் பட்டுள்ளன.

12. இதேபோல், பீமாகோரேகான் வழக்கில், உள்ளீடற்ற பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி ஏராளமானவர்களை தொடர்ந்து சிறையில் வைத்துள்ளனர். இவர்களில் கௌதம் நவ்லகா, ஆனந்த் டெல்டும்டே போன்ற முக்கிய செயல்பாட்டாளர்கள் மற்றும் அறிஞர்களும் அடங்குவர். வழக்கறிஞரும் செயல்பாட்டாளருமான சுதா பரத்வாஜ் சட்ட அடிப்படையில் ஜாமீன் பெற்றார். ஆனால் வெளியே சென்ற அவரை, வேறங்கும் செல்ல

முடியாமல் அரசு தடுத்து நிறுத்தி இருக்கிறது. தந்தை ஸ்டான் சுவாமி சிறைக் காவலில் இருந்து காலமானார். இந்த 80 வயது செயல்பாட்டாளருக்கு மனிதாபிமானமற்ற முறையில் சிகிச்சை தர மறுத்தனர். பலர் அவரது மறைவுக்கு நீதித்துறை கொலை எனப் பெயரிட்டனர். உடல்ரீதியாக 90% இயலாமை நிலையை எட்டிவிட்ட பேராசிரியர் ஜி.என். சாய்பாபாவும் நாளுக்கு நாள் மோசமடையும் உடல் நிலையோடு சிறைக் கம்பிகளுக்குள்ளே சிதைந்து கொண்டிருக்கிறார். செயல்பாட்டாளர் தீஸ்தா செவ்வாய், முன்னாள் டிஜிபி ஸ்ரீ குமார் ஆகியோர், சதி செய்ததாக பொய் குற்றச்சாட்டு சுமத்தி கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். பத்திரிகையாளர் முகமத் ஜுபைர், திரைப்படத் துறையின் அவிநாசி தாஸ் ஆகியோர் இதேபோன்று இட்டுக்கட்டப்பட்ட பொய் குற்றச்சாட்டுகளின் மூலம் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் ஹுமன் சுகுமார் செயல்பாட்டாளர் மீது அபராதம் விதிக்கப்பட்டு இருக்கிறது சத்தீஸ்கர் மாநிலத்தைச் சார்ந்த ஏழை பழங்குடிகளிடம் பேசியதற்காக அவர் துன்புறுத்தப்பட்டிருக்கிறார். நாட்டில் ஒரு சிறிய எதிர்ப்பை தெரிவித்தாலும் அவர் சிறையில் தள்ளப்படுவதும், அவருடைய வாழ்க்கை சீர்குலைக்கப்படுவதும் உறுதி என்ற அச்சச் சூழலை உருவாக்குவதற்கு பிஜேபி முயற்சிக்கிறது.

13. இந்திய தண்டனைச் சட்டத்தின் 124கி பிரிவின் கீழ் தேச துரோக குற்றச்சாட்டுகள், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டம்(ஊபா), தேசிய பாதுகாப்பு சட்டம் ஆகியவற்றின் கீழ் எதிர்க்கட்சியினர், செயல்பாட்டாளர்கள், சமூக சேவகர்கள் மீது பதிவு செய்யப்படுகின்றன. என்சிஆர்பியின் அண்மைக்கால புள்ளி விவரங்களின் படி 2020ம் ஆண்டில் மொத்தம் 230 தேசத்துரோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, ஆனால், 23 வழக்குகளில் மட்டுமே குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டன. 2020ல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள தேசத்துரோக வழக்குகளின் எண்ணிக்கை 95 சதவீதத்தை எட்டியுள்ளது. 2020ம் ஆண்டில் மொத்தம் 4,827 ‘ஊபா’ வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவற்றில் 398 வழக்குகளில் மட்டுமே குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எந்த நியாயமும் ஆதாரமும் இல்லாமல் ஏராளமான மக்களின் வாழ்வுரிமையும் சுதந்திரத்தையும் பறித்து கொடூரமாக சிறைகளுக்குள் அடைத்து வைத்திருக்கும் அநியாயம் நடந்து கொண்டிருக்கிறது.

## தனியார்மயமாக்கல்

14. மத்திய பாஜக அரசு, அவர்களது முதலாளிகளான கார்ப்பரேட்டுகளின் நலன்களுக்காக, தீவிரமாக தனியார்மயத்தை செயல்படுத்துகிறது. லாபம் ஈட்டுகிற பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட தேசிய சொத்துக்களை, தரைமட்ட விலையில், சொல்ல போனால் இலவசமாக, விற்பனை என்ற பெயரில் கார்ப்பரேட்டுகளுக்கு அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இது நமது நாட்டுப் பொருளாதாரத்தின் அடித்தளத்தை பலவீனப்படுத்துகிறது. பேரழிவுதருகிற, மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கைகளை அரசாங்கம் தொடர்ந்து பின்பற்றி வருகிறது. பொதுத்துறைப் பங்குகளையும், கேந்திரமான தொழில்களையும் கண்மண் தெரியாமல் தனியாருக்கு விற்று ஒட்டுமொத்தமாக அழித்து வருகிறது

15. நாட்டின் அடிப்படைக் கட்டமைப்புக்கான முக்கிய நிறுவனங்களை யோசனையே இன்றி விற்பனை செய்கிறார்கள். பிபிசிஎல், சிசிஐ, ஷிப்பிங் கார்ப்பரேஷன், பிஇஎம்எல், ஐடிபிஐ வங்கி, நீலாச்சல் இஸ்பாட் நிகாம் லிமிடெட், ஐபிஓ பங்கு விலக்கல் வழியாக எல்ஐசி, ஒரு பொது காப்பீட்டு நிறுவனம் மற்றும் இரண்டு பொதுத்துறை வங்கிகள் ஆகியவை விற்கப்படுவது இதற்கு சிறந்த உதாரணமாகும். ஏர் இந்தியா, பவன் ஹான்ஸ் நிறுவனங்கள் தரைமட்ட விலையில் விற்கப்பட்டன. ராணுவத்துக்கான 41 ஆயுதத் தொழிற்சாலைகள் ஏழு கார்ப்பரேஷன்களாகப் பிரிக்கப்பட்டன. வருங்காலத்தில் ஒவ்வொன்றையும் தனியாருக்கு விற்கிற உள்நோக்கத்தோடுதான் இவை பிரிக்கப்பட்டுள்ளன.பெரு முதலாளிகளின் லாப வேட்டைக்காக நாட்டின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தல் ஏற்படுத்துவதை பற்றி அவர்கள் கவலை கொள்ளவில்லை. பாதுகாப்பு, விண்வெளி ஆய்வு, அணுசக்தி ஆகிய முக்கியமான துறைகளில் தனியார் துறையை அனுமதிப்பது நாட்டின் இறையாண்மையையும், சுயேச்சைத் தன்மையையும் பாதிக்கும். நிலக்கரி, ரயில்வே, துறைமுகம், விமான நிலையங்கள்போன்ற முக்கியமான துறைகள் எல்லாவற்றையுமே தனியாருக்கு சிந்தனையே இல்லாமல் அரசு விற்று வருகிறது.

## தேசிய பணமாக்கல் திட்டம்

16. நிதியமைச்சர் அறிவித்துள்ள தேசிய பணமாக்கல் திட்டம் (NMP), நாட்டின் கையில் உள்ள உள்கட்டுமானங்களுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாகும். பொதுத்துறை நிறுவனங்களை குத்தகை என்ற பெயரில். எந்த முதலீடும் இல்லாமல் தனியாரிடம் தருவதுதான் இதன் நோக்கம். இது ஒரு நடுத்தர கால திட்டமாம். இதன் மூலம் 6 லட்சம் கோடி ரூபாயை ஈட்டுவது என அரசு தீர்மானித்து இருக்கிறது. இது தேசிய சொத்துக்களை தனியார் மயமாக்குவதில், நேரடி விற்பனைக்குப் பதிலாக சற்று புரியாத மொழியில் பேசி, கடைசியில் கைமாற்றி விடுகிற மாற்று வழி என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள தேச சொத்துக்களை தனியார் கையில் தருவதற்கான தனித்திட்டம் தான் இது. மோசமான திறனற்ற நிறுவனமாக இருந்தாலும் கூட, அது பிஜேபியின் பக்கம் நிற்கிறது என்றால், தேசத்தின் பிரம்மாண்டமான சொத்துக்களை எளிதாக கைப்பற்றி விட முடியும்.

## தொழிலாளர் சட்டத் தொகுப்புகள்

17. நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகள், அதாவது, ஊதிய சட்டத் தொகுப்பு, 2019, தொழிலுறவு சட்டத் தொகுப்பு, 2020, சமூக பாதுகாப்பு சட்டத் தொகுப்பு, 2020 மற்றும் தொழிலகப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் சட்டத் தொகுப்பு ஆகியவற்றை நாடாளுமன்றத்தில் விவாதிக்காமலேயே அரசு நிறைவேற்றி விட்டது. முதலாளிகளால் சுரண்டப்படும் தொழிலாளர்கள் தமது உரிமைகளை கூறுவதற்கான சட்டபூர்வமான வழிகளை எல்லாம் தொகுப்புகள் அடைத்து விடுகின்றன. கடும் போராட்டங்களுக்குப் பின் தொழிலாளர்கள் வென்றெடுத்த உரிமைகளை இச்சட்ட தொகுப்புகள் பறிக்கின்றன. இவற்றை எதிர்த்து, பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், சுரங்கம் ஆகியவற்றின் தொழிலாளர்கள் பல வேலை நிறுத்தங்களை நடத்தி இருக்கிறார்கள். தொழிலாளர் சட்டங்களுக்கு எதிராக ஏஐடியுசி உள்ளிட்ட அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. பா.ஜ.க கொண்டு வந்துள்ள தற்போதைய குழந்தைத் தொழிலாளர் சட்டம், ஏராளமான ஓட்டைகளைக்

கொண்டதாகவும் குழந்தை தொழிலாளர்களை வேலை செய்ய அனுமதிப்பதாகவும் அமைந்துள்ளது. ஐஎல்சி எனப்படும் இந்திய தொழிலாளர் மாநாட்டை 2015 ஆம் ஆண்டுக்குப் பின் ஒன்றிய அரசு கூட்டவில்லை. இது சர்வதேச தொழிலாளர் அமைப்பு, ஐ எல் ஓ வின் விதிகளுக்கும் ஒழுங்கு கோட்பாடுகளுக்கும் எதிரானதாகும். அதைப் போலவே பாதுகாப்பு பணிகள் சட்டம் 2021 ஐ இயற்றியதன் மூலம் பிஜேபி அரசின் தொழிலாளர் விரோத முகம் பளிச்சென வெளிப்பட்டது. 41 பாதுகாப்பு தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிவில் தொழிலாளர்கள், தனியார் மயமாக்கலை எதிர்த்து எந்த நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது என்று சட்டம் பேசுகிறது. பிஜேபி அரசின் இச்சட்டம் அரசியல் சாசனத்திற்கு எதிரானதாகும்.

## வேளாண் சட்டங்களும் எதிர்ப்புகளும்

18. கிராமப்புற இந்தியாவின் விவசாயத்தையும் அதனுடன் இணைந்த தொழில்களையும் கார்ப்பரேட் மூலதனத்தில் கை மாற்றுவதற்கு சட்டமிடும் மோடி அரசு, விவசாயிகளுக்கு எதிரானது என்பதை நிரூபித்து வருகிறது.. நிலம் கையகப்படுத்தும் சட்டம் தொடர்பாக இரண்டு அவசர சட்டங்களை போட்டு, பின்னர், அரசு திரும்பப் பெற நேர்ந்தது. இத்திருத்தச் சட்டத்தின் மூலம், கார்ப்பரேட் நிறுவனங்கள் நிலத்தை அபகரித்துக் கொள்ள அரசு வசதி செய்து தருகிறது. இதேபோல், சுமார் 15 மாதங்களுக்குப் பிறகு மூன்று விவசாய சட்டங்கள் நாடாளுமன்றத்தில் அவசரமாக கொண்டு வரப்பட்ட மூன்று வேளாண் சட்டங்களையும், சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் பங்கேற்புடன் விவசாயிகள் நடத்திய ஓராண்டு கால வரலாற்றுப் போராட்டத்தைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடி அவற்றைத் திரும்பப் பெற்றார். விவசாயிகள் மற்றும் சமூகத்தின் பிற பகுதிகளுடனான அவர்களின் ஒற்றுமை ஆகியவற்றால் அவர்களின் எதிர்ப்பை அரசாங்கத்தால் முறியடிக்க முடியவில்லை. போராட்டம் வெற்றியில் முடிந்தது. எதிர்ப்பு தெரிவிக்கும் நமது உரிமையை உறுதிப்படுத்தியது. பிரதமரும், அவரது அமைச்சரவை சகாக்களும், பிஜேபி கட்சி உறுப்பினர்களும், போராட்டக்காரர்களை போராடிப் பிழைப்பவர்கள் என்றும் காலிஸ்தானிகள் என்றும் தேச விரோதிகள் என்றும் கிண்டல் செய்தனர். அவை எல்லாம் விவசாயிகளின் மன உறுதியை உடைக்க முடியவில்லை.

சட்டத்தை ரத்து செய்வதை அரசு முரட்டுத்தனமாக தாமதப்படுத்தியதன் விளைவாக 700க்கும் மேற்பட்ட விவசாயிகள் உயிரிழக்க நேரிட்டது. லக்கிம்பூர் கெரியில் விவசாயிகள் மீது காரை ஏற்றி கொன்றது கொடூரமான சம்பவம் ஆகும்

## உளவு பார்த்தல்

19. சிறையில் அடைக்கப்படாதவர்களை அரசு உளவு பார்க்கிறது. அமைச்சர்கள், அரசியல்வாதிகள், முக்கிய குடிமக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியலமைப்புச் சட்டப்படி பொறுப்புகளை வகிப்பவர்கள் ஆகியோர் தொடர்ச்சியாக வேவு பார்க்க பெகாசஸ் என்ற இஸ்ரேலிய உளவு மென்பொருளை அரசு பயன்படுத்தியது வெளிச்சத்துக்கு வந்தது. இந்த விவகாரத்தை நாடாளுமன்றத்தில் விவாதிக்கவும், விசாரிக்கவும் அரசு மறுத்துவிட்டது. அரசின் தட்டிக் கழிக்கும் மழுப்பலான பதில்கள், இந்த விஷயத்தில் அதன் உடந்தையாக இருப்பதை சுட்டிக்காட்டுகின்றன. இந்த பெகாசஸ் செயலி உலகம் முழுவதும் 50000 க்கும் மேற்பட்ட கணினிகள் மற்றும் அலைபேசிகளுக்குள் அவர்களுக்கே தெரியாமல் செலுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதில் 150 க்கும் மேற்பட்டவை இந்தியாவில் செயலில் உள்ளன.. குடிமக்களை உளவு பார்ப்பதற்கு ஜனநாயகத்தில் இடமில்லை; ஆனால், அரசாங்கத்திற்கு ஜனநாயகத்தின் சாராம்சங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறை ஏதும் இல்லை. எதிர்ப்புக் குரல்களை நசுக்கி விட தனது அதிகாரத்தை முழுதாக பயன்படுத்துகிறது.

## மறைவான தேர்தல் பத்திரங்கள் மற்றும் (PM-CARES)

20. தேர்தல் பத்திரங்கள் மூலம், ஊழல், லாபி மற்றும் லஞ்சம் ஆகியவை மோடி அரசின் கீழ் நிறுவனமயமாக்கப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகளுக்கு நிதியுதவி செய்வதை ஒழுங்கு படுத்துவதாக கூறி கொண்டுவரப்பட்ட தேர்தல் பத்திர முறையை பாஜக அரசு கொண்டு வந்தது. ஆனால், யார் யாருக்கு எவ்வளவு தொகை வழங்கினார் என்று பொதுவெளியில் சொல்லவே தேவையில்லை என்பதே இந்த பத்திர முறையாகும். பொதுமக்கள் அரசியல்

கட்சிகளுக்கு நன்கொடை வழங்குவதை எளிதாக்குவதற்காகவே இந்தப் பத்திர முறையை கொண்டு வருவதாக அரசு சொன்னது; ஆனால், நடந்ததோ நேர் எதிரானது. கடந்த 4 ஆண்டுகளில் ஏறக்குறைய 10,000 கோடி மதிப்புள்ள பத்திரங்கள் விற்கப்பட்டுள்ளன. இதில் 90% பத்திரங்கள், அவற்றின் உச்சபட்ச விலை ஆன ஒரு கோடி ரூபாய்க்கு கொடுக்கப்பட்டவை. இவ்வளவு பெரிய தொகையை சாதாரண பொதுமக்கள் கொடுப்பது சாத்தியம் இல்லாதது. இந்த பத்திரங்கள் 80 சதவீதத்தை பெற்றிருப்பது ஆளும் கட்சியான பிஜேபி தான். அது போலவே கோவிட் 19 பெரும் தொற்றுக்கு எதிராகப் போராட போதிய நிதியைத் திரட்டுவதற்கு பிஎம் கேர்ஸ் உருவாக்கப்பட்டது. ஏற்கனவே ‘பிரதம அமைச்சரின் பேரழிவு நிவாரண நிதி’ என்று இருந்த திட்டத்துக்கு பதிலாக, இது நுழைக்கப்பட்டது. இது, எந்த வெளிப்படைத் தன்மையும் இல்லாமல், ஒளிவு மறைவானதாகவும், தன்னிச்சையானதாகவும், எந்த கணக்கீட்டுக்கும் உட்படாததாகவும் உள்ளது. இந்த நிதிக்கு வந்த வரவு தொகை, செய்த செலவு ஆகியவற்றை தெரிவிக்குமாறு எழுந்த கோரிக்கைகள் எதற்கும், பிரதம மந்திரியின் அலுவலகம் பதிலளிக்க மறுத்துவிட்டது. இது வெளிப்படை தன்மையான ஆட்சி முறைக்கும், தகவல் பெறும் உரிமைக்கும் நேர்எதிரானதாகும்.

## தேர்தல் சீர்திருத்தம்:

21. பணபலம், தசை பலம் மற்றும் அரசு இயந்திரம் ஆகியவற்றின் தவறான பயன்படுத்தல்களால், சாதாரண மக்களின் உண்மையான விருப்பங்களில் இருந்து தேர்தல்களை வெகு தூரம் தள்ளி வைத்து விட்டது. தேர்தலில் போட்டியிடுவதில் எல்லோருக்கும் சம வாய்ப்புகளை உறுதிப்படுத்த, முறையான, விரிவான மற்றும் முழுமையான சீர்திருத்தங்கள் தேவை. நமது அரசியல் மற்றும் ஒழுக்க நெறி நெருக்கடிக்கு ஆளாகியுள்ள இந்த காலத்தில், அரசாங்கமே தேர்தல் செலவுகளை ஏற்க வேண்டும் என்ற இந்திரஜித் குப்தா கமிட்டியின் பரிந்துரை மிகவும் பொருத்தமானது ஆகும். வெற்றி பெறுவதற்கு வாய்ப்புடைய முதல் இரண்டு பேருக்கு இடையிலான போட்டியாக தேர்தல் மாற்றப்படுவதால், இந்த இருவரில் ஒருவருக்கு அளிக்காத வாக்குகள் வீணாகும் வாக்குகள்

என மக்கள் கருதுவதால், பணபலம் மற்றும் தசை பலம் கொண்ட பெரிய கட்சிகளுக்கு மட்டுமே சாதகமான முடிவு வருகிறது.

22. உண்மையான பிரதிநிதிகளை தேர்வு செய்ய வைப்பதற்கு நமது தேர்தல் முறையில் மாற்றங்களை அறிமுகப்படுத்த வேண்டிய நேரம் இது. விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத்தை நாம் வலியுறுத்த வேண்டும்.விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையைத் தேர்ந்தெடுப்பது, அரசியல் கட்சிகள் மற்றும் தனிநபர்களுக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு சமமான வாய்ப்புகளை வழங்கும்.

## குடியரசுத் தலைவர் தேர்தல்

23. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் வாக்களித்து பிஜேபி வேட்பாளரான திருமதி திரௌபதி முர்மு அவர்களை 15வது குடியரசுத் தலைவராக தேர்வு செய்துள்ளனர். அவருக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது வாழ்த்துகளைத் தெரிவிக்கும் அதே நேரத்தில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வரையப்பட்டுள்ள விழுமியங்களை உயர்த்திப் பிடிக்கவும் பாதுகாக்கவும் அவரைத்தான் அரசியலமைப்புச் சட்டம் பாதுகாவலராக வைத்திருப்பதால், அந்தக் கடமையை அவர் நிறைவேற்றுவார் என நம்புகிறது. பல எதிர்க்கட்சிகள் சேர்ந்து யஸ்வந்த் சின்காவின் பெயரை பொது வேட்பாளராக முன்மொழிந்தன. அவர் 36 சதவீத வாக்குகள் வரை பெற்றிருக்கிறார். கடந்த 50 ஆண்டுகளில் வேறு எந்த எதிர்க்கட்சி வேட்பாளர் பெற்ற வாக்குகளை காட்டிலும் இது மிக அதிகம். என்றாலும் எதிர்க்கட்சிகள் ஒன்றுபடுவதற்கு தடையாக பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. அதனால் தான் குடியரசு தலைவர் தேர்தலில் பிஜேபி வேட்பாளரை, தேசிய ஜனநாயக கூட்டணியில் இல்லாத பல கட்சிகள் வெவ்வேறு காரணங்களைக் கூறி ஆதரித்தன. தமது சொந்த கட்சி முடிவை மீறி பிஜேபி வேட்பாளருக்கு வாக்களித்ததும் சில மாநிலங்களில் நடந்திருக்கிறது. வருகிற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பிஜேபியை எதிர்த்து போரிட ஒரு உறுதியான எதிர்க்கட்சி கூட்டு வேண்டுமானால், இந்த பிரச்சினைகள் எல்லாம் அதற்கு முன்னதாகவே தீர்க்கப்பட வேண்டும்.

## வெளியுறவுக் கொள்கை

1. தேசிய அரசுகளின் வெளியுறவுக் கொள்கைகள் பொதுவாக அவற்றின் உள்நாட்டுக் கொள்கைகளின், மற்றும் குறிப்பாக பொருளாதார கொள்கைகளின் நீட்டிப்பாகும். இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்த பிறகு, மோடி அரசின் வெளிநாட்டுக் கொள்கை, பெரிய உலக சக்திகளுக்கிடையே சமநிலைப்படுத்திக் கொள்ளும் திசையில் தொடர்கிறது. ஆனாலும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலை நோக்கிய ஒரு சாய்வு காணப்படுகிறது. இது சில பிரச்சினைகளில் மோதல்களுக்கு வழிவகுக்கிறது.

2. சர்வதேச தளங்களில் அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய நலன்களுக்கு நெருக்கமான நிலையை இந்தியா எடுத்து வருகிறது. ஆசியாபசிபிக் பிராந்தியத்தில் QUAD மற்றும் AUKUS ஆகியவற்றினால் “ஒரு திறந்த, உள்ளடக்கிய மற்றும் விதி அடிப்படையிலான இந்தோபசிபிக்“ உருவாகிவிட்டதைப் போல ஒரு பொய் தோற்றம் காட்டி பல்வேறு ஒப்பந்தங்களில் இந்தியா கையெழுத்திட்டது. லாஜிஸ்டிக்ஸ் எக்ஸ்சேஞ் ச் மெமோராண்டம் ஆஃப் அக்ரீமென்ட் (LEMOA) போன்ற பாதுகாப்பு ஒப்பந்தங்கள், தகவல்தொடர்பு இணக்கத்தன்மை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் (COMCASA) மற்றும் இறுதியாக அடிப்படை பரிவர்த்தனை ஒத்துழைப்பு ஒப்பந்தம் (BECA) பிராந்தியத்தில் அமெரிக்கா தலைமையிலான கட்டமைப்பில் இந்தியாவை இணைத்து, அமெரிக்காவின் மூலஉத்தியான “ஆசிய மையம்“ என்ற இலக்கை அடைவதை நோக்கி நகர்கின்றன.

## குவாட் மற்றும் ஐபிஇஎஃப்பி

3. இந்த ஆண்டு மே மாதம் டோக்கியோவில் நடைபெற்ற கடைசி குவாட் கூட்டத்தில் “செழிப்புக்கான இந்தோபசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பு” (IPEFP)உருவானது. இந்தோ பசிபிக் பகுதியின் பரந்த பகுதியில் 23 நாடுகளுடன் தைவானும் உள்ளது. ஆசியா என்பது, கிழக்கு ஆசியா, ஓசியானியா, தூர கிழக்கு ரஷ்யா, தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியா

உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கிய விரிவான மண்டலமாக இருப்பதால் 13 நாடுகள் இந்த கூட்டமைப்பில் இணைய விருப்பம் தெரிவித்தன.

4. IPEFP என்பது ஆசியாபசிபிக் பிராந்தியத்தில் வளர்ந்து வரும் சீனாவின் பொருளாதார சக்தி மற்றும் அரசியல் செல்வாக்கைக் கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாகும். IPEFP முன்முயற்சியின் பின்னணியில், அமெரிக்கா இருக்கிறது. இந்தோபசிபிக் பிராந்தியத்தில் தனது ராணுவத்துக்கான தளங்களை ஏற்படுத்தி அச்சுறுத்துவது அதன் இலக்கு. ஐரோப்பாவில் அமைந்தது போன்று, ஒருவித “ஆசிய நேட்டோ” ராணுவ கூட்டணியை அமைப்பதே அமெரிக்க நிர்வாகத்தின் உண்மையான நோக்கம். தெற்காசிய மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் இந்த அமெரிக்க முன் முயற்சி திட்டத்திற்குள் இணைய மறுத்து ஒதுங்கி நிற்கும் போது, அந்தக் கட்டமைப்பில் இந்தியா பங்கேற்பது, இந்த நாடுகளிலேயே இந்தியாவின் மதிப்பைப் பெரிதும் குறைத்து விடும்.

5. பிடென் நிர்வாகம் கடினமாக முயற்சி செய்தாலும், தற்போதைய உலகம் ஒரு துருவ உலகமாக இல்லை. மனிதத் தன்மையற்ற பொருளாதாரத் தடைகள், அச்சுறுத்தல்கள், முற்றுகைகள் மற்றும் ராணுவ நடவடிக்கைகள் மூலம், உலக வல்லரசாக மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப அமெரிக்கா முயற்சிக்கிறது. ரஷ்யாஉக்ரைன் போரில் அமெரிக்காவின் பங்கு இதற்கு ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டு ஆகும்.

6. எந்த ராணுவக் கூட்டணியிலும் சேர மாட்டோம் என்று இந்தியா வெளிப்படையாகக் கூறுவதோடு, ரஷ்யாஉக்ரைன் போர் பிரச்சினையில் நியாயமான நிலைப்பாட்டை எடுத்தது. ஆனால், அதே நேரத்தில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிடம் இருந்து ராணுவ ஆயுதங்கள் கருவிகளைக் கொள்முதல் செய்வதை அதிகரித்துள்ளது, நமது பாரம்பரிய நட்பையும், பாலஸ்தீனத்திற்கு நாம் அளித்து வரும் ஆதரவையும் விட்டுக் கொடுத்து விடுவதாக அமைகிறது. முதன்முறையாக ஐக்கிய நாடுகள் சபையில் இஸ்ரேலுக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்து, பாலஸ்தீனிய மனித உரிமைகள் அமைப்புக்கு, ஐக்கிய நாடுகள் அமைப்பில் பொருளாதார மற்றும் சமூக கவுன்சில் (ECOSOC) பார்வையாளர் தகுதியை பெறவிடாமல் தடுத்தது

7. தற்போதைய பல துருவ உலகத்தில், இந்தியா இன்னும் ஆக்கப்பூர்வமான பாத்திரத்தை வகிக்க வேண்டும். ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) ஆகியவற்றில் இந்தியா பங்கேற்கிறது. இதன் மூலமாக நாடுகளுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்தவும், பயங்கரவாதத்திற்கு எதிராக இணைந்து போராடவும், சமத்தன்மையற்ற உலக முறைமையில் இருந்து விடுபடுவதற்கான போராட்டங்களை முன்னெடுக்கவும் இந்தியா பெரும் பங்காற்ற முடியும்.

8. பாலஸ்தீன மக்கள், கிழக்கு ஜெருசலத்தை தலைநகரமாகக் கொண்ட தமது தாய் நாட்டுக்காக நடத்தும் போராட்டத்தை ஆதரிப்பது நமது நாட்டின் வெளியுறவுக் கொள்கையின் உறுதியான நிலைபாடுகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. இஸ்ரேலுக்கு இணங்கிவிடாமல், இந்த நிலைப்பாட்டில் தொடர்ந்து உறுதியாக இருக்க வேண்டும்.

9. இந்தியாவில் மனித உரிமை மீறல்கள், வழிபாடு மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திரம், கருத்தை வெளியிடும் உரிமை ஆகியவற்றுக்கு எதிரான போக்கு வளர்ந்து வருகிறது என பல சர்வதேச மனித உரிமை கழகங்கள் மற்றும் அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன. இந்த விஷயத்தின் மீது அரசு ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும்; தீர்வு காண முயற்சிக்க வேண்டும்.

## நமது அண்டை நாடுகள்

8. அண்டை நாடுகளுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ளாதது இந்தியாவின் மிகப்பெரிய தோல்வி ஆகும். கெடுவாய்ப்பாக, தற்போதைய அரசாங்கத்தின் உள்நாட்டு வகுப்புவாதக் கொள்கை, அண்டை நாடுகளுடனான குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் தொடர்பான வெளியுறவுக் கொள்கையிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இந்த எதிர்மறை அணுகுமுறை இன்னும் ஆட்சி அமை பண்பு உறுதிப்படுத்தப்படாத ஆப்கானிஸ்தானுடனும் நல்ல உறவுகளை உருவாக்க நமக்கு உதவவில்லை. மேலும், சார்க் (SAARC) அமைப்பு மீதான அரசியல் அக்கறையின்மை மற்றும் அனைத்து அண்டை நாடுகளுடனான உறவு நிலையை கொதிப்பும் கசப்புமாக வைத்திருப்பது பாஜக அரசின் வெளியுறவுக் கொள்கையின் தோல்வியாகும்.

9. இந்தச் சூழலில், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே உள்ள உறவுவில் விரிசல்கள் ஏற்பட்டு வருவது தெற்காசிய பகுதியில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தும். இது கவலைக்குரிய விஷயமாகும். பிரதமர் மோடி மற்றும் சீனப் பிரதமர் ஜி ஜின்பிங் இடையேயான இரண்டு உச்சி மாநாடுகளுக்குப் பிறகு இருதரப்பு உறவுகளில் சில ஆக்கபூர்வமான வளர்ச்சி வெளிப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையே ஆழமான உரையாடல், பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் சிறந்த புரிந்துணர்வு உருவாகும் என நம்பிக்கை இருந்தது. ஆனால், ஜூன் 2020ல் இரு படைகளுக்கும் இடையே நடந்த மோதலில் 20 இந்திய வீரர்கள் கால்வான் பள்ளத்தாக்கில் கொல்லப்பட்டது நிலைமையை மாற்றிவிட்டது. இந்த நிகழ்வு இந்திய மக்களின் மனத்தில் பல உணர்வுகளை உருவாக்கியுள்ளது.

10. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினையில், ஏப்ரல் 2022க்கு முன்பு இருந்த நிலைகளிலேயே இரு படைகளும் நிற்க வேண்டும், அனைத்து பிரச்சினைகளும் இருதரப்புக்கும் இடையே சுமூகமாக பேசித் தீர்க்கப்பட வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோருகிறது. இதற்கு இரு நாடுகளும் எல்லை பிரச்சினைகளைப் பற்றி பேசி எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் உரிய தீர்வு காண வேண்டும்.

## முன்னோக்கிய பாதை

11. தற்போதைய சர்வதேச சூழ்நிலையில், அனைத்து நாடுகளுடனும் குறிப்பாக அண்டை நாடுகளுடன் நெருங்கிய உறவை, ஊக்குவித்து வளர்க்கும் வெளியுறவுக் கொள்கையை உருவாக்க வேண்டும். புதிய காலனி ஆதிக்கத்துக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக, உலக அமைதி, சமமான உலக முறைமை ஆகியவற்றுக்காகவும் போராடுகிற மக்கள் சக்தியை ஒன்று திரட்டவும், வளரும் நாடுகளில் பொருளாதாரத்தை ஒன்றிணைக்கவும் இந்தியா முயற்சிக்க வேண்டும். ஆனால், துரதிஷ்டவசமாக மோடி அரசின் கொள்கைகள் இதற்கு நேர் மாறாக அமைந்துள்ளன. ஒரு சுதந்திரமான வெளியுறவு கொள்கை இந்தியாவுக்கு வேண்டும் எனக் கோரி கட்சி தொடர்ந்து போராட வேண்டும்.

# பொருளாதாரம் குறித்த கண்ணோட்டம்

1. பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில், புதிய தாராளமயக் கொள்கைகளின் முரட்டுத்தனமாக திணிக்கப்படுவதின் தாக்கத்தை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். மோடியின் ஆண்டுகளில், ஒட்டுமொத்தமாக பொருளாதார வளர்ச்சி மற்றும் உற்பத்தித்திறன் மெதுவாக குறைந்து பொருளாதாரம் தேக்கமடைந்து நிற்கிறது. ஏற்கனவே பொருளாதாரம் மந்த வேகத்துக்கு வந்து விட்ட சூழ்நிலையில், இன்னும் கேடு விளைவிக்கும் வகையில், பணமதிப்பு நீக்கம், ஜிஎஸ்டி மற்றும் பாஜக அரசின் பிற தவறான பொருளாதாரக் கொள்கைகள் திணிக்கப்பட்ட தன் காரணமாக இவை மெதுவான வளர்ச்சியையும் அடைத்து பின்னோக்கி தள்ளுகின்றன. ஒவ்வொரு துறையிலும் வளர்ச்சி குறைந்து தேக்கமாகி வேலையில் இருந்து தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டனர். வேலை இன்மையும் வேலை இழப்பும் இன்று தலைவிரித்தாடுகின்றன. நாம் சில முக்கியமான துறைகளையும் அவை கடந்த ஆண்டுகளில் செயல்பட்ட முறையையும் கீழே பார்க்கலாம்.

## வேளாண்மை

2. விவசாயத் துறையானது நாட்டில் உள்ள தொழிலாளர்களில் கிட்டத்தட்ட பாதிப் பேரை வேலைக்கு அமர்த்தியுள்ளது. நமது பெரும்பாலான தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கும் நமது உணவுப் பாதுகாப்பிற்கும் முக்கியமான துறையாக உள்ளது. நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு 17.5% மட்டுமே உள்ளது. ஏறக்குறைய பாதி பணியாளர்களை வேலைக்கு அமர்த்திய பிறகும், நமது விவசாயிகள், விவசாய தொழிலாளர்களுக்கு குறைவான பங்கையே கொடுத்து வருகிறோம் என்பதை இது தெளிவாக்குகிறது. ஏதோ சில இடத்தில் விவசாய உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் இடையே செழுமை இருக்கலாம். ஆனால், ஒட்டுமொத்த இந்தியாவில், விவசாயிகள் விவசாயத்

தொழிலாளர்களின் நிலை நமது சமூகத்திடம் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட, அழியப் போகிற பிரிவாக மாற்றியுள்ளது. இந்த நாட்டுக்கு உணவு படைக்கிற துறை. இதன் மீது அரசின் கவனம் குவிய வேண்டும். விவசாய நெருக்கடி என்றால் அதற்கு நாட்டின் நெருக்கடி என்றே பொருள்.

3. பல காரணிகளால் விவசாயம் ஆபத்தில் உள்ளது. 2012 -13-ல் கிட்டத்தட்ட 140 மில்லியன் ஹெக்டேர் நிலம் விவசாய நிலமாக இருந்தது. ஆண்டுதோறும் விவசாய விலை நிலப்பரப்பு குறைந்து கொண்டே வருகிறது. ஒரு ஹெக்டேருக்கும் குறைவான நிலம் வைத்துள்ள விளிம்பு நிலை விவசாயிகளின் எண்ணிக்கை 1971ல் 3.6 கோடியாக இருந்தது, 2011 இல் 9.3 கோடியாக உயர்ந்து விட்டது. இந்த எண்ணிக்கை உயர்வுக்கு, விவசாயத்தின் கீழ் உள்ள மொத்த பரப்பளவு குறைந்து, பங்குநிலம் துண்டு துண்டானது ஒரு காரணமாகும். தரிசு நிலங்களை விளைச்சல் நிலங்களாக மாற்றுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய சுவாமிநாதன் ஆணையத்தின் பரிந்துரையை அரசு கவனத்தில் கொள்ளவே இல்லை. சிறிய நிலம் வைத்திருப்பவர்கள் இயந்திரமயமாக்கல் மற்றும் நீர்ப்பாசன நுட்பங்கள் இல்லாமை போன்ற பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். சிறிய அளவு நிலங்களை வைத்துக் கொண்டு வேலை செய்வது, குடும்பங்களைத் தக்கவைத்துக் கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்துகிறது. எனவே, வேலையைத் தேடி, நகரங்களுக்கும் மாநகரங்களுக்கும், பெருமளவிலான மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். முற்றிவரும் வேளாண்மை நெருக்கடியை சமாளிக்க ஒருங்கிணைந்த நிலச்சீர்திருத்தத்தை அமலாக்குவது தேசத்தில் முக்கிய விவாத பொருள்களில் ஒன்றாக மாற வேண்டும்.

4. பாஜக ஆட்சியில் விவசாயத்தின் மீதான புதிய தாராளவாதத் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. உரங்கள், ஏற்றுமதி தொடர்பான தவறான கொள்கைகளால், கிராமப்புற விவசாயப் பகுதிகளில் வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்கி வாழ்க்கையில் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் கிராமங்களை விட்டு மக்கள் வெளியேறவும், அந்த

விவசாயத்தில் கார்ப்பரேட்டுகள் நுழைவதற்கு வசதி செய்து தரவும், மோடி அரசு வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்து, விவசாய விளைபொருள் முதல் மற்றும் குறைந்தபட்ச ஆதார விலையை வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற்ற பிறகும் கூட, சட்டப்படி குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) உறுதி செய்யப்படவில்லை. அரசு கொள்முதல்நடப்பு நிதியாண்டில் கோதுமை 53 சதவீதம் குறைந்து, 182 லட்சம் டன்னாக உள்ளது. மோடி அரசுக்கு, விவசாயம் குறித்த கொள்கையை வகுப்பதில் குழப்பமும், விவசாயத்தின் மீதான பொறுப்பின்மையும் இத்துறைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

## சுரங்கம்

5. சுரங்கத் துறையானது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 2.5 சதவீதத்தையும், கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்களுக்கு நேரடியான வேலைவாய்ப்பையும் வழங்குகிறது. அதுமட்டுமின்றி, இயற்கை வளங்களை அகழ்ந்தெடுக்கும் சிறிய அளவிலான சுரங்கங்கள் பல குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளன. இருப்பினும், முந்தைய ஆண்டில் இந்தத் துறை தொடர்பாகப் பன்முக சிக்கல்கள் எழுந்தன. திறனற்ற முறையில் கொள்கைகளை உருவாக்கியதன் காரணமாக, நாடு முழுவதும் நிலக்கரி தட்டுப்பாடும், அதன் விளைவாக மின்வெட்டும் குடிமை வாழ்வையும் நிலக்கரி மற்றும் மின்சார உற்பத்தி இரண்டையும் வெகுவாக பாதித்தன. தீவிர தனியார்மயமாக்கலும், சரியாக மேற்பார்வை செய்யப்படாததும் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கின்றன. நாட்டின் பல பகுதிகளில் பெருமளவில், சட்டவிரோதமாக மணலை அகழ்ந்து கொள்ளையிடுவதால், இயற்கை வளம் பாழாக்கப்படுவதோடு, தண்ணீரை மணல் படுகை வாயிலாக நிலங்கள் உறிஞ்சி நீர் ஊடுறுவும் இயற்கை செயல்பாட்டையும் அழித்து வருகின்றன.

## உற்பத்தி

6. நாட்டில் உற்பத்தித் துறை கடுமையான பிரச்சினைகளை எதிர்கொள்கிறது. மிகப் பெரும் பகுதியாக உள்ள சிறு

தொழில் உற்பத்தியாளர்கள் அனுபவிக்கும் துயரங்களை பார்க்கும் போது, எதார்த்தத்தில் நிகழ்ந்து கொண்டிருப்பது என்ன என்பதையே அரசாங்கம் அறிந்து கொள்ளவில்லை என்பதை பட்டவர்த்தனமாக்குகிறது. இந்த சிறிய அளவிலான தொழிற்சாலை அலகுகள், பணமதிப்பிழப்பு மற்றும் ஜிஎஸ்டியால் உற்பத்தித்திறன் மற்றும் செயல்பாடுகளில் பெரும் பாதிப்பைச் சந்தித்தன. கோவிட்19ன் போது பொருளாதார செயல்பாடுகள் நிறுத்தப்பட்டது. ஆனால், அதற்கு முன்பிருந்தே கூட சிறு தொழில் உற்பத்தி வளர்ச்சி குறைந்து மந்தமாகி போனது. அதிகரித்து வரும் செலவினங்கள், சந்தையில் விற்பனை தேக்கம், கொள்கைகளில் குழப்பம் ஆகியவை காரணமாக பல பெரிய அளவிலான உற்பத்தியாளர்கள் பங்களாதேஷ் போன்ற அருகிலுள்ள சந்தைகளுக்கு தங்கள் நடவடிக்கைகளை மாற்றியுள்ளனர். சிறு குறு நடுத்தர தொழில்களின் தான் மிக அதிக வேலை வாய்ப்பு வழங்கி வருவதால் அத்துறையின் மீது அரசு அதிக கவனத்தை செலுத்த வேண்டும்.

## <u>கட்டுமானம்</u>

7. நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கட்டுமானத்தின் பங்கு சுமார் 10% ஆகும். கிராமப்புறங்களில் இருந்து நகரங்களுக்கு புலம்பெயர் தொழிலாளர்களின் பெரும்பகுதியினருக்கு கட்டுமான துறை தான் வேலை வாய்ப்பு அளிக்கிறது. கட்டுமான வேலைகள் மிகவும் ஆபத்தானவை, பாதுகாப்பற்றவை, மேலும், குறைந்த ஊதியத்தை தருபவை. இந்த துறையிலும் கூட அண்மை ஆண்டுகளாக வேலை வாய்ப்புகள் குறைந்து விட்டது துரதிஷ்டவசமானது தான். கொரோனா பொதுமுடக்க காலத்தில் ஊருக்கு திரும்பிச் சென்ற தொழிலாளர்கள் மீண்டும் திரும்ப வந்து அதே நிச்சயமற்ற நிலையை எதிர்கொள்ள தயங்குகின்றனர். மிகப் பெரும்பாலான பெருமளவில் கட்டுமா உள்கட்டுமானங்களை நிறைவேற்றி இருப்பதாக அரசாங்கம் பெருமையடித்துக் கொண்டாலும், அதில் வேலை பார்த்து குறைந்தபட்ச ஊதியத்தைப் பெறுவதும் கூட கடினமாக

உள்ளது. பெண் தொழிலாளர்களின் பிரச்சினை இன்னும் கடுமையானது. ஒழுங்குபடுத்தப் படாத இந்தத் துறையில் அவர்கள் ஊதிய இடைவெளி, பாகுபாடு மற்றும் அதிக அளவிலான ஆபத்துக்களை எதிர்கொள்கின்றனர்.

## சேவைகள்

8. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேவைத் துறை 50 சதவீதத்திற்கும் மேல் பங்களிக்கிறது. கோவிட் 19 தொற்றுநோயின் தாக்கம் சேவைத் துறையில் மிக மோசமானதாக இருந்ததால், இந்தியாவின் மொத்த மதிப்பில் சேவைத் துறையின் பங்கு 2019-20-ல் 55 சதவீதத்திலிருந்து, 2021-22-ல் 53 சதவீதமாகக் குறைந்திருக்கிறது. வெறும் நான்கு மணி நேர அவகாசத்தில், மோடி வெளியிட்ட பொதுமுடக்க அறிவிப்பால், போக்குவரத்து, ஹோட்டல், சில்லறை வர்த்தகம் பொழுதுபோக்கு போன்ற துறைகள் உடனடியாக முற்றிலும் மூடப்பட்டன. நிதி, ரியல் எஸ்டேட் மற்றும் தொழில்முறை சேவைகளும் சரிவைச் சந்தித்தனர். இந்தியாவின் பன்முகப்பட்ட சேவை துறைகள் இருந்தாலும் அவை அனைத்தும் தனியார் துறையில் தான் குவிந்துள்ளன. பெரும்பாலும் சமூகத்தின் பின் தங்கிய மக்கள் அதில் பணிபுரிகிறார்கள். திடீரென மூடப்பட்டதால் அவர்களிடமிருந்து வாழ்க்கையே பறிக்கப்பட்டு விட்டது.

## தொழிலாளர் நிலையும், வேலையின்மை நெருக்கடியும்

9. மக்களுக்கான வேலை வாய்ப்பைப் பற்றி கவலையே படாமல் அரசாங்கம் தூங்கிக் கொண்டிருப்பதால், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஆழமடைந்து வருகிறது. ஆண்டுக்கு 2 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம் என்று ஆட்சிக்கு வருவதற்கு முன் பாஜக வாக்குறுதி அளித்தது. ஆனால், தொற்றுநோய் ஆண்டுகளில் கோடிக்கணக்கான மக்கள் வேலை இழந்துள்ளனர். பொதுத்துறை நிறுவனங்களை செயலிழக்கச் செய்து, தனியார் துறைக்கு முன்னுரிமை தந்து முன் தள்ளுவதால், ஏற்கனவே தொழிலாளர்களின் வேலை மற்றும் ஊதியத்துக்கான உத்தரவாதத்திற்கு சாவு மணி அடிக்கப்பட்டு விட்டது.

ஆண் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் வேலை வாய்ப்பு கூட, பெண் தொழிலாளர்களுக்குக் கிடைக்காத சூழல் உள்ளது. பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களுக்கு வேலை தரும் ரயில்வே பணிகளைப் பிரித்துப் பிரித்து காண்ட்ராக்ட் விடுதல், பொதுத்துறை வங்கிகளைத் தனியார் மயப்படுத்துதல் ஆகியவற்றால் வேலை வாய்ப்புகள் சுருங்கி வருகின்றன. தொற்றுநோய்க்கு முன்பே, வேலையின்மை அதிகரித்து விட்டது. கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலை வாய்ப்பு அற்றவர் விகிதம் உச்சத்திற்கு சென்று இருக்கிறது என்பது மோடி அரசாங்கம் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதைப் பற்றி எந்த கவலையும் படவில்லை என்பதன் வெளிப்பாடாகும்.

10. நாட்டின் மொத்த தொழிலாளர்களின் 90 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள், ஏறத்தாழ 50 கோடி பேர், அமைப்பு சாரா தொழிலாளர்களாக உள்ளனர். ரயில்வே, தனியார் மயமாவதால் வேலைவாய்ப்பு சுருங்கி விட்டது. 30 லட்சம் பேர் மட்டுமே பாதுகாப்பான நிரந்தர வேலைகளில் உள்ளனர். இதில் சரி பாதிக்கு மேற்பட்டவர் ராணுவத்தில் இருக்கிறார்கள். அமைப்பு சார்ந்த தொழிலாளர் பற்றிய உழைப்பு பற்றிய ஆய்வுகளின் முடிவு, குறைந்தபட்சம் 10 தொழிலாளர்களைக் கொண்ட, முக்கியமான 9 விவசாயம் அல்லாத துறைகளில் செயல்படும் நிறுவனங்களில் சுமார் 3.10 கோடி தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள் என தெரிவிக்கிறது. இது மொத்த தொழிலாளர் எண்ணிக்கையை சுமார் 6% ஆகும். மற்ற 96% எந்த உத்தரவாதமும் இல்லாத அமைப்பு சாராத வேலைகளில் குவிந்திருக்கிறார்கள். அமைப்பு சார்ந்த தொழில் நிறுவனங்களில் கூட, எந்தச் சமூகப் பாதுகாப்பும் இல்லாத தற்காலிக மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. வேலையும் சம்பளமும் கிடைக்குமா கிடைக்காதா என்று தெரியாத நிச்சயமற்ற சூழ்நிலையை உருவாக்கி தொடர்ந்து அதிகரித்து செல்கிறார்கள். ஆண் தொழிலாளர்களின் நிலையை விட பெண் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பும் ஊதியமும் இன்னும் படுமோசமான நிலையில் உள்ளது.

11. இந்தியாவின் பெரும்பான்மையான தொழிலாளர்கள் எந்த சட்டப் பாதுகாப்பும் சமூக பாதுகாக்கும் இல்லாமல் பணிபுரிகிறார்கள். 20% பேருக்கு கூட சம்பளத்துடன் கூடிய

விடுமுறை இல்லை. விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள மிகப்பெரும்பாலானவர்களுக்கு சொந்தமாக துண்டு நிலம் கூட இல்லை. தற்காலிகத் தொழிலாளர் என்று பெயர் வைத்திருப்பார்கள். ஆனால், ஆண்டு கணக்கில் தொடர்ச்சியாக வேலை வாங்குவார்கள். மற்றவர்கள் பார்க்க தயங்குகிற கடினமான மற்றும் சுகாதாரக் கேடான வேலைகளை இவர்கள் தலையில் சுமத்துகிறார்கள். துயரத்தை மேலும் கூட்டும் வகையில், மோடி அரசாங்கம் சட்டப் படியான குறைந்தபட்ச ஊதியத்தை கூட சில ஆண்டுகளாக உயர்த்தவே இல்லை. நாள் ஒன்றுக்கு ரூ178 முதல் 180 வரை தான் குறைந்தபட்ச ஊதியம் இருக்கிறது. இதைக் கூட தருவதற்கு முதலாளிகள் மறுத்தாலும் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில்லை. கைக்கும் வாய்க்கும் பற்றாத இந்த சம்பளத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய முடியாத அவல நிலைக்குத் தொழிலாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

12. நாட்டின் இளைஞர்களின் எதிர்காலம் இருளடைந்து கிடக்கிறது. மோடி அரசின் அக்கறையற்ற மற்றும் தவறான கொள்கைகளால் நம் கண் முன்னே ஒரு பேரழிவு நடந்து கொண்டிருக்கிறது. நாட்டின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய தொழில் சேவையில் மொத்தம் 1.42 கோடி பேர் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 1.29 கோடி பேர் 18 முதல் 44 வயதுள்ளஇளைஞர்கள். அதே ஆண்டில், அறிவிக்கப்பட்டுள்ள காலியிடங்கள் 71,447 மட்டுமே என்பது எவ்வளவு பரிதாபகரமானது! தேவைப்படும் வேலைகளுக்கும் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகளுக்கும் இடையே மலைக்கும் மடுவுக்குமான பெரும் ஏற்றத்தாழ்வு இருக்கிறது. அதிலும் மோடியின் ஆட்சியில் இந்த பிளவு பெரிதும் அதிகரித்து விட்டது. மக்கள் மோடி மீது மக்கள் வைத்த நம்பிக்கைக்கு அவர் துரோகம் செய்துவிட்டார். குறிப்பாக இளைஞர்களின் எதிர்காலத்தை இருளடைய செய்து விட்டார்.

## **‘அக்னிபாத்’ திட்டம்**

13. வேலை கிடைக்காத, விரக்தியடைந்த ஆண்களும் பெண்களுமான இளைஞர்கள் அமைதியற்றவர்களாக கொதித்துக் கொண்டிருக்கிறார்கள். அண்மைக்காலத்தில்

பீகார், உத்தரபிரதேசம் போன்ற மாநிலங்களில் ரயில்வேக்கு ஆள் எடுக்கும் போது பெருமளவிலான போராட்டங்களை வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் நடத்தினார்கள். அண்மையில் ராணுவத்தில் சேரும் இளைஞர்களுக்கான 'அக்னி பாத்' என்ற நான்காண்டு ஒப்பந்தக் கூலி முறையை அரசு அறிவித்துள்ளது. சித்தாந்த வழிகாட்டுதல் ஏதுமில்லாமல், சமூக வலைத்தளம் போன்ற புதிய ஊடகங்களின் செல்வாக்கால் பெருமளவிலான இளைஞர்கள் உதிரிகளாக மாற்றப்படுவது தெரிகிறது. வாய்ப்புகளுக்கான கதவுகள் அவர்கள் முகத்தில் சாத்தப்படும் போது அவர்களுக்குள் எழும் விரக்தியும் கோபமும் அவர்களை இந்துத்துவ கருத்தியலுக்கு இழுத்துச் செல்கிறது. பாரபட்சமான, முரண்பாடான மற்றும் சமூகத்தில் சண்டையை ஊக்குவிப்பதையே இந்த நாட்டின் விழுமியங்கள் எனக் கருதச் செய்யும் வெறுப்பு மற்றும் பிறவற்றின் அடிப்படையில் உருவாகும் இந்த கருத்தியல் நமது எதிர்காலத்தை விஷமாக்குகிறது. அக்னிபாத் திட்டம் மக்களை இராணுவமயமாக்கும் ஒரு மோசமான வடிவமைப்பின் ஒரு பகுதியே என்று அஞ்சப்படுகிறது. இதை ஆர்எஸ்எஸ் கையில் எடுத்துக் கொண்டு, நான்காண்டுகள் நிறைவுக்கு பின் ராணுவத்திலிருந்து வெளியேறும் இந்த பயிற்சி பெற்ற வீரர்களை ஆர்எஸ்எஸ் தனது சொந்த சேனைக்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

## மாற்று பொருளாதாரத் திட்டம்

1. பொருளாதாரத்தின் மேற்குறிப்பிட்ட சூழ்நிலையையும், சமூகத்தில் அதன் மோசமான கசிவுகளையும் கருத்தில் கொண்டு, நமக்குத் தேவையான மாற்றுப் பொருளாதாரத் திட்டத்தை மக்களிடம் நாம் வைத்தாக வேண்டும். இந்த திட்டம் முழுமையானதாக, மக்களை மையப்படுத்தி, சமூக மேம்பாட்டை உறுதி செய்வதாக இருக்க வேண்டும்.நமது அரசியலமைப்புச் சட்டமும் அதன் வழிகாட்டு நெறிகளும் முன்வைக்கிற வலிமையான நலஅரசுக் கொள்கைகளைப் பாதுகாக்க வேண்டும். அதே நேரத்தில் புதிய தாராள மயக்கு கொள்கைகளுக்கு 'மாற்று எதுவும் இல்லை' என்ற கேள்விக்கு திறமையாக பதிலளிக்கவும் வேண்டும். தாராளவாத, தனியார்மைய சுரண்டல், சுற்றுச்சூழல் சீர்கேடு மற்றும் சமத்துவமின்மை ஆகிய அவசர கவனம் தேவைப்படும்

பகுதிகளுக்கு பதில் அளிக்க வேண்டும். எனவே, ஒரு மாற்றுப் பொருளாதாரத் திட்டத்திற்கான சுருக்கம் இங்கே விவாதிக்கப்படுகிறது.

2. நமது நாடு இயற்கை வளங்களும், மனித வளமும் நிறைந்த நாடு. அரசு தவறாகத் தேர்வு செய்த முன்னுரிமைகள், புதிய தாராளமயத்தை சார்ந்து நிற்பது, அரசு சார்ந்த முதலாளித்துவத்தை வளர்த்து ஊக்கப்படுத்துவது, எங்கும் பரவிய ஊழல் ஆகியவை சாதாரண மனிதர்களின் வாழ்க்கையை துயரத்துக்கு ஆட்படுத்தி, அதே வேளையில் குறிப்பிட்ட சிலரது கருவூலத்தை நிரப்பிக் கொண்டிருக்கிறது. சமூகத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு சமத்துவத்துடனும் அக்கறையுடனும் விநியோகிக்கப்பட்டால், அனைத்து மக்களின் அடிப்படைத் தேவைகளையும் முற்றாக பூர்த்தி செய்ய நமது நாட்டின் வளங்கள் போதுமானவை என்றே நாம் கருதுகிறோம். இது மக்களுக்கு ஆதரவான, விரிந்த நோக்கங்களை கொண்ட, எதிர்காலத்துக்கான மாற்றுப் பொருளாதாரத் திட்டத்தின் வெளிக்கோடு ஆகும்.

## பருவட்டான பொருளாதார முன்னுரிமைகளை மறுசீரமைத்தல்

3. நமது மக்களின் தேவைகளை நிறைவு செய்ய போதுமான வளங்களை நமது நாடு கொண்டுள்ளது என்பதைக் கணக்கில் எடுத்து, நமது பொருளாதாரத்தின் பரந்த திசையை நாம் சீரமைக்க வேண்டும். உள்நாட்டு சந்தை மீது கவனம் செலுத்துகிற பொருளாதாரத்திற்கு பதிலாக, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் முன்னுரிமை தரப்பட்டு வருகிறது.

4. நமது பொருளாதாரம் சமூகத் துறைக்கு சரியான அணுகுமுறையுடன் முன்னுரிமை அளிக்க வேண்டும். உணவுக்கான உரிமை, கல்வி, உடல்நலம், வீட்டுவசதி, சுகாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவை அரசால் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். அதிக முதலீட்டை ஈர்ப்பதோடு, வேலைவாய்ப்பை உருவாக்குவதில் முழு கவனம் இருக்க வேண்டும்.

5. நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% கல்விக்காகவும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% உடல்நலம் மற்றும் சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் வேலைவாய்ப்பு

உருவாக்கத்துக்காகவும், 2% ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காகவும் ஒதுக்கப்பட வேண்டும்

6. WTO, IMF, உலக வங்கி போன்ற சர்வதேச அமைப்புகளில், வளரும் நாடுகளுடன் சேர்ந்து, இந்த நிறுவனங்களை ஜனநாயக படுத்தவும் உலக பொருளாதாரத்தை பிரதிபலிக்கக் கூடியதாக மாற்றவும் இந்தியா போராட வேண்டும்.

7. இந்தியா அல்லாத வளரும் நாடுகளின் வங்கியை நிறுவுவதில் முன்னணியில் இருக்க வேண்டும். பாகுபாடு காட்டாத கொள்கைக்கு எல்லைக்கல் நட்டாக வேண்டும்.

8. ஆசிய நாடுகளுக்கு இடையேயான பணப்பரிமாற்றங்களில், அமெரிக்க டாலரை தவிர்த்து விட்டு தமது சொந்த நாணயங்களையே செலுத்துவதற்கு வசதியாக ஆசிய நிதிய ஒன்றியத்தை உருவாக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## வறுமை ஒழிப்பு

9. சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்குப் பிறகும் நம் நாடு வறுமையில் வாடுகிறது. இந்த தீமையிலிருந்து நம் நாட்டை மீட்டெடுக்க தீவிர வறுமை ஒழிப்புத் திட்டத்தை முன்னுரிமை தந்து அமலாக்கி முடிக்க வேண்டும்

10. இந்த நோக்கத்திற்காக, வறுமைக் கோடு என்பதை, தீவிர வறுமை மற்றும் வறுமைக்கும் இடையிலானதாக மறு நிர்ணயம் செய்ய வேண்டும் (சமூக ரீதியாக குறைந்தபட்ச தேவையான நுகர்வு என வரையறுக்கப்படுகிறது).

11. உற்பத்தித் துறையில் அதிக வேலை வாய்ப்பு மற்றும் நீண்ட காலத்திற்கு பயன் தரக்கூடிய வறுமை ஒழிப்பு திட்டத்திற்கான அடிப்படை பொருட்கள் மற்றும் சேவைகளை உருவாக்குவதன் மூலம் பிரச்சினைகளை முழுமையாகக் கையாள வேண்டும். இந்த விஷயத்தில், தேசிய நகர்ப்புற வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் இயற்ற வேண்டும் என்பதற்கான பொதுமக்கள் கருத்தை நாம் தொடர்ந்து செயல்பட்டு உருவாக்க வேண்டும்.

12. பொருள் பொதிந்த வேலைவாய்ப்பை உருவாக்குவதுதான், முதலீட்டைத் தீர்மானிப்பதில் அளவுகோலாக இருக்க வேண்டும்.

இது சமூகத் துறைக்காகச் செலவழிக்கப்படும் தொகையை கூடுதலாக்குவது, சிறு, குறுந் தொழில்களை ஊக்குவிப்பது, பணவீக்கத்தை உறுதியாகக் கட்டுக்குள் வைப்பது ஆகியவற்றோடு இணைக்கப்பட வேண்டும்

13. மக்களுக்கிடையிலும் மற்றும் மண்டலங்களுக்கு இடையிலும் சமமான பகிர்வையும் வேலைவாய்ப்பையும் உறுதி செய்வதற்காக திட்ட ஆணையத்தை மறுபடியும் கொண்டுவர வேண்டும்.

## பொருளாதாரக் கட்டமைப்பு

14. பொருளாதாரத்தின் கட்டமைப்பில் நேர்மறையாகத் தலையிட்டு, சமத்துவமின்மை சரி செய்யப்பட வேண்டும். அதீதச் செல்வக்குவிப்பு ஏற்படாத வகையில், வருமானத்துக்கு உச்சவரம்பு, மிகவும் முற்போக்கான வருமான வரி, செல்வ வரி, மூலதன ஆதாயங்கள், எஸ்டேட் கடமைகள், பரிசுகள் ஆகியவற்றின் மீதான வரிவிதிப்புகள் மூலம் கட்டுக்குள் வைக்க வேண்டும்.

## விவசாயம்,சுரங்கம், காடுகள்

15. விவசாயமும் அதைச் சார்ந்த செயல்பாடுகளும், நமது நாடு மற்றும் நம் பொருளாதாரத்தின் முதுகெலும்பு ஆகும். வேளாண் இடுபொருள் செலவுகளைக் குறைப்பதன் மூலமும், விவசாயிகளுக்குச் சாதகமாக வர்த்தக விதிமுறைகளை மாற்றுவதன் மூலமும் விவசாயத்தை கட்டுபடியாகும் தொழிலாக்க வேண்டும். நுகர்வோர் செலுத்தும் விலையில் அதிக பங்கு உற்பத்தியாளர்களுக்கு சென்றடைய வேண்டும் வகையில் இடைத்தரகர்களின் செல்வாக்கைக் குறைக்க வேண்டும்.

16. அனைத்து பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலையை உறுதி செய்ய வேண்டும். நியாய விலையை வழங்குவது, விவசாயத்துக்கு புத்துயிரூட்டும். பாரம்பரிய பயிர் முறைகள், காலநிலைக்கு இசைவான விவசாயத்தை மானியங்கள் மற்றும் அரசுத் தலையீடுகள் மூலம் ஊக்குவிக்க வேண்டும். அதே நேரத்தில் பயிர் காப்பீடு விரிவடைந்ததாக, விவசாயியின் இழப்பை ஆகக் கூடிய அளவுக்கு குறைப்பதாக அமைய வேண்டும்.

17. விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அனைத்து சமூக நலன்களையும் வகுத்து, அவை வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

18. மக்களை மையமாகக் கொண்ட, முற்போக்கான பொது விநியோகத் திட்டத்தின் வழியாக, அனைவருக்குமான உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். உலகளாவிய பொது விநியோக அமைப்பு. பொது மக்களுக்கு அரசு, நேரடிப் பணப் பரிமாற்றம் செய்யலாம் என்றாலும், அது ஒருபோதும் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் தரவேண்டிய உரிமைகளுக்கு மாற்றாக அமையக் கூடாது..

19. விரிவான ஒருங்கிணைந்த நிலச் சீர்திருத்தம் மற்றும் வேளாண் கூட்டுறவுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் நிலம் துண்டாடப்படுதல் மற்றும் நிலமின்மை ஆகியவற்றைச் எதிர் கொள்ள வேண்டும்.

20. நீண்ட கால சுற்றுச்சூழலைக் கருத்தில் கொண்டுதான் சுரங்கம், வனம் மற்றும் மரம் வெட்டுதல் அனுமதிக்கப்பட வேண்டும். சுரங்கம் அல்லது வனத்துறைக்கான எந்தவொரு திட்டமும் உள்ளூர் மக்களின் நலனை மையமாகக் கொண்டிருக்க வேண்டும்.

21. மீன்வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி, சிறு உற்பத்தியாளர்களுக்கு கூட்டுறவுகளை ஏற்படுத்தி ஊக்குவிக்க வேண்டும். ஆராய்ச்சியில் அரசு சாதகமாக தலையிட வேண்டும். மேம்பாட்டுக்கான ஆய்வு, சந்தைப்படுத்துதல் மற்றும் கடன் வழங்குதல் ஆகிய நடவடிக்கைகளில் அரசு ஆக்கப்பூர்வமாகத் தலையிட வேண்டும்.

## உற்பத்தி மற்றும் தொழில்கள்

22. தொழில்துறையில் ஏகபோகங்கள் திறம்பட தடுக்கப்பட வேண்டும் மற்றும் விலை நிர்ணய மையங்களைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். சோதனைக்கு உட்படுத்த வேண்டும். அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களுக்கு வேலை தரும் தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

23. கார்ப்பரேட் நிர்வாகத்தின் கட்டமைப்பு ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும்; வெளிப்படைத் தன்மையோடு இருக்க வேண்டும். அனைத்து சட்டங்களுக்கும், ஒழுங்குமுறைகளுக்கும் இணங்குவதை

உறுதி செய்ய வேண்டும். தனியார் நிறுவனங்களிலும், பட்டியல் இனத்தவர், பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை அமலாக்கி, உள்ளடக்கம் மற்றும் சமூக நீதியை உறுதிப்படுத்த வேண்டும்.

## சேவைகள்

24. சேவை துறையிலும் அதிக மூலதனம் வேலை வாய்ப்பு இல்லை என்ற நிலைக்கு பதிலாக, அதிக அளவில் தொழிலாளர்களுக்கு நிறுவனங்களை ஊக்குவிக்க வேண்டும். வணிகம், போக்குவரத்து, வங்கி, காப்பீடு போன்ற பெரிய துறைகளில் அனாவசியமான செலவுகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

## உள்கட்டமைப்பு

25. சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கிற வகையில், மிகப்பெரும் அளவு தொகைகளை முதலீடு செய்வதற்கு பதிலாக, உள்ளூர் தேவைகளில் கவனம் செலுத்தி, அதற்கு உகந்ததாக உற்பத்தி இருக்க வேண்டும்.

26. உள்ளூரிலேயே உற்பத்தியும் நுகர்வும் அமையும் நிலையை ஊக்குவிப்பதன் மூலம் போக்குவரத்துத் தேவை குறைக்கப்பட வேண்டும், பணியிடத்திற்கு அருகாமையில் குடியிருப்புக்கான ஏற்பாடுகளும், ஆற்றல் கொண்ட பொதுப் போக்குவரத்து ஏற்பாடும் வேண்டும்.

## பாதுகாப்பு

27. பாதுகாப்பு வரவுசெலவுத் திட்டத்தைக் குறைக்க, அண்டை நாடுகளுடன் நட்பும் அமைதியும் ஊக்குவிக்கப்பட வேண்டும். இந்த மண்டலத்தில் அமைதிக்கான முன்னோடியாக இந்தியா மாற வேண்டும். இதற்கு, ஆயுதப் போட்டியும் பகைமையும் கைவிடப்பட வேண்டும். பாதுகாப்புத் துறையைத் தனியார்மயமாக்குவது நிறுத்தப்பட வேண்டும்.

## சமூகத் துறை

28. அனைத்து மட்டங்களிலும் பொது சுகாதாரம் மற்றும் பொதுக் கல்வியை வழங்குவதை, அரசு பெரிதும் ஊக்குவிக்க வேண்டும். குறைந்த செலவில் உயர்தர கல்வி மற்றும் சுகாதாரம் மக்களுக்கு கிடைக்க வேண்டும். நோய் வரும் முன்பே கண்டறிந்து தடுக்கவும், சுகாதார மற்றும் பொது நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

29. உயர் கல்விக்கு ஆயத்தப்படும் அனைத்து பிரிவினருக்கும் குறைந்த செலவில் கொடுக்கப்பட வேண்டும். உதவித்தொகையை அதிகரிக்க வேண்டும் மற்றும் மாணவர்களுக்கு ஆய்வு ஆதரவு பெறும் பிற நிறுவனங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.

30. மருத்துவச் செலவுகளைக் குறைக்க மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்களின் விலைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். கட்டாய உரிமம் மற்றும் ஜெனரிக் மருந்துகளை ஊக்குவிக்க வேண்டும்.

31. உறுப்பு வங்கிகள் மற்றும் இரத்த வங்கிகளை வலுப்படுத்த வேண்டும். இரத்த தானம் செய்பவர்கள் மற்றும் உறுப்பு தானம் செய்பவர்களுக்கான தேசிய பதிவேட்டை உருவாக்க வேண்டும். குருதிக் கொடையாளி அட்டை என்பது உண்மையான குருதிக் கொடையாளியின் செயல்பாடு இன்றி, பல்வேறு மருத்துவமனைகளின் கூட்டமைப்பில் இயங்கவேண்டும்.

32. அனைவருக்கும் வீடுகளை அவர்களால் வாங்க முடிந்த விலையில் முன்னுரிமை பங்கு கட்டிக் கொடுக்க வேண்டும். வீட்டுவசதி செய்து தரும் வேலையை இப்போது ரியல் எஸ்டேட்காரர்கள் கையில் எடுத்து இருக்கிறார்கள் அவர்களுக்கு அரசு ஊக்கமளிக்கக்கூடாது.

33. விரைவு நீதிமன்றங்கள் மூலமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு துரிதமாக தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

## நிதி

34. நாட்டின் வரி மொத்த உற்பத்தி ஆகியவற்றின் விகிதம் 25% ஆக உயர்த்தப்பட வேண்டும். நேரடி வரி விதிப்பு, தற்போது மக்கள் தொகையில் மேல் தட்டில் உள்ள ஒரு சதவீதம்

பேருக்கே விதிக்கப்படுகிறது. இதை 5% பேருக்கு விரிவு படுத்த வேண்டும். கருப்புப் பொருளாதாரத்தையும் லஞ்ச ஊழலையும் முற்றாக அகற்றுவதன் மூலம் பொருளாதாரத்தை மேலும் வெளிப்படையானதாக மாற்றலாம். ஆடம்பர நுகர்வு கடுமையான வரிவிதிப்புக்கு இலக்காக வேண்டும்.

35. கார்ப்பரேட் பெருநிறுவனங்கள் மற்றும் அதிக நிகர மதிப்புள்ள நபர்கள் மீது அதிக வரி விதிக்க வேண்டும். முற்போக்கான வருமான வரி அடுக்குகளை அறிமுகப்படுத்த வேண்டும்.

36. மூலதன ஆதாயங்கள், செல்வம், பரம்பரை சொத்து மற்றும் பரிசுகளுக்கும் வரிவிதிக்க வேண்டும்.

37. ஜிஎஸ்டி வரி வலைப்பின்னலை எளிமைப்படுத்த வேண்டும். இதனை ஜனநாயகப் படுத்தி, கூட்டாட்சிக் கட்டமைப்பிற்கு இசைவாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கவேண்டும்.

## இந்தியா என்ற கருத்தாக்கத்தின் மீது ஆர்எஸ்எஸ்ஸின் தாக்குதல்

1. ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக் சங்கம், அதன் சித்தாந்தத்தையும், அதன் இந்து ராஷ்டிரா திட்டத்தையும் முன் நகர்த்துவதில் கடந்த ஆண்டுகளில் ஆதாயம் அடைந்துள்ளது. மோடி அரசு ஆட்சிக்கு வந்ததில் இருந்து, ஆர்.எஸ்.எஸ் மிகுந்த வீரியத்தோடும், அரசின் முழு ஆதரவோடும் அதன் சொந்த செயல் திட்டத்தை நாட்டின் மீது திணிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறது. அவர்களின் கற்பனையிலுள்ள ‘இந்து ராஷ்டிரா’ நமது அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள எல்லாவற்றிற்கும் முரணானது. நாட்டின் விடுதலைக்காக பல தலைமுறைகளாக சுதந்திர போராட்ட வீரர்கள், எல்லாவற்றையும் தியாகம் செய்தனர். அவர்கள் எந்த விழுமியங்களுக்காக போராடினார்களோ அதை நமது அரசியலமைப்புச் சட்டம் வெளிப்படுத்துகிறது. காலனி ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு விசுவாசமாக இருந்த ஆர்.எஸ்.எஸ், இப்போது நமது சுதந்திர இயக்கத்தின் பாரம்பரியத்தையும், இந்தியாவை உண்மையான மதச்சார்பற்ற சோசலிச ஜனநாயக குடியரசாக உருவாக்கும் வேட்கையையும் அழித்து வருகிறது.

2. பாஜக அரசின் சர்வாதிகார செயல்பாடு மற்றும் அரசாங்கத்தின் செயல்பாட்டில் ஆர்எஸ்எஸ் சித்தாந்தக் குறுக்கீடுகள் ஆகியவை, ஜனநாயகத்தின் அதிகாரத்தையும் புனிதத்தையும்,

ஜனநாயகத்தின் தூண்களான அமைப்புகளையும் மட்டம் தட்டி வருகின்றன. மக்களின் விருப்பங்களை எதிரொலிக்க வேண்டிய நாடாளுமன்றம், இப்போது திறனற்றதாகவும் தொடர்பற்றதாகவும் மாற்றப்பட்டுவிட்டது. மிக முக்கியமான சட்ட வரையறைகள் கூட போதுமான விவாதத்துக்கும் சரிபார்ப்புக்கும் உட்படுத்தப்படாமலேயே, நாடாளுமன்றத்தில் பிஜேபிக்கு இருக்கும் பெரும்பான்மை காரணமாக போகிற போக்கில் நிறைவேற்றப்படுகின்றன.

3. இரண்டாம் தடவை ஆட்சிக்கு வந்ததுமே மோடி அரசாங்கத்தின் வலதுசாரி கொள்கை திருப்பம் பளிச்சன வெளியே தெரிந்தது. அரசியல் மட்டத்தில் மட்டுமல்ல அனைத்து வடிவங்களிலும் இந்தத் திருப்பம் வெளிப்பட்டது. நமது வரலாற்றையே திரித்து முன்வைத்தல் நமது தேசத்தின் அடிப்படைகளையே மறு வரையறை செய்தல் ஆகிய ஆர்எஸ்எஸ் முயற்சிகள் இப்போது அப்பட்டமாகத் தெரிகின்றன. அவர்களது வகுப்புவாத முப்பரிமான கண்ணாடி வழியாக நமது வரலாற்றையே வடிகட்டுகிறார்கள். நாட்டின் சிறுபான்மையினரை வெளிநாட்டு படை எடுப்பாளர்கள் என்றும், அவர்களுக்கு இங்கு வாழும் உரிமை உண்டா என்றும், அவர்களுக்கு தேசப்பற்று இருக்கிறதா என்றும் அரக்கத்தனமாக கேள்விகளை எழுப்புகிறார்கள்.

## கூட்டாட்சிமுறை மீதான தாக்குதல்

4. நமது கூட்டாட்சி முறைமை என்பது பல்வேறு மட்டங்களில் அரசுகளையும் அவற்றுக்கான வேலைப் பிரிவினைகளையும் கொண்டதாகும். மத்தியமாநில உறவுகளின் கட்டமைப்பு பற்றி அரசியலமைப்புச் சட்டம் ஐயத்துக்கு இடமின்றி வரையறுத்து இருக்கிறது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள மக்களிடையிலான வேற்றுமைகளையும், வேறுபடும் விருப்பங்களையும் மனதில் கொண்டு நமது அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்தவர்கள் அருமையான கூட்டமைப்பு கட்டமைப்பை வடித்து தந்தார்கள். ஆனால், இந்தப் பன்மைத்துவம் மீது ஆர்எஸ்எஸ் பகைமை கொள்கிறது. அவர்களது கருத்தின்படி இந்தி, இந்து இந்துஸ்தான் என நமது நாடு ஒற்றைத் தன்மை கொண்டது; அது பண்பாடு, மொழி, மாநிலங்களுக்கிடையிலான வேறுபாடுகள் இவற்றையெல்லாம் தட்டையாக்கி விடுகிறது. இந்த வகையிலான இந்தியாவை வென்றெடுப்பதற்காக, அரசியலமைப்புச் சட்டத்தின் கூட்டாட்சி

தத்துவத்தைக் கரைத்து, பல்வேறு வாய்ப்புகளில் மாநிலங்களின் உரிமைகளை ஆக்கிரமித்து, ஒற்றைப் பரிமாணத்தில் அதிகாரத்தை ஓட விட மோடி அரசு அயராமல் வேலை செய்கிறது. அரசு என்பது ஒன்றிய அரசை சார்ந்ததாக மட்டுமே மாற்றுகிற போக்கை எதிர்த்து பல மாநிலங்களும் அரசியல் கட்சிகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

## தேசிய கல்விக் கொள்கை

5. இந்தியாவின் பொது கல்வி முறைக்கு பேரழிவாக தேசிய கல்விக் கொள்கை, 2020 வந்திருக்கிறது. இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலேயே விதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் கல்வி பெறும் உரிமையை மதிப்பதில்லை. ஒரு அரசாங்கம் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிகளையும் பரிசீலிப்பதில்லை. மாநில உரிமைகளை ஆக்கிரமிக்கும் இந்த கொள்கை எந்த பரிசீலனைக்கும் உட்படுத்தப்படாமல் விவாதமே இன்றி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. கல்வியை வணிகமாக்குவது,வகுப்புவாதத் தன்மை கொண்டதாக மாற்றுவது, ஒன்றிய அரசின் அதிகார வளையத்துக்குள் மையப்படுத்துவது ஆகியவையே தேசிய கல்விக் கொள்கையின் நோக்கங்கள் ஆகும். எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்க மறுப்பதன் மூலம், பின்தங்கிய சமூகப் பின்னணி கொண்ட மாணவர்கள் மீது இது பாரபட்சம் காட்டுகிறது. சமூக நீதி கோட்பாடுகளுக்கு இது எதிராக இருக்கிறது. கல்வியாளர்கள், செயற்பாட்டாளர்கள், மாணவர் அமைப்புகள், அரசியல் கட்சிகள் மற்றும் கல்வி போதிப்பதில் பங்கெடுத்துக் கொள்வோர் எல்லாரும் தேசிய கல்விக் கொள்கையின் மேற்சொன்ன நோக்கங்கள் ஏற்க முடியாதவை என தெரிவித்திருக்கிறார்கள். இவற்றை மீறி தேசிய கல்விக் கொள்கையை திணிப்பதை எதிர்த்துப் போராடி முறியடிக்க வேண்டும்.

## ஜனநாயக அமைப்புகளை பலவீனப்படுத்துதல்

6. கடந்த எட்டு ஆண்டுகளாகவே நீதித்துறை செயல்பாட்டில் நிர்வாகத் துறையின் தலையீடுகளையும் பதட்டங்களையும் பார்த்து வருகிறோம். மத்திய புலனாய்வுத்துறை (CBI), அமலாக்கத்துறை(ED) வருமானவரித்துறை (IT), தேசிய புலனாய்வு முகமை (NIA)ஆகிய மத்திய அரசின் கீழ் இயங்கும் அமைப்புகளை, அவை நிறுவப்பட்டதன் நோக்கங்களுக்கு

விரோதமாக, எதிர்க்கட்சிகளை அச்சுறுத்துவதற்கும் சமூகத்தின் முன்பு அவமானப் படுத்துவதற்கும் கருவிகளாக ஒன்றிய அரசு அடிக்கடி பயன்படுத்தி வருகிறது. ஆர் எஸ் எஸ் பிஜேபி நடத்தும் இந்துத்துவா அணி வகுப்பில் அனைத்து மரபுகளும் உடைத்தெறியப்படுகின்றன. அரசியல் அமைப்புச் சட்டம் வகுத்து தந்த ஜனநாயக கட்டமைப்பு நொறுக்கப்பட்டு கொண்டிருக்கிறது.

## சிறுபான்மையினர் மீது தாக்குதல்களும் பாரபட்சமும்

7. ஆர்எஸ்எஸ் என்பது அடிப்படையில் இந்து ராஷ்ட்ரம் எனும் கருத்தியலை வரித்துக் கொண்ட அமைப்பு ஆகும். இந்து ராஷ்ட்ரா எனப்படுவதில், முஸ்லிம்கள் கிறிஸ்தவர்கள் போன்ற வேற்று மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடமில்லை. நாடு முழுமையிலும் சிறுபான்மையினர் மீது ஆர்எஸ்எஸ் திட்டமிட்ட தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி வருகிறது. இப்போது அரசு அதிகாரத்தை பயன்படுத்தி அவர்களுக்கு எதிராக பாரபட்சம் காட்டுகிறது. லவ் ஜிகாத், புர்கா, முத்தலாக் போன்ற தன்னால் ஜோடிக்கப்பட்ட காரணங்களை வைத்துக் கொண்டு சிறுபான்மையினர் மீது தாக்குதல் தொடுக்கப்படுகிறது. இவற்றைக் காணாமல் அரசு கண்ணை மூடி கொள்கிறது. இனப்படுகொலை செய்ய வேண்டும் என சாமியார்கள் அறைகூவல் விடுகிறார்கள். உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், அசாம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் உள்ள பிஜேபி அரசாங்கங்கள், பகிரங்கமாகவே முஸ்லிம்கள் மீது பாகுபாடு காட்டி வருகின்றன. புல்டோசர் கொண்டு வீடுகளை இடிப்பதெல்லாம் நீதியையே இடிப்பதாகும். முஸ்லிம்களை குறி வைக்கும் இந்த தாக்குதல்கள், சட்டத்தை அவமதிப்பவை, நீதித்துறையின் பங்கை மறுப்பவை, அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பாரபட்சமற்ற நடைமுறைக்கு எதிரானவை. தொடர்ந்து ஏதாவது ஒரு பிரச்சினையை எழுப்பி உரத்த குரலில் திரும்பத் திரும்ப சிறுபான்மையினருக்கு எதிராக செய்யப்படும் பிரச்சாரம், சமூகத்தை வகுப்பு வாரியாக இரு துருவங்களாக பிளவுபடுத்தும் வேலையாகும். மேலும், வேலையின்மை, விலை உயர்வு போன்ற மெய்யானப் பிரச்சினைகளிலிருந்து பொதுமக்களின் கவனத்தை திசை திருப்புவதாகும். சிறுபான்மையினர் உரிமையைப் பாதுகாப்பதற்காக போராடும்

அதே நேரத்தில், முஸ்லிம்களுக்குள்ளேயே சாதிய முறைமை உருவாக்கப்பட்டு இருப்பதையும் பஸ்மந்தா முஸ்லிம்கள் சமூக சமத்துவத்துக்கும், கண்ணியத்துக்குமாக போராடுவதையும், அவர்களுடைய மத குருமார்கள் இவர்கள் மீது பாகுபாடு காட்டுவதையும் கணக்கில் கொள்ள வேண்டும். அவர்களை பட்டியல் இனத்தில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன் வைக்க வேண்டும். சிறுபான்மை சமூகத்தினர் இடையே வளர்ந்து வரும் மத அடிப்படை வாதத்தையும் நாம் கணக்கில் கொண்டு, அவர்களை மதச்சார்பற்ற வகையில் அணி திரட்ட முயற்சிக்க வேண்டும்.

## தலித்துகள் மீது அதிகரிக்கும் தாக்குதல்கள்

8. பிஜேபியின் சித்தாந்தத் தந்தையான ஆர்எஸ்எஸ், நால்வர்ணங்கள் மீதும், அவற்றுக்காக வகுக்கப்பட்ட வேலைப் பிரிவினை மீதும், அதனை கட்டமைக்கும் சமூகப் படிநிலை மீதும் நம்பிக்கை கொண்ட மநுவாதி அமைப்பாகும். நால் வருணம் என்ற கொடூரமான கருத்தியல் தலித் மக்களை கல்வி சம வாய்ப்பு கண்ணியம் ஆகியவற்றிலிருந்து பல நூற்றாண்டுகளாக ஒதுக்கி வைத்து விட்டது; அதை இப்போதும் தொடர்கிறது. தலித்துகள் மீதான தாக்குதலும் அமைப்பு ரீதியாக பாகுபாடு செய்வதும் மோடி ஆட்சியில், ஆர்எஸ்எஸ் அதிகாரம் தலைதூக்கிய பிறகு, புதிய உயரத்தை எட்டியுள்ளன. டாக்டர் அம்பேத்கரால் போதிக்கப்பட்ட சமூக சமத்துவத்துக்கு, இந்துத்துவா கருத்தியல் நேர் எதிரானதாகும். ஆனால், விரிவடைந்த இந்து அடையாளத்துக்குள் தலித்துகளும் இருப்பதாகவும், அவர்கள் முஸ்லிம்களிடமிருந்து அச்சுறுத்தல் இருப்பதாகவும் ஆர்எஸ்எஸ் அளக்கிறது. அதே நேரத்தில், சமூகப் படிநிலைக்கோ, பாரபட்சங்களுக்கோ, சாதியக் கட்டமைப்புக்கோ எள் முனையளவும் சேதம் ஏற்பட்டு விடாமலும் பார்த்துக் கொள்கிறார்கள்.

## பழங்குடியினர் பற்றிய கேள்வி

9. பிஜேபி ஆட்சியின் கீழ் இந்தியாவின் பழங்குடி மக்கள் பன்முனைத் தாக்குதல்களை எதிர்கொண்டு வருகிறார்கள். ஒருபுறம் சுரங்கம் மற்றும் கனிம வளங்களை தனியார்

மையபடுத்தி வனங்களை அழிக்கிறார்கள். மறுபுறத்தில் சுற்றுச்சூழலில் கடுமையான பாதிப்பு பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தையே அச்சுறுத்துகின்றன. வனவாசிகள் எல்லாம் இந்துக்கள் என்றும், அவர்களை மீண்டும் இந்துக்களாக மதமாற்றம் செய்ய ஆர்எஸ்எஸ் நடவடிக்கை எடுக்கிறது. பாஜக ஆட்சியில் உள்ள பல மாநிலங்களில் மதமாற்றத் தடைச் சட்டம் இயற்றி, மக்கள் தமது நம்பிக்கையின்படி தான் ஏற்கும் மதத்தில் தொடரும் சுதந்திரத்தை கட்டுப்படுத்துகிறார்கள். நாட்டின் பல பகுதிகளில், கல்வி மற்றும் வேலைகள் கோரும் பழங்குடியின இளைஞர்களை நக்சலைட்டுகள் என்று பொய் சொல்லி சுற்றி வளைக்கிறார்கள். அரசியலமைப்பின் ஐந்தாவது அட்டவணையையும், வன உரிமைகளையும் கொண்டு வருவதில் இடதுசாரிகள் முக்கிய பங்கு வகித்தனர். ஆனால், அவற்றைச் செயல்படுத்தாமல் மீறி, பழங்குடியின மக்களின் உரிமைகளைப் பறிப்பது மிக கடுமையான பிரச்சினையாகும்.

## பிற்படுத்தப்பட்ட சாதியினர்

10. மண்டல் கமிஷனின் பரிந்துரைகள் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, 1990 களின் முற்பகுதியில், அரசியல் பிரதிநிதித்துவம், கல்வி சாதனைகள் மற்றும் வாழ்க்கை தர முன்னேற்றம் ஆகியவற்றைப் பார்க்க முடிந்தது. இது இதர பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக மேம்பாட்டுக்கு வழிவகுத்தது. எனினும், கடந்த மூன்று பத்தாண்டு கால அனுபவத்தின் பின்னர், மண்டல் கமிஷனின் அழுத்தமான பல அரசியல் விளைவுகளில், சாதி அடிப்படையிலான ஆதார தளங்கள் ஒன்று திரட்டப்பட்டதும் ஒன்றாகும். ஆர்எஸ்எஸ் பாஜக இவற்றையெல்லாம் ஒன்று அடக்கிய இந்து என்ற பெரிய அடையாளத்தின் அடிப்படையில் பல்வேறு சாதிகுழுக்களை ஒருங்கிணைத்து, மிகப் பெரிய இந்து வாக்கு வங்கியாக மாற்ற ஆர்எஸ்எஸ்பிஜேபி முயற்சிக்கிறது.

11. சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கை வேகமெடுத்து வருகிறது. போதுமான பிரதிநிதித்துவம் மற்றும் கொள்கை உருவாக்கத்தில் சாதித் தரவுகள் அவசியமாகின்றன. சாதிக் கணக்கெடுப்பையும் உள்ளடக்கி

ஐக்கிய முன்னணி அரசாங்கம் மக்கள் தொகை கணக்கீட்டில் இறங்கியது. ஆனால், பின்னர், வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அதை ரத்து செய்தது. பீகாரில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த ஒப்புக்கொண்டன. மற்ற மாநிலங்களில் உள்ள கட்சிகளும் இத்தகைய கோரிக்கையை எழுப்பின. ஆனால், பாஜக அரசு பிடிவாதமாக மறுத்து வருகிறது.

## பெண்களின் நிலை

10. நாட்டில் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகளில் ஆணாதிக்கமும் ஒன்றாகும். மனுவின் கட்டளைப்படி பெண்களுக்கு பொது வெளியில் அனுமதி இல்லை. இதைப் பின்பற்றும் ஆர்.எஸ்.எஸ்பா.ஜ.க, தன் உண்மையான நிறத்தைப் பல முறை வெளிக்காட்டி இருக்கிறது. விடுதலைக்குப் பின்பு இந்து சட்டத் தொகுப்பு மசோதா மீது கடும் சர்ச்சையில் அது ஈடுபட்டது.

பெண்கள் ஆண்களை விட கீழானவர்கள் என்று கருதப்படுவதோடு, குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காகவே பிறந்த அவர்கள், அதை மட்டுமே செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த எண்ண ஓட்டம், தொழிலாளர்களாக அல்லது தலைமைப் பொறுப்புகளில், ஒரு பெண் தனது பங்களிப்பை செய்ய இயலாமல் தடுத்துள்ளது. எப்படி பார்த்தாலும் கடைசியில் ஒரு பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற வரையறை இப்போதும் வலுப்படுத்தப்பட்டே வருகிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்களும் வன்முறைகளும் தொடர்ந்து நிகழ்கின்றன. பாஜக தலைவர்களே பெண் உரிமையை மறுக்கும் செயல்களில் ஈடுபடுகின்றனர். சட்டத்துக்கே விரோதமாக அவர்களை அரசு இயந்திரம் ஆதரிப்பதும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதாவை வலியுறுத்தி நமது கட்சி தொடர்ந்து போராடி வந்தாலும், மோடியின் ஆட்சியில் என்றும் அதற்கு விடியல் பிறக்கவில்லை.

13. பிஜேபி ஆர் எஸ் எஸ் ஆட்சியில் பெண்களின் சமூக நிலைமை மட்டுமின்றி, பொருளாதார நிலைமையும் மோசமாகி வருகிறது. ஆண்பெண் பால் இடைவெளி குறித்து 2022 இல் வெளியான உலக தரவரிசையில் 146 நாடுகளில் 136வது

இடத்தில் இந்தியா பின்தங்கி கிடக்கிறது. புதிய தாராளமயக் கொள்கைகள் வாழ்வாதாரத்தின் மீது தொடுக்கும் தாக்குதலில், பெண்கள் தான் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். உழைக்கும் மக்களில் பெண்களின் சதவீதம் தொடர்ந்து குறைந்து வருகிறது. பெண்களுக்கு கிடைக்கும் வேலைகளும் கூட வீட்டு வேலை, வீட்டிலிருந்து செய்கிற வேலை என்ற வகைகளிலேயே உள்ளன. இவையெல்லாம் 2019-21 ஆண்டுக்கான தேசிய குடும்ப நல அளவீட்டில் பளிச்சென வெளிப்படுகின்றன. 15-49 வயதுகளில் உள்ள பெண்களின் 57% பேர் ரத்தச் சோகை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அரசியலமைப்புச் சட்டத்தின் 73-74 வது திருத்தங்கள் உரிய முறையில் அமலாக்கப்படாததால் பெண்களின் அரசியல் பங்களிப்பும் தேவையைவிட வெகு தொலைவில் தேங்கி கிடக்கிறது. கிராமப்புற வேலை உறுதி திட்டத்தின் மீது திரும்பத் திரும்ப தாக்குதல் தொடுத்து வருகிறார்கள். அதற்கான நிதியை வழங்குவதற்கு காலதாமதம் செய்கிறார்கள். ஒன்றிய அரசின் மாற்றான் தாய் போக்கு, இந்தத் திட்டத்தைச் சார்ந்து வாழ்க்கை நடத்துகிற கிராமப்புற பெண்களை கடுமையாக பாதிக்கிறது.

## உருவாகும் அரசியல் சூழ்நிலை

1. மேற்கூறிய அரசியல் முன்னேற்றங்கள் மற்றும் பின்னணியில், நமது கட்சியை குறிப்பிடத்தக்க வகையில் வடிவமைத்து, தேசிய அளவில் செல்வாக்கு செலுத்த வைக்க நாம் என்ன செய்யப் போகிறோம் எனக் கண்டறிவதே நமது முக்கிய பணியாகும். வளர்ந்து வரும் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார நிலைமையை முழுமையாக புரிந்து கொள்வதற்கு, இந்தியச் சூழலில் மார்க்சிசம் லெனினிசத்தைப் பொறுத்திப் பார்ப்பதே ஒரே வழியாகும். நமது எதிர்கால அரசியல் வழியை வடிவமைக்கும் முன்பு, இந்திய சூழல் மற்றும் அதன் தனித்தன்மைகளை நாம் உணர வேண்டும். இந்தியா மிகவும் வித்தியாசமான சமூகக் கட்டமைப்பைக் கொண்ட வியக்கத்தக்க பன்முகத்தன்மை கொண்ட நாடு. அமைப்பு மற்றும் இந்த வரலாற்று மற்றும் சமகால தனித்தன்மைகளை நாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, இன்னும் முழுமையானதாகவும், யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் நமது அரசியல் உத்தி பாதையை உருவாக்க வேண்டும்.

## சாதி பற்றிய கேள்வி

2. இந்திய சமூகம் பரஸ்பர முரண்பட்ட நலன்களைக் கொண்ட வர்க்கங்களுக்கு இடையே மட்டும் பிரிக்கப்படவில்லை என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட வேண்டும். நெகிழ்ச்சியான, பிடிவாதமான மற்றும் படிநிலை கொண்ட சாதிய அமைப்பும் நம்மிடம் உள்ளது. அது. இந்தியாவைப் பற்றி எழுதுகையில், கார்ல் மார்க்ஸ் "இந்தியாவின் முன்னேற்றம் மற்றும் அதிகாரத்துக்கு மிகவும் தீர்க்கமான தடையாக சாதி உள்ளது" என்று, இந்தியச் சூழலில் சாதி மைய இடத்தை வகிக்கிறது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார். சாதி அமைப்பு பரம்பரையான வேலைப் பிரிவினையை உறுதி செய்கிறது. பிறப்பின் அடிப்படையில், ஏறக்குறைய ஒவ்வொரு நிலையிலும், வேலைக்கு வரும்போது திறப்பதா? அல்லது மூடுவதா? என முடிவு செய்கிறது. இதன் காரணமாக, சாதி ஏணியின் படிநிலையான அடிமட்டத்தில் உள்ளவர்கள், பொதுவாக நமது சமூகத்தின் மிகவும் ஏழ்மையான மற்றும் துரதிர்ஷ்டவசமான பகுதியாக உள்ளனர். அவர்கள் முதலாளித்துவத்தின் சுரண்டலையும் சாதி பாகுபாட்டின் தினசரி பாதிப்பையும் சேர்த்தே எதிர்கொள்கின்றனர். இந்திய சமூகத்தின் இந்த படிநிலை இயல்பை, வாய்ப்பின் சமத்துவ மறுப்பைப் புறக்கணித்து எந்த ஒரு புரட்சிகர உத்தியும் உருவாக்க முடியாது.

## மாறுகிற வர்க்க இயங்குவியல்

3. மூன்று பத்தாண்டுகளுக்கும் மேலாக, தாராளமயப்படுத்தப்பட்டு விட்ட நமது பொருளாதரத்தில், தொழிலாளி வர்க்கத்திலும் ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தனியார் முதலில், ஏராளமான தொகையை முதலீடு செய்ததால் எந்திரங்கள் நவீனமயப் படுத்தப்பட்டன. இது பணியிடத்தில் தன்மையை மாற்றியது. இப்போது அதிக திறனுள்ள தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள். பரவி வரும் புதிய தகவல் தொழில்நுட்பம் மீண்டும் தொழிலாள வர்க்கச் சேர்மானத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டு வந்தது. மிக சமீபமாக, கோவிட் 19 தொற்றுநோய் பல முதலாளிகளுடன் வேலை செய்யும் தன்மையிலும், குறிப்பாக தகவல் தொழில்நுட்பத் துறையில், மாற்றங்களைக் கொண்டு வந்தது. கிராமப்புற பொருளாதாரத்தில்

பெரும் முதலீடுகள் அனுமதிக்கப்படுவது விவசாயத்தை சார்ந்துள்ள மக்கள் தொகையின் வாழ்வாதாரத்தைப் பெரிதும் பதிக்கும்; அவர்களது. பெருமளவிலான நிலங்கள் பறிக்கப்பட்டுவிடும். தனியார் துறையில் வேலை கிடைக்காததாலும், அரசாங்கத்தின் ஆதரவு இல்லாததாலும் கிராமப்புற தொழிலாளர்கள் தரித்திர வாழ்க்கைக்குத் தள்ளப்படுவார்கள்.

4. நடுத்தர வர்க்கத்தினரின் எண்ணிக்கை வீங்கி அதிகரித்துள்ளது. அது பெரும்பாலும் தனியார் துறைப் பணியில் ஈடுபட்டுள்ளது. அவர்கள் வெவ்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்; வெவ்வேறு அரசியல் முன்னுரிமைகளை ஏற்கின்றனர். கருத்தை உருவாக்குபவர்களாக இந்தப் பிரிவு, செல்வாக்கு பெற்றுள்ளது. அவர்களின் பிரச்சினைகளில் ஈடுபட்டு அவர்களை நோக்கி செல்ல முயற்சிக்க வேண்டும். மேலும், செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பங்கள் காலூன்றுகின்றன. இது உழைக்கும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இந்த புதிய சூழல்களை நாம் புரிந்து கொண்டால் தான் எதிர்கால நடவடிக்கைகளுக்கு தகுதியாக நம்மை வளர்த்துக் கொள்ள முடியும். தொழிற்சங்கங்கள் டிஜிட்டல் தொழில் நுட்பத் துறைகளில் உள்புகுந்து, எந்தப் பாதுகாப்பும் இல்லாத சூழலில் இத்துறைகளில் பணி புரிந்து கொண்டிருக்கும் புதிய தொழிலாளர்களை அரசியல் படுத்த முயற்சிக்க வேண்டும் அதே நேரத்தில் பாரம்பரிய தொழில்களான விவசாயம், கட்டுமானம், உற்பத்தி தொழில்களிலும் நமது நடவடிக்கைகள் இன்னும் ஆழம் பெற வேண்டும்.

## ஆணாதிக்கம்

5. ஆணாதிக்கம் மற்றும் அதன் விளைவாக மக்கள் தொகையில் சரிபாதியான பெண்ணினத்தின் மீது வெறுப்பு என்பது மற்றொரு பெரிய பிரச்சினையாகும். பெண்களுக்கு எதிரான வன்கொடுமை நம் சமூகத்தை ஆட்டிப்படைக்கும் கொடுமையாக உள்ளது. பெண் விடுதலைக்கு எதிரான இந்தக் குறுகிய மனப்பான்மையையும் தமதாக்கிக் கொண்டு ஆர்.எஸ்.எஸ் அதிகாரத்தை எட்டிப் பிடிக்கிறது. அவர்கள் பெண்களை வீட்டின் நான்கு சுவர்களுக்குள் வைத்து, ஆண்களுக்கு அடிமையாக இருப்பதே அறம் எனக் கொண்டாடுகிறார்கள். குடும்பத்தில்

ஆண் உறுப்பினர்களின் தேவைக்கு ஏற்ப வேலை செய்து நல்ல இல்லத்தரசியாக இருப்பதே பெண்மையின் உன்னதம் என்று அந்தப் பெண்களையே நம்ப வைக்கிறார்கள். பெண்கள் பொது வாழ்வின் ஒரு பகுதியாக இருப்பதை அந்த அமைப்பு தொடங்கிய காலத்தில் இருந்து எதிர்த்து வருகிறது. பெண்களுக்கு சொத்துரிமை வழங்கும் இந்து சட்டத்தொகுப்பு மசோதாவை ஆர்எஸ்எஸ் எதிர்த்தது. பாஜக, ஆர்எஸ்எஸ் ஆட்சியில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீண்டும் அதிகரித்து, அவர்களுக்கு உரிய இடம் கிடைக்க விடாமல் கட்டுப்படுத்தப்படுகிறது. பெண்களின் போராட்டம் வெறும் பொருளாதார ரீதியானது மட்டுமல்ல; பண்பாட்டுப் போராட்டங்களும் சேர்ந்தது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## ஆர்எஸ்எஸ்–பிஜேபி கூட்டு

6. இந்தியா தற்போது, ஆர் எஸ் எஸ் இன் அரசியல் கரமான பாரதிய ஜனதா கட்சியால் ஆளப்படுகிறது. முசோலினி மற்றும் ஹிட்லர் ஆகியோரின் உத்வேகத்தால் உருவானது ஆர்எஸ்எஸ் என்று ஈர்க்கப்பட்டது, கோல்வால்கர் கொண்டிருக்கிறார். அவர்கள் தனியார் துணை ராணுவம் உட்பட தங்கள் அமைப்பில் பாசிச நிறுவனக் கொள்கைகளைப் பின்பற்றினர். இந்த அமைப்பு நமது மதச்சார்பற்ற, பிரதிநிதித்துவ ஜனநாயகத்துக்கு நேர் எதிராக, இந்துராஷ்டிரத்தை நிறுவுவதற்கு முழு முயற்சியில் இறங்கி இருக்கிறது. பாஜகவுக்கு பெரும்பான்மை கிடைத்ததால், அந்த அரசு எடுக்கும் அனைத்து கொள்கை முடிவுகளிலும். ஆர்.எஸ்.எஸ் முத்திரை உள்ளது. சமீபத்தில் தொடங்கப்பட்ட அக்னிபாத் திட்டமும் கூட இதே நோக்கத்தோடு உருவாக்கப்பட்டதுதான். ஆர்.எஸ்.எஸ் ஆட்களை இந்தக் குறுகிய கால சேவையில் சேர்ந்து, நான்கு ஆண்டுகளில், வெளியேற்றப்பட்டு வந்ததும் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக அவர்கள் பயன்படுத்தப்படுவர். ஓய்வுக்குப் பிறகு எதிர்ப்பு. எனவே, அவர்கள் நிறுவனம் ஆக்கப்பட்ட பெரும்பான்மை எதேச்சாதிகாரத்தை வெகு நுணுக்கமாக திட்டமிட்டு நிறுவி, அதற்கு ஆதரவாக நாட்டு மக்களை திரட்டுவதற்காக முஸ்லிம்களையும் கம்யூனிஸ்டுகளையும் பொது எதிரிகளாக சித்தரித்து வருகிறார்கள்.

7. முன்னதாக, ஆர்.எஸ்.எஸ் செல்வாக்கு நகர்ப்புற, மேல்சாதி, குட்டி முதலாளித்துவ வர்க்கம், வணிகர்கள், வர்த்தகர்கள் போன்றோர் மத்தியில் இருந்தது. ஆனால், அவர்கள் கிட்டத்தட்ட சமூகத்தில் அனைத்து பிரிவுகளிலும் கால நேரத்தையும், காசு பணத்தையும் பயன்படுத்தி ஊடுருவியுள்ளனர். ஆர்எஸ்எஸ் சார்புடைய அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மாணவர் அமைப்புகள் சுறுசுறுப்பாக செயல்பட்டு ஆர்எஸ்எஸ் சித்தாந்தத்தையும் செயல் திட்டத்தையும் வேகமாக பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். ராணுவம் மற்றும் நீதித்துறையிலும் ஆர்எஸ்எஸ் செல்வாக்கைக் காண முடியும். கிராமப்புறங்களிலும் கூட, ஆர்எஸ்எஸ் ஆதரவுடன் பல்வேறு சமூக மற்றும் அரசியல் அமைப்புகள் விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் தமக்குப் பின்னால் அணி திரட்ட வேலை செய்கின்றன. பா.ஜ.க., ஆட்சிக்கு வந்த பின், ஆர்எஸ்எஸ் ஆட்கள் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் சென்றடைவதற்கு அரசு திட்டங்கள் மிகவும் பயனுள்ள வழியாகவும் மாறியுள்ளன. அவர்களது வேலையை சட்டபூர்வமாகவே அதிக வீச்சோடு செய்வதற்கு, திட்டப் பணிகள் துணை புரிகின்றன. ஆர்.எஸ்.எஸ் சமூக ரீதியாக பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாறுபட்ட குழுக்களை ஒன்றிணைப்பதற்கு இந்துத்துவா கருத்தியலையும் ஒரு கருவி ஆக்குகிறது.பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சாதியினரை, இந்து ஒற்றுமை என்ற பெரிய அடையாளத்துக்குள்ளாக ஒன்று சேர்த்து விட அவர்கள் நினைக்கிறார்கள். அதே நேரத்தில் சாதியப் படிநிலை, சாதியின் பெயரால் பாரபட்சம் ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படாமலும் பார்த்து இருக்கிறார்கள்.

8. பிஜேபி பல மாநிலங்களில் ஆட்சியில் உள்ளது, குறிப்பாக இந்தி பேசும் பகுதிகளில் ஆதிக்க நிலையில் உள்ளது. உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் போன்ற வட இந்திய பெரிய மாநிலங்களில் பாஜக ஆட்சி நடைபெற்று வருகிறது. பீகாரில் ஐக்கிய ஜனதா தளத்துடனும், ஹரியானாவில் ஜனநாயக் ஜனதா கட்சியுடன் பாஜக ஆட்சியைப் பகிர்ந்து கொள்கிறது. பல வடகிழக்கு மாநிலங்களில் மாநில கட்சியுடன் கூட்டணி வைத்தும், அல்லது குதிரை பேரம் நடத்தியும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர். தெற்கில் கர்நாடகாவில் மட்டுமே பாஜக ஆட்சியில் உள்ளது. இந்த பிஜேபி அரசாங்கங்கள் ஆர்எஸ்எஸ் பின்னணி

கொண்டவர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. அவர்கள் மூலம் வெவ்வேறு மதத்தினர்களுக்கிடையேயான திருமணத்தைத் தடை செய்தல், மதமாற்ற தடைச் சட்டம் கொண்டு வருதல், மத நம்பிக்கையின் அடிப்படையில் மனிதர் கிடையே பாரபட்சம் காட்டுதல் போன்ற பழமைவாத சமூக செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தப் படுகின்றன. மாநில அரசாங்கங்களின் இந்த வேலைகளில் எல்லாம், ஆர்எஸ்எஸின் மேல் சாதி, ஆணாதிக்க மனநிலை வெளிப்படையாக தெரிகிறது.

## இந்திய தேசிய காங்கிரஸ்

9. மிகப்பெரிய எதிர்க்கட்சியான இந்திய தேசிய காங்கிரஸ், உள்கட்சி பூசல்களில் சிக்கியுள்ளது. கருத்தியல் ஒற்றுமை இல்லாததால், அதன் தலைமை மற்றும் கட்சி ஊழியர்கள் கட்சியிலிருந்து விலகுகிறார்கள். தேசிய அளவில், தேர்தல் போராட்டத்தில் பா.ஜ.க. வை எதிர்கொள்ள உறுதியான எதிர்க்கட்சி ஒற்றுமையை காங்கிரஸால் உருவாக்க முடியவில்லை. எதிர்க்கட்சிகளை ஒற்றுமைப்படுத்துவதற்கு மையமாக இருந்து செயலாற்ற வேண்டிய காங்கிரஸ் தனது கடமையை நிறைவேற்றவில்லை ஏராளமான மாநில அரசியல் கட்சிகள் தற்போது எதிர்க்கட்சி வரிசையில் மைய இடத்தைக் கோருகின்றன. ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய இரண்டு மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் உள்ளது. ஜார்கண்டில் கூட்டணி ஆட்சியில் பங்கேற்றுள்ளது. இந்த அரசாங்கங்கள் பிஜேபி ஆட்சிகளைப் போன்ற புதிய தாராளமயக் கொள்கைகளை வெகு சில கட்டுப்பாடுகளோடு கடைப்பிடிக்கின்றன.

10. பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகள் இரண்டிலும் ஒரு திடமான. பொருத்தமான எதிர்க்கட்சி ஒற்றுமை தேவைப்படுகிறது. மதச்சார்பின்மை விஷயத்தில் காங்கிரஸின் நிலைப்பாடு தெளிவாக இல்லை. அதன் தலைமை அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்படும் மதச்சார்பின்மையை முன்னிறுத்துவதற்கு பதிலாக இந்துயிசமா, இந்துத்துவாவா என்ற விவாதங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. பொருளாதாரத்தில், காங்கிரஸும், பாஜகவும் தாராளமயக் கொள்கைகளைத் தான் பின்பற்றுகின்றன.

இதன் விளைவாக மொத்த விவாதமும் வலதுசாரிப் பக்கம் திரும்பி விட்டன. ஆர்எஸ்எஸ், பிஜேபிக்கு மாற்று கூட்டணி அமைக்க வேண்டும் என்றால் உண்மையிலேயே அவர்களுடைய கொள்கைகளுக்கு மாற்றாக கூட்டணி இருக்க வேண்டும். காங்கிரஸ் கட்சி இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் பாஜகவின் புதிய தாராள மையக் கொள்கைக்கு பதிலாக, நேரு காலத்திய பொருளாதார முறைமையை ஏற்பது பற்றி பரிசீலிக்க வேண்டும். இப்பிரச்சினைகளை கருத்தியல் அடிப்படையில் விவாதிப்பதன் மூலம், எதிர்க்கட்சிகளிடையே ஒரு திடமான புரிதல் ஏற்பட வேண்டும்.

## மாநிலக் கட்சிகள்

11. பிஜேபியின் தேசிய மேலாதிக்க லட்சியங்களை அமல் நடத்த முடியாத அளவுக்கு சில மாநில கட்சிகள் பெரும் சவாலாக உள்ளன. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம், மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகளை ஒருங்கிணைத்து கூட்டணியை உருவாக்கி பாஜக அதிமுக கூட்டணியை தோற்கடித்தது. ராஷ்டிரிய ஜனதா தளம் தலைமையிலான கூட்டணி, பீகாரில் பாஜகஜனதா தளம் (யு) கூட்டணியை தோற்கடிக்கும் அளவுக்கு நெருங்கி, சிறிய வாக்கு வித்தியாசத்தில் தான் வாய்ப்பை இழந்தது. மேற்கு வங்கத்தில் ஆட்சியைப் பிடிக்க பாஜக பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதால் திரிணாமுல் காங்கிரஸ் அதிருப்தி அடைந்துள்ளது. ஜெகன் மோகன் ரெட்டி மற்றும் கே. சந்திரசேகர் ராவ் ஆகியோரின் மாநிலக் கட்சிகள் தான் ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் ஆட்சிநடத்துகின்றன. தென்னிந்தியாவில் பாஜகவின் இருப்பு குறைவாகவே உள்ளது. ஒடிசாவில் பிஜு ஜனதா தளம் தனது பிடியை பலப்படுத்தியுள்ளது. அங்கு பெரிய எதிர்க்கட்சியாக இருந்த காங்கிரஸை அகற்றி பிஜேபி அந்த இடத்தை பிடித்துள்ளது. உத்தரபிரதேசத்தில் பாஜகவுக்கு சமாஜ்வாதி கட்சி பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. தேசத் தலைநகரான டெல்லியில் ஆம் ஆத்மி கட்சி தனது ஆட்சியை தக்க வைத்துக் கொண்டதோடு அண்மையில் பஞ்சாபிலும் வெற்றி பெற்று இருக்கிறது. தேசிய அளவில் மக்களின் தேடுதல்கள் என்ன என்பதை இவை காட்டுகின்றன.

12. பெரும்பாலான மாநிலக் கட்சிகள் அரசியல் ரீதியாக மையத்தை ஒட்டியும், சமூகப் பழமைவாதம் நிறைந்ததாகவும் இருக்கின்றன. பெரும்பாலான மாநிலக் கட்சிகளுக்கு புதிய தாராளமயம் கொள்கைகளுக்கு எதிர் நிலை எடுக்க முடியவில்லை.அவை நிதி நிறுவனங்களின் கட்டளைகளைப் பின்பற்றுகின்றன. ஆட்சி நடத்தும் போது கிடைக்கும் அனுபவத்தால் கொள்கை விஷயங்களில், மாநில கட்சிகள் நிதி மூலதன ஓட்டத்தோடு இணைந்து, மேலும் மேலும் வலதுசாரி அரசியல் பக்கம் சாய்கிறார்கள். புதிய தாராள வாத கொள்கை மீதான அவர்களது கருத்தியல் சாய்வு, மாநில பொருளாதரத்தில் ஏக போகங்களுக்கு பெரும் இடத்தை கொடுத்து விடுகின்றன. பா.ஜ.க.வுக்கு மாற்றாக ஒரு முன்மாதிரியைக் கொண்டு வர, மாநிலக் கட்சிகள் அரசியலில் மைய இடத்திலாவது நிற்க வேண்டும்.

13. மதச் சான்றுகளை வெளிப்படையாகக் காட்டுதல், சாதி அடிப்படையிலான குழுக்களைச் சார்ந்திருத்தல், மேம்பாட்டுக்கான மாற்று வழிகளை கையில் எடுக்க தயக்கம், தொழிலாளர் உரிமைகளை, நிலை சீர்திருத்தத்தை அமலாக்குவதில் தயக்கம், சாதிய, ஆணாதிக்க மற்றும் சுரண்டல் சமூகத்தில் சீர்திருத்தங்கள் மற்றும் பெரும் மாற்றங்களைச் செய்வதிலும் தயக்கம் என்று நிலை எடுப்பதால் ஆர்எஸ்எஸ்ஸை சமூக ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் எதிர்கொள்ள இயலாமல் போகிறது. இது ஒரு வகையில் அரசு சொல்லும் அதே பாதைக்கு சாதகமாக ஆகிவிடுகிறது. ஆர்எஸ்எஸ்பாஜகவை தோற்கடிக்க பொருத்தமான கருத்தியல் ஒற்றுமையை உருவாக்குவதற்கு இப் பிரச்சனைகள் மீது உடனடியான அவசர கவனம் தேவை. துரதிர்ஷ்டவசமாக, இடதுசாரிகளின் தேர்தல் பின்னடைவுகளால், வலதுசாரிப் பொருளாதாரம் சில மாநில கட்சிகளுக்கு கவர்ச்சியாக தோற்றமளிக்கிறது. இந்தப் போக்கில் இருந்து அவர்களை மாற்றுவதற்கு, இந்தியச் சமூகத்தில் இடதுசாரிகளின் இருப்பு இன்னும் அதிகமாகவும் அடர்த்தியாகவும் இருப்பது அவசியப் படுகிறது. அதன் மூலம் தான் அவர்களது அரசியல் நிலையை மையத்துக்கு இடது என்ற அளவுக்காவது கொண்டு வர முடியும்

## கோட்பாடு அளவிலான எதிர்க்கட்சி ஒற்றுமை

14. மையத்திற்கு வலது என்ற அரசியல் நிலைபாடும் மற்றும் சமூக பழமைவாத ஆதரவும் கொண்டு ஆர்எஸ்எஸ் பாஜகவை தோற்கடிக்க முடியாது.. பொருளாதாரத்திலும் சமூகத்திலும் எவற்றையெல்லாம் வென்று எடுக்க வேண்டும் என ஆர்எஸ்எஸ் முயற்சிக்கிறதோ அதற்கு நேர் எதிரான வேலை திட்டம் எதிர்க்கட்சிகளுக்கு இருக்க வேண்டும். மையத்துக்கு இடது என்ற அரசியல் நிலையை எடுப்பது ஆர்எஸ்எஸ்பிஜேபிக்கு எதிரான ஒற்றுமையை கட்டுவதற்கு பொருத்தமாக இருக்கும். இதுபோன்ற ஒரு ஒற்றுமையை கட்டியமைக்க இடதுசாரிகள் முன் முயற்சி எடுக்க வேண்டும். இதற்கு இடதுசாரிகள் மக்களிடம் சென்று ஆர்எஸ்எஸ் செயல் திட்டத்திற்கு எதிராகவும், ஒரு தெளிவான பொருளாதார மாற்றுக்காகவும் சமூக ஒற்றுமைக்காகவும் மக்களை அணி திரட்ட வேண்டும்.

## இடது ஜனநாயக முன்னணி

15. கேரளாவில் இடதுசாரி ஜனநாயக முன்னணி நல்ல வாக்கு வித்தியாசத்துடன் வெற்றி பெற்று மீண்டும் பதவியேற்றது என்பதை இங்கு கவனிக்க வேண்டும். கேரள அரசியல் சூழலை எவ்வளவு தான் வகுப்புவாதம் கொண்டு மாசு படுத்த முயற்சித்தாலும் பிஜேபியால் ஒரே ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை. அங்கு இடதுசாரிகளின் வெற்றிக்கு காரணம் மக்களுக்கான, மாற்றுத் திட்டத்தை முன் வைத்ததன் விளைவுதான். அதனால் மக்கள் மீண்டும் இடதுசாரிகளை தேர்வு செய்தார்கள்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை வலுப்படுத்துதல்

1. நமது அரசியலமைப்பு சட்டம் வகுக்கப்பட்ட உடன் நடத்தப்பட்ட முதலாவது தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட்டது. அந்தப் பொதுத் தேர்தல்கள் 25 அக்டோபர் 1951 முதல் 21 பிப்ரவரி 1952 வரை நடைபெற்றது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மிகப்பெரிய எதிர்க்கட்சியாக உருவெடுத்தது. 1957ல் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் கிட்டத்தட்ட ஒன்பது சதவீத வாக்குகளை பெற்று 27 இடங்களை வென்று மீண்டும் எதிர்க்கட்சி தலைமையை தக்கவைத்தோம். வெகு ஜனங்களைத் திரட்டி நாம் நடத்திய நிலப் போராட்டங்களையும், தொழிலாளர் உரிமைகளுக்கான போராட்டங்களையும் நாம் நடத்திய பகுதிகளிலிருந்து தான் இந்த வெற்றிகள் நமக்கு கிடைத்தன. வங்காளப் பஞ்சத்தின் போது நாம் ஆற்றிய பணியும் நமது கலாச்சார இயக்கமும் நம்மை மக்களுடன் நெருக்கமாக எடுத்துச் சென்றன. மாநில சட்டப்பேரவைகளுக்கான தேர்தல்களிலும் நாம் வெற்றி பெற்றுள்ளோம். கேரளாவில் அமைக்கப்பட்ட புதிய அரசில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், மேற்கு வங்கம் ஆகியவற்றில் காங்கிரஸுக்கு எதிரான முக்கிய எதிர்க்கட்சியாக வந்திருக்கிறோம் மும்பையில் தொழிலாளர்கள் தொழிலாளி வர்க்கம் வாழ்கிற பகுதிகளில் தொழிற்சங்கங்களின் மூலம் நமது கட்சிக்கு தலைமை கிடைத்திருக்கிறது.

2. 1962 தேர்தல்களில் 10% வாக்குகளுடன் 29 இடங்களில் வெற்றி பெற்று தேர்தல் குறியீட்டில் மேலும் முன்னேற்றம் கண்டோம். உழுபவருக்கே நிலம் சொந்தம் என்ற நம்முடைய போராட்டங்கள் பீகார், உத்தரபிரதேசம், திரிபுரா, கேரளா, தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம் ஆகியவற்றில் பெரும் வரவேற்பு பெற்றது. அங்கு நாம் போர்க்குணமிக்க பெருந்திரளான மக்கள் போராட்டங்களை நடத்தினோம். இந்தப் போராட்டங்களில் நாம் பெற்ற வெற்றியும், ஈட்டிய செல்வாக்கும் பல்வேறு தேர்தல் வெற்றிகளுக்குக் கை கொடுத்தது. மேலும், நமது தொழிற்சங்கங்களும் விவசாய சங்கங்களும், இளைஞர், மாணவர், மற்றும் கலாச்சார நடவடிக்கைகளும் பெரும் வளர்ச்சி அடைந்தன.

1970 வரை நாம் ஒரு முக்கியமான நாடாளுமன்ற சக்தியாக உறுதியாக நிலைத்ததோடு, தேசிய செயல் திட்டத்திற்கு நமது ஆகப்பெரிய பங்களிப்பை செய்திருக்கிறோம். தொடர்ந்து நமது வெகுஜன போராட்டங்கள் படிப்படியாக குறைய தொடங்கின. நாம் ஒரு நாடாளுமன்றப் பாதையை மேற்கொண்டோம், அதுவே ஒரு முடிவை கொண்டு வந்து விட்டது என்றே பார்க்க வேண்டியுள்ளது.

3. போர்க்குணம் மிக்க, தொடர்ச்சியான, பெரும் மக்கள்திரள் பங்கேற்கும் போராட்டங்கள் போதிய அளவில் இல்லாதது மற்றும் தேர்தலில் மட்டும் கவனம் செலுத்துவது இரண்டு வகையிலும் நம்மைக் காயப்படுத்தியுள்ளது. வெகுமக்கள் போராட்டத்திற்கு தலைமை தாங்கியதால் நமது தளங்கள் உருவாகின. ஆனால், போராட்டங்கள் இல்லாத மந்த நிலையால், நமது தளங்கள் சிதறிப் போய்விட்டன. புதியப் பகுதிகளில் வெகுமக்கள் போராட்டங்களை நடத்த முடியாமல் போய்விட்டது. கட்சியில் ஏற்பட்ட பிளவு ஒரு பெரும் தீங்கை கொண்டு வந்தது. 1990களில் நமது வாக்கு 2.5% ஆனது. 1991 தேர்தல்களில் நாம் மக்களவைக்கு 14 இடங்களில் வெற்றி பெற்றோம். நாம் அரசியலைக் குற்ற மயமாக்குவதை மிகக் கடுமையாக எதிர்த்தோம். மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமலாக்குவதை ஆதரித்தோம். ஆனால், தாராளமயக் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டதால் அரசியல் சூழலில் வெகு முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன.

4. தாராளமயமாக்கலைத் தொடர்ந்து, தனியார்மயமாக்கல், வாக்கு வங்கிகளைத் துண்டாடுதல், மிகச் சிறிய அளவிலான குடும்பங்கள், தன்னைப் பற்றியே சிந்திக்கும் தனித்துவம் ஆகிய கூறுகள் ஆதிக்கம் செலுத்த தொடங்கின. இவை நமது தொழிற்சங்கங்கள், விவசாய சங்கங்கள் விவசாய தொழிலாளர் சங்கங்கள் ஆகியவற்றின் பலத்தைக் குறைத்தன. சமூக இயக்கங்கள், அவை இருக்கும் இடத்தில், ஒன்றுக்கொன்று தனிமைப்படுத்தப்பட்டன.

5. தற்போதைய சூழ்நிலையில் வலுவான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேவைப்படுகிறது. கவனம் திசை மாறுவது, அன்னியப் போக்குகள், மற்றும் பலவீனங்கள் இவற்றை கட்சி எதிர்கொண்டு வெல்ல வேண்டும். அதற்கு அனைத்து மட்டங்களிலும் கட்சி அமைப்புகளில் முக்கிய, தேவையான மாற்றங்களை

கொண்டு வர வேண்டும். அதனால் மக்களிடம் கட்சிக்கு மறு இணைப்பு ஏற்படும். மக்கள் பிரச்சினைகளில் வேர் மட்டத்திலிருந்து இயக்கங்களை கட்டவும், அடித்தளத்தோடு கட்சியை வலிமைப்படுத்தவும், அரசியல் வளர்ச்சி போக்குகளில் வலிமையோடும் திட்டங்களோடும் கொள்கை வழிப்பட்டும் தலையிடவும், எந்த இடரையும் முகத்துக்கு நேர எதிர் கொள்ளும் திறனையும் நமது கட்சி அடையும்.

6. கட்சி தனது அரசியல்சித்தாந்த பணிகளை தீவிரப்படுத்த, மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டத்துடனும் உயர்தரமான போதனைகளோடும் மார்க்சிய உணர்வுகளை நமது கட்சி உறுப்பினர்களின் அனைத்து பகுதிகளிடமும் மக்களிடமும் கொண்டு செல்ல பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

7. கட்சியை அரசியல் ரீதியாகசித்தாந்த ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் வலுப்படுத்துவதன் மூலம் நாம் பரந்த அடிப்படையிலான போர்க்குணமிக்க இயக்கங்களை நடத்துகிற நிலையை அடைவோம். இது சவாலானதுதான். நமது வளர்ச்சியையும் சரிவையும் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், உழைக்கும் மக்களின் விடுதலைக்கான போராட்டங்களில் தலைமையேற்று நம்மாளான மிகச்சிறந்த பங்களிப்பை தந்திருக்கிறோம். நமது கட்சியின் நூற்றாண்டை வருகிற 2025 ல் கொண்டாடப் போகிறோம். உருவாகிற பிரச்சினைகளை அடையாளம் கண்டு, சுரண்டப்படுபவர்களை ஒருங்கிணைத்து, அவர்களை அரசியல் படுத்தி, நமது பிரகடனப்படுத்தப்பட்ட இலக்கான சோஷலிசத்தை நோக்கி அவர்களை அழைத்துச் செல்வதற்கு, அரசியலில் நமது தலைமைப் பங்கை மீட்டெடுக்க வேண்டிய அவசியம் வந்திருக்கிறது.

## இடது ஒற்றுமை பற்றி

தொழிலாளி வர்க்க மற்றும் இதர உழைக்கும் மக்களின் அடிப்படை நலன்களை பாதுகாப்பது இடதுசாரிகளில் கடமை என்பதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெளிவாக இருக்கிறது. வர்க்கச் சுரண்டலுக்கு, சாதிய பாகுபாடுகளுக்கு, பால் இடைவெளிக்கு எதிரான போராட்டங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இவைதான் ஆர்எஸ்எஸ்க்கு எதிரான நமது கருத்தியல் போராட்டத்தின் அடிப்படைகள் ஆகும்.

பிஜேபி அரசாங்கம், பாசிச சித்தாந்தத்தை தனக்கான கொள்கையாக வரித்துக் கொண்டிருக்கிறது அதனை எதிர்த்து போராடி தோல்வியடையச் செய்வது இடதுசாரிகளின் வரலாற்று கடமையாகும். இந்தப் பார்வைத் தெளிவோடு, இடது ஒற்றுமை என்ற பதாகையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உயர்த்திப் பிடிக்கிறது. இந்திய அரசியலில் ஒரு வலிமை வாய்ந்த சுயேச்சையான தூணாக இடதுசாரிகள் வலிமை பெறுவதற்கு, இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்ட் இயக்கங்கள் கோட்பாடு அடிப்படையில் ஒன்றுபடுவது இந்தக் காலத்தின் தேவை என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நம்புகிறது. இந்த ஒற்றுமை அர்ப்பணிப்பும் அர்த்தமும் உள்ள பங்களிப்பைச் செய்ய இடதுசாரிகளுக்கு உதவுவதோடு, மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளை ஒரு விரிந்து பரந்த கூட்டணியாக கட்டுவதற்கு மட்டுமின்றி, சமூக விடுதலைக்கான போராட்டங்களையும் வலிமை பெறச் செய்யும்.

## ஆர்எஸ்எஸ்/பிஜேபி அரசுக்கு எதிரான தேசபக்த சக்திகளின் பரந்த ஒற்றுமைக்காக

1. பிஜேபி/என்டிஏ யின் தவறான ஆட்சி நாட்டை ஆழ்ந்த நெருக்கடியில் ஆழ்த்தியுள்ளது. நமது நாட்டு மக்களின் மீதான வகுப்புவாத பாசிசத் தாக்குதல்கள், மதச்சார்பற்ற ஜனநாயகக் கட்டமைப்பை, சுதந்திரத்தை, நாட்டின் ஒற்றுமையை கடுமையாக பலவீனப்படுத்தி, நமது நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்தை ஏற்படுத்தி உள்ளன.

2. இந்தச் சூழலில் அனைத்து மதச்சார்பற்ற, ஜனநாயக, இடதுசாரி கட்சிகளின் பரந்த கூட்டணியை உருவாக்குவது அவசரத் தேவை. அதன் மூலம் தான், மத்தியில் சில மாநிலங்களிலும் இருக்கிற பிஜேபி/என்டிஏ ஆட்சிக்கு எதிராக ஒரு மதச்சார்பற்ற ஜனநாயக மாற்றை உருவாக்க இயலும்.

3. இந்த இலக்கை நனவாக்க, இடதுசாரி சக்திகள் அணி சேர்ந்து, போர்க்களம் கண்டு வெகுஜன போராட்டங்களை நடத்தி விரிவு படுத்துவதன் மூலம், ஜனநாயக மதச்சார்பற்ற தேசபக்த சக்திகளை ஒருங்கிணைத்து, வலுவான மாற்று சக்தியை உருவாக்கி, சமூகத்துக்குள் புகுந்து தமது விஷம் தோய்ந்த செயல் திட்டத்தை ஏற்றுவதோடு. தொடர்ந்து ஆட்சியிலும் இருக்கிற வகுப்புவாத, பாசிச சக்திகளைத் தோற்கடிக்க முடியும்.

# நமது அரசியல் உத்திகள்

1. தற்போதுள்ள சிக்கலான சூழ்நிலையில் நமது அரசியல் உத்திகளைப் பற்றி விவாதிக்கும் போது, மதச்சார்பின்மை, ஜனநாயகம், சமூக நீதி, சோசலிச செயல்திட்டங்கள் ஆகியவை பாதுகாக்கப்படுகிற விழுமியங்களை கொண்டு அனைத்து முற்போக்கு சக்திகளையும் ஒரு புதிய இந்தியாவுக்கான போராட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அணி திரட்ட வேண்டும். இந்திய விடுதலை இயக்கத்தின் கனவுகளை நிறைவேற்றுவதற்கு சமரசமற்ற அர்ப்பணிப்பு உள்ள போராட்டங்கள் தேவைப்படுகின்றன. முற்றிலும் முடிவான இந்தப் போராட்டங்களில் மூலம் தான் நமது தேசத்தின் தலைவிதி நிர்ணயிக்கப்பட இருக்கிறது.

2. அரசியல் கட்சிகள், வெகுஜன மற்றும் வர்க்க அமைப்புகளின் பரந்த ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதை நாம் இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். ஆர்எஸ்எஸ்பிஜேபி ஆகியவற்றின் விஷம் தோய்ந்த, தீர்க்கமான கொள்கைகளை எதிர்த்து, நமது அரசியலமைப்பைப் பாதுகாப்பதற்கான ஒன்றுபட்ட, ஆழமான போராட்டங்களை நடத்த வேண்டும்.

3. மோடி அரசு மற்றும் ஆர்எஸ்எஸ் பாசிச தாக்குதலையும் புதிய தாராளமய கொள்கைகளையும் எதிர்த்து நமது கட்சி தனிப்பட்ட முறையில் போராட்டங்கள் நடத்துவதோடு, இதர கட்சிகளோடு சேர்ந்து போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். கட்சி இடதுசாரி ஒருங்கிணைப்பை வலிமைப்படுத்தவும், கட்டுக்கோப்பான வெகுமக்கள் போராட்டங்களை நடத்தவும் வேண்டும். அது நாளடைவில் இதர அரசியல் கட்சிகள் எதிரான மற்றும் வர்க்க அமைப்புகள் சமூக இயக்கங்கள் ஆகியவை இணைந்து பெரிய போராட்டங்களாக மாறுவதற்கான சூழல்களை ஏற்படுத்தும்.

4. தேர்தல் உத்திகளைப் பொறுத்தவரையில் 23 வது கட்சி பேராயம் எடுத்த முடிவு இப்போதும் பொருத்தமானதாகவே உள்ளது. இந்தியா முழுமைக்கும் ஒரே உத்தி இருக்க முடியாது என்பதைத் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் ஆர்எஸ்எஸ்பிஜேபி கூட்டை அரசு அதிகாரத்தில்

இருந்து வெளியேற்றுவது தான் நமது முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். தேர்தல் உத்தி என்பது அவ்வப்போது கட்சி தேர்தல்களை சந்திக்கும்போது வகுக்கப்பட வேண்டும். மாநிலங்களில் இத்தகைய உத்திகளை வகுக்கும்போது, சம்பந்தப்பட்ட மாநிலத்தில் அன்றைய அரசியல் புறச் சூழலையும், அரசியல் சக்திகளின் கூட்டுறவையும் கணக்கில் கொண்டு, நட்பு கட்சிகளுக்கு இடையிலான வாக்குகள் பிரிந்து போகாத வகையில் தவிர்க்க வேண்டும். ஒரு மதச்சார்பற்ற ஜனநாயக மாற்றைக் கட்டியமைக்கும் நமது பயணத்தோடு சேர்த்து, நமது கட்சிக்கு சட்டப்பேரவைகள் மற்றும் நாடாளுமன்றத்தில் உரிய பிரதிநிதித்துவம் கிடைப்பதை உறுதி செய்வதாகவும் நமது தேர்தல் உத்திகள் அமைய வேண்டும். தேர்வு செய்யப்பட்ட அமைப்புகளில் நமது பிரதிநிதித்துவம் என்பது, பஞ்சாயத்துகள் மற்றும் இதர உள்ளாட்சிகளில் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெறுவதில் இருந்து துவங்க வேண்டும். (5 என்ற பத்தி மூலத்தில் இல்லை)

6. நமது போர்க்குணமிக்க வெகுஜன இயக்கங்கள் அனைத்தும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இடதுசாரி மற்றும் ஜனநாயக இயக்கங்களை வலிமைப்படுத்தி, பிஜேபியை ஆட்சி அதிகாரத்திலிருந்து அகற்றுவதாகவும், நமது அடிப்படை இலக்கான ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்வதற்கான கடமைகளை நோக்கி முன்னேறுவதாகவும் அமைய வேண்டும்.

## எதிர்காலப் பணிகள்

1. கோவிட்19 நெருக்கடியானது நமது சமூகத்தை உலுக்கியிருக்கிறது, மேலும், நமது சுகாதார உள்கட்டமைப்பு தனியார் துறையை அதிக அளவில் நம்பியதன் காரணமாக எவ்வாறு புகைந்து போனது என்பதையும் நாம் பார்த்தோம். பெருந் தொற்று காலத்தில் ஏற்பட்ட கல்வி இடைவெளி, ஆன்லைன் வகுப்புகள் கல்வி மேலதிகமாக தனியார் மயப்படுத்துவது ஆகியவற்றால் மிகப் பலரின் தொலைதூரக் கனவாக கல்வி மாறிக் கொண்டிருக்கிறது. கிராமத்தில் நிலமற்ற விவசாயிகள் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இந்தியா முழுமையிலும் இத்தகைய கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் மோசமாகிறது. நிலமின்மையும் புலம்பெயர்தலும் சேர்ந்து சிக்கலாகி வீடு, வேலையின்மை ஆகிய சிக்கல்கள் மிகவும் ஆழமாகின்றன.

உலக பட்டினி குறியீட்டில் இந்தியா கடைசிப் பதினைந்து நாடுகளில் ஒன்றாக இருக்கிறது. தரவரிசை பட்டியலில் மோடி ஆளும் இந்தியா சரிந்து கொண்டே செல்கிறது. பொது சுகாதாரம், பொதுக்கல்வி, வீட்டு வசதி, வேலை வாய்ப்பு ஆகியவற்றை நமது நான்கு தூண் செயல் திட்டமாக உருவாக்க வேண்டும்.

2. பொது பள்ளிகள், கல்லூரிகள், பொது மருத்துவமனைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான போராட்டங்களுக்கு நமது கட்சிக் கிளைகள் தலைமை தாங்க வேண்டும். பொது பள்ளிக்கூடங்கள் மருத்துவமனைகள் ஆகியவற்றுக்கு அடிக்கடி நேரில் சென்று பார்த்து அவை எவ்வாறு இயங்குகின்றன என்பதை மதிப்பிட வேண்டும். தரமான மருத்துவம் கல்வி ஆகியவற்றை வலியுறுத்துவதற்காக மக்களை ஒன்றிணைத்து வட்டார அளவிலான குழுக்களை கட்டி அமைக்க வேண்டும் அதன் மூலம் அவர்களுடைய உரிமைகளைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, தனியார் பங்களிப்பு என்ற பெயரில் அரசாங்கம் தனது பொறுப்பை எவ்வாறு கை கழுவுகிறது என்பதையும் அவர்கள் அறியச் செய்ய வேண்டும். கிளை அளவிலான இந்த நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் சமூகத்தோடு ஒட்டி உறவாடுகிற நோக்கத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

3. வீட்டுவசதி என்பது உடனடி கவனம் தேவைப்படும் ஒரு முக்கிய பிரச்சினை. கிராமப்புறங்களில் நிலங்கள் சின்னஞ்சிறு துண்டுகளாக மாறிப் போவதும், வேலையின்மையும் சேர்ந்து, மக்களை வேலை தேடி நகரங்களை நோக்கி தள்ளுகிறது. இந்த தொழிலாளர்கள் பெரும்பாலும் அன்ஸ்கில்டு அல்லது செமிஸ்கில்டு தொழிலாளர்களாக இருக்கிறார்கள் அவர்கள் அமைப்பு சாராத பணிகளில் மிகக் குறைவான கூலிக்கு வேலை பார்க்கிறார்கள். இவர்களுக்கு குடியிருப்பதற்கான வீடு என்பது மிகக் கடுமையான பிரச்சினையாகும். தங்களது வேலையில் ஈடுபட்டு உற்பத்தி எடுக்கும் காலங்களில் எல்லாம், அவர்கள் நடைபாதைகளிலும், சந்தைகளிலும், எப்போதும் தூக்கிச் செல்லத்தக்க கூடாரங்களிலும் தங்கிக் கழிக்கிறார்கள். சுகாதாரமற்ற மருத்துவ வசதி இல்லாத நிலை, அவர்களது உற்பத்தி திறனையும் வாழ்நாளையும் பெரிதும் சேதப்படுத்துகிறது. பல லட்சக்கணக்கான மக்களுக்கு நான்கு சுவர்களும், தலைக்கு மேல் ஒரு கூரையும் கிடைக்காமல்

வாடுகிறார்கள். கிராமப்புறங்களிலும், நகர்ப்புற மற்றும் நகரப் பகுதிகளிலும் உள்ள இத்தகைய தொழிலாளர்களை அணிதிரட்டி அவர்களுடைய கோரிக்கைகளை நாம் எழுப்ப வேண்டும்.

4. நாட்டின் மிகப் பல பகுதிகளில் நிலம் கிடைக்கவில்லை என்பது பெரும் பிரச்சினையாக உள்ளது. கூர்மையான வேலையின்மை, கிராமப்புறத்தில் உள்ள பெரும்பகுதியான மக்களை மிகக் கடுமையான வறுமைக்கு தள்ளி இருக்கிறது. மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டத்தை அமலாக்குவது, மாநிலத்துக்கு மாநிலம், வட்டாரத்துக்கு வட்டாரம் மாறுபடுகிறது. இந்த திட்டம் சரியான முறையில் அமலாக்கப்படுகிறதா என்பதை நமது ஊழியர்கள் மதிப்பிடவும், அந்த வேலைகளை செய்யும் கிராமப்புற மக்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு அவர்களுக்கான நல்ல சம்பளம், பாதுகாப்பு, வேலை வாய்ப்புக்களை அதிகப்படுத்துதல் ஆகிய முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். விவசாய தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை அமலாக்க செய்ய வேண்டும் என்பதும் நிலச் சீர்திருத்தமும், நமது முன்னுரிமை பெற்ற கோரிக்கைகளாக இருக்க வேண்டும். தனியார் துறையிலும் இட ஒதுக்கீட்டு கொள்கையை அறிமுகப்படுத்தி சமூகநீதியையும், பிரதிநிதித்துவத்தையும் உறுதி செய்ய வேண்டும் என அரசுக்கு நாம் அதிக அழுத்தம் தர வேண்டும்

5. கட்சி தொடங்கிய காலத்தில் இருந்து தொழிற்சங்கம் அதன் முதுகெலும்பாக இருந்து வருகிறது. நாடு முழுமையிலும் வலை பின்னலாக இருக்கும் நமது தொழிற்சங்கங்கள் இன்னும் வலுப்பட வேண்டும். இன்னும் பல துறைகளுக்கு பரவ வேண்டும். குறிப்பாக எந்த வேலை பாதுகாப்பும் இல்லாமல் உருவாகியுள்ள புது தொழில்களில் தொழிற்சங்கப் பணி விரிவுபடுத்தப்பட வேண்டும். தனியார் துறைக்குள் தொழிற்சங்கம் உள்நுழைந்து, சமூக பாதுகாப்பு, சமூக நீதிக்கான கோரிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். நல்ல சம்பளம் மற்றும் இதர உரிமைகளுக்கான நமது போராட்டங்கள் அவசியமானவை. ஆனால், அவற்றின் மூலமாக தொழிலாளர்களை அரசியல் படுத்துவது என்பது முதன்மை முன்னுரிமை பெறுகிறது. அன்றைய முக்கிய பிரச்சினைகள் மீது கருத்தரங்குகள், படிப்பு வட்டங்கள்,

கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும். அதன் மூலம் தொழிலாளி வர்க்கத்தை அரசியல் முனைப்போடு வைத்திருக்க வேண்டும்.

6. சில பகுதிகளில் நமது கட்சி மக்களவை மற்றும் சட்டப்பேரவை தேர்தலின் போது மிகவும் சுறுசுறுப்பாக இருந்துவிட்டு, அதற்கு பின்னர் நீண்ட காலத்திற்கு உறக்க நிலைக்கு சென்று விடுகிறது. தேர்தல்கள் என்பவை ஏதோ தற்காலிகமான இடைக்கால நடவடிக்கைகள் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஏற்கனவே கூறியதைப் போல நம்மைப் போன்ற ஒரு புரட்சிகர கட்சி, தேர்தல் ஆதாயங்களை பெற வேண்டுமானால் நமது மக்களோடு உயிருள்ள தொடர்பை வைத்திருக்க வேண்டும். அவர்களை அணிதிரட்டுவதன் மூலமும், அவர்களுடைய வாழ்வாதாரத்துக்கான போராட்டங்களுக்கு தலைமை ஏற்பதன் மூலமும் தான் அந்த மக்கள் தொடர்பு நமக்கு கிடைக்கும். அவ்வாறு இல்லாமல் தேர்தல் பரப்புரைகள் செய்வது மட்டும் நமக்கு சாதகமான பலன்களைத் தராது. நம்மைச் சுற்றியுள்ள மக்களின் நிஜமான பிரச்சினைகளைக் கண்டறியவும், அவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி தீர்வு காணவும் வேண்டும். அதற்காக மக்களுடனான நமது தொடர்பு உயிரோட்டம் மிக்கதாகவும், தொடர்ச்சியானதாகவும் இருக்க வேண்டும். மக்களுடைய ஆதரவு மேலும், பெருகுவதன் மூலமாகத்தான் நம்மால் ஒரு பொருத்தமான தேர்தல் உத்தியை உருவாக்க முடியும்.

7. தேர்தல் நோக்கங்களுக்காக குறிப்பிட்ட தொகுதிகளை குறி வைத்து வேலை செய்ய வேண்டிய தேவை உள்ளது. எந்தத் தயாரிப்பும் இல்லாத நிலையில் ஏராளமான எண்ணிக்கையில் போட்டியிடுவதால், எவ்வித பலனும் ஏற்படாது. மாறாக அமைப்பை பற்றிய நம்பிக்கையின்மையை ஏற்படுத்திவிடும். ஒவ்வொரு மாநிலத்திலும் நமக்கான நாடாளுமன்ற, சட்டப்பேரவை மற்றும் உள்ளாட்சி தொகுதிகளை அடையாளம் காண வேண்டும். அந்தப் பகுதியின் தனிப் பிரச்சினைகளை முன்னதாகவே உணர்ந்து, அவற்றுக்கு தீர்வு காண பன்முகப்பட்ட வழிகளில் முனைய வேண்டும். அது நமது ஆதரவு தளத்தை அதிகப்படுத்தும். ஜனங்களோடு மறு இணைப்பை உருவாக்க வேண்டும்.

8. வருகிற 2024 பொதுத்தேர்தலில் நமது நாட்டின் எதிர்காலத்திற்கும் அரசியல் அமைப்புக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். ஆட்சிப் பொறுப்பில் இருந்து ஆர்எஸ்எஸ்

பிஜேபியை அகற்றுவது நமது முதலாவது இலக்காகும். ஆர்எஸ்எஸ்பிஜேபியின் பேரழிவு நடைமுறைகளை மக்களிடம் தோலுரித்துக் காட்ட எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும். இதற்கான திட்டங்கள் மற்றும் உத்திகளை கட்சி தனித்தும் இதர மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளோடு இணைந்து வகுக்க வேண்டும்.

9. பஞ்சாயத்து ராஜ் முறை என்பது அதிகாரத்தை பரவலாக்கவும் அடிமட்டம் வரை ஜனநாயகத்தை எடுத்துச் செல்வதற்குமாக மக்கள் நடத்திய போராட்டத்தின் மிகப்பெரிய வெற்றியாகும். கிராமப்புறத்தில் நிலைத்த தன்மை கொண்ட மேம்பாடுகளை கொண்டு வரவும், வேலைவாய்ப்பை உற்பத்தி செய்யவும், வறுமையை அழிக்கவும் உள்ளாட்சி அமைப்புகள் பெருமளவு பங்களிப்பை செலுத்த முடியும். இந்த திட்டங்களை உருவாக்குவதிலும், செயல்படுத்துவதிலும் தமக்கு உள்ள பங்களிப்பை கிராமப்புற மக்கள், விரக்தியின் காரணமாக வீணடிக்கிறார்கள். அதிகார வர்க்கமும் உள்ளூர் மேல்தட்டு ஆதிக்க சக்திகளும் தமக்குள் கூட்டு ஏற்படுத்திக் கொண்டு, உள்ளாட்சி அமைப்பின் தன்மையை பாழ்படுத்தி வருகிறார்கள். பஞ்சாயத்து ராஜ் முறையை வலிமைப்படுத்துவதற்கு செயலூக்கம் கொண்ட தலையீடுகளை நாம் செய்ய வேண்டும். கிராம சபைகள் மற்றும் பஞ்சாயத்துகளை, அனைத்து மட்டங்களிலும் காப்பாற்றவும் அவை மதிக்கப்படவும் நமது கட்சி போராட வேண்டும்.

10. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளுக்கும் அடுத்த நாட்டின் மீதான தலையீடுகளுக்கும் எதிராக இந்திய மக்களை நமது கட்சி அணி திரட்டி எதிர்க்க வேண்டும். இத்தகைய ராணுவக் கூட்டு அல்லது பங்களிப்பு எதிலும் இந்தியா சேர்வதை நாம் எதிர்க்கிறோம். பாலஸ்தீனம், கியூபா, வெனிசுலா, சிரியா, கொரிய மக்கள் ஜனநாயக மக்கள் குடியரசு மற்றும் இதர நாடுகளில் மக்களுக்கு நாம் அளித்த ஒருமைப்பாட்டை தொடர்கிறோம். அதே நேரத்தில் இந்தியாவுக்கான ஒரு சுயேச்சையான வெளிநாட்டு கொள்கை வேண்டும் என்று நாம் போராடுவோம

11. உலகம் முழுமையிலும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும், தொழிலாளர் கட்சிகளுக்குமான ஒருங்கிணைப்பு வளர்ந்து வருவது இந்த காலத்தில் முக்கியமான சாதனைகளில் ஒன்றாகும். துணை மண்டல, மண்டல, உலக அளவிலான

ஒத்துழைப்பின் பல்வேறு வடிவங்கள் ஏற்கனவே இருக்கின்றன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அத்தகைய உலக அளவிலான கூட்டங்களில் பங்கேற்பதோடு, சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தை வலுப்படுத்துவதற்கு தன்னாலான அனைத்து பங்களிப்புகளையும் செய்யும்.

12. நிகழ்காலத்தில், நாட்டில் நிலவும் அரசியல், பொருளாதார, சமூகச் சூழலில் மார்க்சிய லெனியத்தை மிகச் சிறந்த முறையில் பொருத்துவதற்கு உரிய ஆய்வுகளை கட்சி முன்னெடுக்கும்.

13. இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்ட் இயக்கத்தை மீண்டும் ஒற்றுமை படுத்துவதற்காக கோட்பாடு அடிப்படையிலான எல்லா முயற்சிகளையும் கட்சி மேற்கொள்ளும்

14. நாட்டின் அரசியல் சந்தித்து வரும் அபாயங்களை கவனத்தில் கொண்டு, இந்திய மக்களுடன் உள்ள நமது இணைப்பை உறுதி செய்ய வேண்டும். ஆர் எஸ் எஸ்/ பிஜேபி வலது சாரி தாக்குதலைத் தோற்கடிக்க, எதிர்த்து நிற்க ஒரு முக்கியமான இடதுசாரி இருப்பு இந்த நாட்டுக்கு தேவைப்படுகிறது. அந்த நோக்கத்திற்காக நாம் நமது கட்சியையும் இதர வர்க்க வெகுஜன அரங்கங்களையும் வலிமைப்படுத்தியாக வேண்டும். அரசியல் ரீதியாக வகுப்புவாத எதேச்சதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தை, இடதுசாரிகளுக்கும் வலதுசாரிகளுக்கும் இடையிலான போராட்டமாக மாற்ற வேண்டுமானால் அதற்கு வலிமை உள்ள கட்சி உருவாகும் வகையில் நமது நடவடிக்கைகள் அமைய வேண்டும். ஆர் எஸ் எஸ்ஸின் சித்தாந்த ரீதியான சவால்களை இடதுசாரிகள் மட்டும்தான் எதிர் கொள்ள முடியும். நாம் இதற்கான போராட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். நாட்டுக்கான ஆக்கபூர்வமான மாற்றுத்திட்டத்தை எடுத்துச் செல்ல ஒரு வலிமையான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்த காலத்தினுடைய தேவையாக அமைந்திருக்கிறது.

15. நாம் நம்முடன் ஒத்த கருத்துள்ள அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களை ஒன்று சேர்த்து, மதச்சார்பற்ற சமூக நீதி சமத்துவ கொள்கைகள் அடங்கிய விரிவான செயல் திட்டத்தை வழி நடத்த வேண்டும். ஆர்எஸ்எஸ் பிஜேபி செயல்திட்டம் மற்றும் முன்னுரிமைகளுக்கு எதிரான சித்தாந்த அடித்தளத்தை

இந்த கூட்டு கொண்டிருக்க வேண்டும். அதன் மூலம் தான் தற்போதுள்ள பிஜேபி அரசு மாற்றியமைக்க உரிய மாற்று கூட்டமைப்பை உருவாக்க முடியும்

16. ஆகவே,

1) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை வலிமைப்படுத்துக

2) இடது ஒற்றுமையை ஒருங்கிணைத்திடுக

3) பிஜேபி /ஆர்எஸ்எஸ் கூட்டை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்காக முற்போக்கு சக்திகளின் விரிவான கூட்டணியை கட்டி அமைத்திடுக.

4) சோசலிசத்தை எட்ட, சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற புரட்சிகரமான நமது செயல் திட்டத்தை நோக்கி செல்வதற்கு,வாழ்வாதார பிரச்சினைகள் மீதான வெகுஜன போராட்டங்களை மேலும் ஆழப்படுத்துக என 24 வது கட்சிப் பேராயம் அறைகூவல் விடுக்கிறது.

* * *